நகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 29 சனிக்கிழமை (13.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 107

## போர் முடிந்த பின்னரும் கட்டுப்பாடுகள் ஏன்?

# இங்குள்ள அவசரகால நிலைமையை நீக்கக் கோருகிறது கனேடிய அரசு

## இலங்கைத் தூதுவரை நேரில் சந்தித்து வலியுறுத்து


தீபக் ஒப்ரோய்

ஒட்டாவா,மார்ச்13

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்துவிட்டதால், அவசரகால நிலைமையை நீக்குமாறு இலங்கை அரசைக் கோரியுள்ள கனடா, மோதல் முடிவுக்கு வந்துவிட்டதால் கட்டுப்பாடுகள் மற்றும் கெடுபிடிகளைத் தொடர்வதற்கான நியாயப்பாடுகள் ஏதும் இல்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)


சித்ராங்கனி வாகீஸ்வர

## கூட்டமைப்புத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானது

# இணைந்த வடக்கு—கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் தீர்வு

### திம்புக்கோட்பாடுகளும் வற்புறுத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச்13

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் அதிகாரப் பங்கீடு வழங்கப்படவேண்டும். அது, தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு தற்போதைய பொதுத் தேர்தலை ஒட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் தனித்துவமான தேசிய இனம், தொடர்ச்சியான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அந்த மக்களின் வரலாற்றுப் பூர்வமான

(24ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலைக்குச் சகல இடங்களில் இருந்தும் இன்று விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச் 12

கீரிமலையில் இன்று இடம்பெறவுள்ள சிவராத்திரி நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பக்தர்களின் வசதி கருதி குடாநாட்டின்

**உள்ளே விளம்பரதாரரின் மகா சிவராத்திரி இணைப்பு**

சகல பகுதிகளில் இருந்தும் பஸ் சேவைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களில் இருந்து கீரிமலைக்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் 22 முதல் விநியோகம்

கொழும்பு,மார்ச்13

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது எனத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதம் உருவான காரணங்களை ஆராய்ந்து கண்டறிய விசேட குழுவாம்

### ஜனாதிபதி விரைவில் நியமிப்பார் எனத் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்13

இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினை ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் மற்றும் இனிமேல் அப்படியானதொரு நிலைமை ஏற்படாதிருக்கப் பின்பற்ற வேண்டிய விடயங்கள் ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளார் என்று மனித உரிமைகள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தனுன கடல் வழியாகத் தப்பியோடத் திட்டமா? இந்திய மீன்பிடிக் கப்பலொன்று தடுத்துவைப்பு!

### கப்டன் உள்ளிட்ட அதன் பணியாளர்கள் விளக்கமறியலில்

கொழும்பு,மார்ச் 13

தங்கால கடற்படை அதிகாரிகளால் இந்திய மீன்பிடிக் கப்பலொன்று தடுத்துவைக்கப்பட்டுள்ளமை காரணமாக இலங்கை - இந்திய நல்லெண்ண உறவு பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்ன கப்பலொன்றின்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா சார்பில் ஆள்கொணர்வு மனு!

கொழும்பு,மார்ச்13

இராணுவக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

ஜெனரல் பொன்சேகாவின் துணைவியார் அனோமா பொன்சேகாவை மனுதாரராகக் குறிப்பிட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சட்டங்கள் மீறப்பட்ட 66 சம்பவங்கள்

கொழும்பு,மார்ச்13


தேர்தல் சட்டங்கள் மீறப்பட்ட 66 சம்பவங்கள் இதுவரை பதிவாகியுள்ளன என தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டும் தேர்தல் சட்டம் மீறப்பட்ட 12 சம்பவங்கள் ஒருநாளில் பதிவாகியுள்ளன என அவர் மேலும் கூறினார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு

(24ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, பரந்தன் மக்கள் கைவிடப்பட்ட தங்களின் உடைமைகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை

## அங்கு சென்றுள்ள ஐ.தே.க. வேட்பாளர் துவாரகேஸ்வரன் படையினருடன் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 13

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது வாழ்வாதார உடைமைகளை மீட்டுத்தரு மாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று அங்கு விஜயம் மேற்கொண்ட ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் தி.துவாரகேஸ்வரனிடமே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் மீள்குடியேறியுள்ள மக்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இடம்பெயர்ந்தவேளை முள்ளிவாய்க்கால் பகுதியில் தங்க ளால் கைவிடப்பட்ட வீட்டுப்பொருள்கள், வாகனங்கள், கால் நடை கள் ஆகியவற்றை தங்களுக்கு மீட்டுத் தருவதற்கான தகுந்த ஏற்பாடு களைச் செய்து உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக வன்னியின் படை உயர் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருடன் தாம் கலந்துரையாடியதாகவும் ஓரளவு சாதகமான நிலை எட்டப்பட்டுள்ளதாகவும் இரண்டாம் கட்டமாக இன்றும் பேச்சு நடத்தப்போவதாகவும் வேட்பாளர் துவாரகேஸ் வரன் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-1)

## யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும்

# போக்குவரத்துச் சபை பஸ்கள் பூநகரியூடாக கேதீஸ்வரத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன், பூநகரி ஊடாக திருகே தீஸ்வரத்துக்கு பஸ்சேவை நடத்த போக்குவரத்துச் சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரத்தில் இன்று நடைபெறும் சிவராத்திரி நிகழ் வுகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பூநகரிப்பாதை ஊடாக பஸ் சேவை நடத்தப்படுவதால், பக்தர் கள் குறுகிய நேரத்தில் திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடைய முடி யும்.

இன்று காலை 6 மணி முதல் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து பஸ்கள் புறப்படும் என்றும் - பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் போக்கு வரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்கள் உற்சவம் முடியும் முன்பே யாழ்பாணத்துக்கு திரும்ப வசதி செய்யப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஒ-1)


### சபை பாகுபாடற்ற போதகர், தேவ ஊழியர்களுக்கான TBN மாநாடு

இடம்: பாதுகாவலன் மண்டபம், 360, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.
காலம்: 19.03.2010
நேரம்: காலை 9 மணி - 1 மணிவரை
பிரதம பேச்சாளர்: சகோ.பிரியந்த சேனாபதிரட்ண (TBN இலங்கை, இந்திய பிரதிநிதி)
பதிவு செய்வதற்கான திகதி: 15, 16 (03.2010)
காரியாலய நேரம்: காலை 9.30 - 2.30
பதிவுக் கட்டணம் ரூபா 100/=
பிற்குறிப்பு:- (Christian Satellite TV செய்மதி இணைப்புக்களை பெறுவதற்கு ஒழுங்குசெய்து தரப்படும்)

இணைப்பாளர்,
தலைமைப்போதகர்
Rev லெஸ்லி ஜெ.மத்தியூஸ்,
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்.
T.P: 0777344265

தொடர்புகளுக்கு:
போதகர் செ.ஜெனோ
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
இல.89, பிறவுண் வீதி, கொக்குவில்.

(சி/565682)


## இளைஞர், யுவதிகள், மாணவர்களுக்கு தற்காப்புக் கலைப் பயிற்சி

### இராணுவ வீரர்கள் வழங்குகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 13

இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தற்காப்புக்கலைப் பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றது.

துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஒருதொகு தியினருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது பயிற்சி நாளை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும்.

இந்தப் பயிற்சியைப் பெறவிரும்புபவர்கள் நேரடியாக அங்கு வந்து பயிற்சியில் இணைந்து கொள்ளலாம் என பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வாரத்தில் வியாழன், ஞாயிறு ஆகிய நாள்களில் இந்தப் பயிற்சி இடம்பெறும் என்றும் -

முதலாவது பயிற்சியில் பங்கு பற்றியவர்கள் படையினருக்கு நன்றி தெரிவித்தனர் என்றும் - படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தற்காப்பு பயிற்சிகளை வழங்கு வதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துருசிங்க செய்துள் ளார். (ஒ-1)


### விற்பனைக்கு

சாவகச்சேரியில் உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு. (பெட்டியுடன்)
தொடர்பு: 0779927457, 0777374925


## கரப்பந்தாட்டம் திங்களன்று

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.கோட்டப் பாடசாலைகளின் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடை யிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதா னத்தில் இடம்பெ றும். (50-23)


### தவறிவிட்டது

தம்பையா பத்மநாதன் ஆகிய எனது (I.C 340680103 V), மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் சேமிப்பு புத்தகம் யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பா யிற்கு வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
தம்பையா பத்மநாதன்,
கேராளிவத்தை லேன், நீர்வேலி.

### தேவை

யாழ்.வணிக நிறுவனத்திற்கு பின்வரும் பதவிக ளுக்கு வேலையாள்கள் தேவை. விண்ணப்பங்கள் 17.03.2010 இற்கு முன் எதிர்பார்க்கப்படுகின்றன.
1. கணக்காய்வாளர்
2. பாரவூர்த்தி உதவியாளர் (Cleaners)
3. சமையல்காரர்
4. கூலியாள்கள் (வகுப்புத் தொழிலாளர்)
T.P: 222 9453
நிர்வாகம்.
யாழ்.வணிக நிலையம்,
336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், இராச வீதி, தோப்பு என்னும் இடத்தில் மூன்று பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளையும் உள்ளடக்கிய விசாலமான மாடி வீடு விற் பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0774312560

### காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 6 Km தூரத்திலும், நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3 ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மை யான குடிதண்ணீர் உள்ள, இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4¾பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண் டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்: 0776081693, 0772469015

### மணமகள் தேவை

1980ஆம் ஆண்டு, செவ்வாய் தோஷம் அற்ற, அவிட்டம் 2ஆம் பாதம் (மகரம்) Australian Citizen Ship பட்டதாரி BIT மணமகனுக்கு தாயார் அழகிய, படித்த மணமகளை எதிர்பார்க்கின்றார்.
தொடர்பு 0717472050, 0778840176


### காணவில்லை



மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த செல்லன் பூரணம் (வயது 72) கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையில் இருந்து காணவில்லை. தகவல் அறிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
(சி/565680) தொ.இல. 0771880897

### கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் தேவநிரோசன் அவர்களின் அன்புத் தந்தையார்
**க.தேவபிரியம் அழகராஜா**
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
(95856) நண்பர்கள், சுண்டுக்குழி.


### நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2010 யாழ்.மாவட்டம்



★ அசைக்கமுடியாத தமிழ்ப் பற்றும்
★ சமச்சீரான சமூக நோக்கும்
★ எவருக்கும் அடிமைப்படாத மன உறுதியும்
★ அப்பழுக்கற்ற அயராத சேவையும் கொண்ட

**ஆ.ந.இராசேந்திரன்**
Dip. in Accy, APFA, AMA, FMAAT
(சிரேஸ்ட கணக்காளர், முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபை)
அவர்களை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்வோம்.
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
யூனியன் கல்லூரி பழையமாணவர்கள்.
(சி/565679)

### Barnabas இன் அதிரடி மலிவு விற்பனை



40 % Special Offer 40 % கழிவுடன்....
21" Wega sony - ~~24000/=~~ - 18990 /=
21" Sony G21 (P1,P2,Q1,Q2) - ~~18000/=~~ - 14990 /=
IPL போட்டியைக் கண்டு களிக்க வாங்குங்கள் ஒரு T.Vயை
Life Time Free Service
5 வருட உத்தரவாதம்

பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217900728

மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச்சந்தி, மானிப்பாய்
தொ.பே: 021 7901574, 0777448668

### Hurry up ! Hurry up!! UNBELIEVABLE PRICES @ MUSIC WORLD

நம்ப முடியாத விலைகளில்...

**MWC OFF I** Rs.39,500/=
Intel 2.6GHZ Dual Core
Intel Esonic G31 Motharboard
Harddisk 40 GB Sata
Ram 1GB 800 DDR-II
ATX Casing 500W
DVD Writer
16" LCD Monitor
Multi Media Keyboard
Optical Mouse
Multi Media Speaker
Free issues: Headphone, Card Reader, Pen Drive

**MWC OFF II** Rs.43,500/=
Intel 2.7GHZ Dual Core
Intel AsRock G31 Motharboard
Harddisk 160GB Sata
Ram 1GB 800 DDR-II
ATX Casing 500W
Sony DVD Writer
16" LCD Monitor
Multi Media Keyboard
Optical Mouse
Multi Media Speaker
Free issues: Headphone, Card Reader, Web Camera

**MWC OFF III** Rs.53,500/=
Intel 2.7 GHZ Dual Core
Intel Foxconn G31 Motharboard
Harddisk 320 GB Sata SONY 24x
Ram 1GB 800 DDR-II
ATX Casing 500W
DVD Writer
19" LCD Monitor
Multi Media Keyboard
Optical Mouse
Multi Media Speaker
UPS 650 W
Free issues: Computer Table, Web Camera, Card Reader, Pen Drive

**MWC OFF IV** Rs.59,900/=
Intel 2.7 GHZ Dual Core
Intel G31 Motharboard
Harddisk 320 GB Sata SONY 24x
Ram 2 GB 800 DDR-II
ATX Casing 500W
DVD Writer
19" LCD Monitor
Multi Media Keyboard
Optical Mouse
Multi Media Speaker
UPS 650 W
Free issues: Computer Table, Computer Chair, Web Camera, Card Reader

**ADSL Routers**

| | |
|---|---|
| TP Link ADSL 1 port Router | 3,700.00 |
| TP Link ADSL 2 port Router | 3,800.00 |
| TP Link ADSL 4 port Router | 5,750.00 |

**Dongle**

| | |
|---|---|
| HSDPA Modem (SIM Model) 3 G D Link / Prolink (3.5 M ---> 7.2 M) | 8,750.00 |

**PAP2 LinkSYS**

| | |
|---|---|
| PAP 2 Link SYS (No.1 Green Light) | 7,500.00 |

**Web Cameras**

| | |
|---|---|
| AD Tech Web Camera | 1,500.00 |
| Web Camera (Normal) | 950.00 |

MasterCard VISA
கடனட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
விரையுங்கள் இச் சலுகை கையிருப்பு உள்ள வரை மட்டுமே
ASTRA AdMs "0718561250"

MUSIC WORLD & COMPUTERS 141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
musiccom27@yahoo.com / musicworld@sltnet.lk - 021 222 6554


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஊடகர்களுக்கு அரசின் அழைப்பு!

இலங்கை அரசின் எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிரான மேற்குலகின் கடும் நிலைப்பாடு வெளிப்படையாகத் தோற்றும் விவகாரம். அது மறைக்கப்படக்கூடியதல்ல.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட்ட ஐரோப்பிய நாடுகள் போன்றவை இலங்கையில் அதிகார வர்க்கத்தின் ஆசியுடன் அரங்கேறும் மனித உரிமை மீறல் செயற்போக்குக்கு எதிராகச் சீறத் தொடங்கிவிட்டன.

தைத்த ஆடைகளின் ஏற்றுமதி தொடர்பில் இலங்கைக்கு இதுவரை வழங்கி வந்த 'ஜி.எஸ்.பி.பிளஸ்' வரிச்சலுகையைத் துண்டித்து கொழும்பு ஆட்சி நிர்வாகத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் நல்ல பாடம் புகட்டியிருக்கின்றது.

பொதுநலவாய அமைப்புகளின் அடுத்த மாநாட்டைக் கூட்டும் தகுதியை இலங்கைக்கு வழங்க மறுத்ததன் மூலம் இலங்கை தொடர்பில் மேற்குலகின் கருத்து நிலைப்பாடு எத்தகையது என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

உலகத் தமிழர் பேரவையின் லண்டன் மாநாட்டில் இலங்கை அரசின் கடும் எதிர்ப்பையும் புறந்தள்ளி - உதாசீனப்படுத்திவிட்டு, பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் அதில் நேரடியாகப் பங்குபற்றி உரையாற்றியமையும், உலகத் தமிழர் பேரவைப் பிரதிநிதிகளை பிரிட்டிஷ் பிரதமர் கோல்டன் பிறவுண் நேரில் பிரசன்னமாகிச் சந்தித்துப் பேசியமையும், கொழும்பு அதிகார வர்க்கத்தின் செயல்போக்குத் தொடர்பில் பிரிட்டன் அரசின் கடும் நிலைப்பாட்டை வெளிப்படையாக அம்பலப்படுத்துகின்றன என்பது மறுக்கப்படக்கூடியதல்ல.

இதேபோன்று இலங்கையில் கடந்த வருடம் முடிவுற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது இடம்பெற்றவை எனக் கருதப்படும் சட்டவிரோத மனிதப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் என்பவை தொடர்பில் ஐ.நா.செயலாளர் நாயகம் அண்மைக்காலத்தில் பிரதிபலித்து வரும் கருத்துகளும் இலங்கை விடயத்தில் மேற்குலகின் போக்கும், பார்வையும் கடுமையாகித் தீவிரமடைந்து வருகின்றமையையே பிரதிபலித்து நிற்கின்றன.

இதேசமயம், ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் இலங்கையின் போக்குக்கு எதிரான கருத்து நிலைப்பாடுகள் அவ்வப்போது ஓங்கி ஒலிக்கத் தவறுவதில்லை.

எனினும், சீனா, ரஷ்யா போன்ற வல்லரசுகளையும் இந்தியா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளையும் பிற கிழக்குத் தேசங்களையும் கையில் போட்டுக்கொண்டிருக்கும் கொழும்பு ஆட்சிப்பீடம், அதன்மூலம் சர்வதேச மட்டத்தில் தனக்கு எதிரான கடும் நடவடிக்கைச் செயல்கள் முன்னெடுக்கப்படாமல் பார்த்துக்கொள்ளுகின்றது.

என்றாலும், அத்தகைய நிலைமையை நீடிக்க விடுவது தனக்கு ஆரோக்கியமானது அல்ல என்பது கொழும்புக்குத் தெரியும்.

எனவேதான், சர்வதேச கண்டனங்களுக்கும், அழுத்தங்களுக்கும், ஆட்சேபங்களுக்கும் காரணமான விடயங்களை உத்தேசமாகக் கையாண்டு சமாளிக்கும் எத்தனங்களையும் அது ஒருபக்கத்தில் ஆரம்பித்திருக்கின்றது.

அதில் ஒன்றுதான் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளருக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகள் பற்றிய குற்றச்சாட்டாகும்.

உலகில் ஊடக சுதந்திரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள முதல்பத்து நாடுகளில் ஒன்று என்ற கீர்த்தியை இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்த இந்த அரசு, இப்போது அதைச் சமாளிக்க முயற்சிக்கிறது.

அடக்குமுறை அட்டகாசங்களுக்கு அஞ்சி நாட்டைவிட்டுத் தப்பி ஓடி வெளிநாட்டில் வசிக்கும் ஊடகவியலாளர்களை நாட்டுக்குத் திரும்பி வருமாறு அரசு விடுக்கும் அழைப்பு இந்த வகையறாவைச் சேர்ந்ததுதான்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை அரசு சார்பில் பங்குபற்றி, கொழும்பு அரசின் கடந்த கால செயற்போக்குக்காக மேற்குலகின் சீற்றத்தை வாங்கிக் கட்டிக்கொண்ட இலங்கையின் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸே இந்த அழைப்பை இலங்கை அரசு சார்பில் வெளியிட்டிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாடு சென்ற ஊடகவியலாளர்கள் நாடு திரும்பும் பட்சத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அந்த உறுதியை நம்பலாமா என்பது வேறு விடயம். ஆனால் அத்தகைய உறுதி மொழியை வழங்கிய சட்டமா அதிபர் கடந்த காலங்களில் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் செய்யப்படும், குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்றெல்லாம் உறுதி கூறியிருக்க வேண்டும். அத்தோடு அவற்றைச் செயலில் வெளிப்படுத்திக் காட்ட நடவடிக்கையும் எடுத்திருக்க வேண்டும். அப்போதுதான் இவ்விவகாரத்தில் அவரதும், அவரது அரசினதும் உள்நோக்கம் - கருத்து - உண்மையானது என்று எவரும் நம்புவார்கள்.

சுமார் ஒன்றரை வருடத்தின் பின்னர் இப்போதுதான் - அரச அதிகார பீடத்தில் ஏற்பட்ட உறவு விரிசல் காரணமாகவோ என்னவோ - பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணையில் சிறிய முன்னேற்றம் காட்டப்படுகின்றது.

'உதயன்', 'சுடர் ஒளி'யின் திருகோணமலைச் செய்தியாளர் சுகிர்தராஜன் 2006ஜனவரியில் கொல்லப்பட்டமையில் இருந்து ஏழுக்கும் அதிகமான அந்நிறுவனங்களின் ஊழியர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. பல தாக்குதல்கள், அழிவுகள், இழப்புகளுக்கு அந்நிறுவனங்கள் முகம் கொடுத்திருக்கின்றன. ஆனால் அந்தக் கொடூரங்களுக்காக யாரும் இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவே இல்லை.

ஊடகவியலாளர் திஸநாயகத்திலிருந்து அநீதியை எதிர்கொண்ட பத்திரிகையாளர்களின் வரிசை மிக நீண்டது. கீத் நொயர், நாமல் பெரேரா என்று அந்தப் பட்டியல் தொடர்கின்றது.

இந்த அநீதிகளுக்கு எல்லாம் நியாயம் செய்ய முற்படாமல், வெளிநாட்டில் தஞ்சம் புகுந்த ஊடகவியலாளர்களை வெறுமனே மீள வரும்படி வாய் வாக்குறுதி கொடுத்து அழைப்பது அர்த்தமற்றது; நம்பிக்கை தருவதல்ல; நம்பக்கூடியதும் அல்ல.

# தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள முடியாமல் கிளிநொச்சி, முல்லைத்தீவில் கெடுபிடிகள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஸ்ரீதரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்13

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் அரசு சார்பான கட்சிகளின் வேட்பாளர்கள் சுதந்திரமாக நட்மாடி தேர்தல் பிரசாரம் செய்துவரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அங்கு நடமாடுவதற்கும் மக்களைச் சந்திப்பதற்கும் பல்வேறு கெடுபிடிகளை இராணுவம் விதித்து வருகிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சிவஞானம் ஸ்ரீதரன் குற்றச்சாட்டு.

தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது தொடர்பாக நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் கால செயற்பாடுகளை முடக்கும் விதமாக அரசு திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் அரசு சார்ந்த கட்சிகளின் வேட்பாளர்கள் சுதந்திரமாக நடமாடி தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் சுதந்திரமாக நடமாடவும், தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளவும் இரா ணுவத்தின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது.

அனுமதி பெறுவதற்கு என இராணுவ முகாமிற்குச் சென்றால், பல்வேறு கேள்விகள் கேட்கப்படுகின்றன. பெயர்கள் பதிவு செய்யப்படவேண்டும்.

முல்லைத்தீவுப் பகுதியில் அரசு சார்ந்த ஒரு கட்சியினர் மக்களிடம் படிவம் ஒன்றை வழங்கி தமது கட்சி அங்கத்தவராக இணையவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். அது மட்டுமன்றி, அவ்வாறு பதிவு செய்து கொண்டவர்களே நிவாரணம் மற்றும் சலுகைகள் பெறமுடியும் எனவும் கூறி வருகின்றனர்.

பொதுத் தேர்தலில் வாக்களிக்கக் கூடியதான வசதிகள் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்தும், வவுனியாவிலி ருந்தும் வாக்காளர்கள் தங்களது வாக்களிப்பு நிலையங்களுக்கும் சென்றுவரக்கூடியதாகப் போக்குவரத்து வசதி தேர்தலன்று செய்து கொடுக்கப்படவேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிக்க ஏதுவாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் பணியிலிருந்தபோது கொல்லப்பட்ட தாதியரது நினைவு தினத்தை வைத்தியசாலையில் அனுஷ்டிக்கக்கூட முடியாத நிலைமை அங்கு உள்ளது.

விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலுமில்லங்கள் இடித்து அழிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதி மண் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட நடவடிக்கைகள் திட்டமிட்ட முறையில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலைமை நீக்கப்பட்டு, மக்களை மீளக் குடியமர்த்தி, அவர்களின் வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்து மக்கள் சுதந்திரமாக நடமாடும் நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். - என்றார்.

செய்தியாளர் மாநாட் டில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (ஒ-சி)

## வலி.கிழக்கில் வியாபார நிலையங்களின் முன்னால் பொருள்களை வைத்து விற்பனை செய்யத் தடை

யாழ்ப்பாணம்,மார்ச்13

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கடை உரிமையாளர்கள் கடைக்கு முன்பக்கமாக பொருள் வைத்து விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

வீதிப் போக்குவரத்துக்கு எச்சந்தர்ப்பத்திலும் இடையூறாக வர்த்தக நிறுவனம் இருக்கக் கூடாது எனவும், சந்தைப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நுகர்வுக்காக வருபவர்கள் தமது மோட்டார், துவிச்சக்கரவண்டிகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டும் நிறுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வியாபார நிறுவன உரிமையாளர்கள் தமது வியாபார உரிம அனுமதிப்பத்திரத்தை தமது பிரதேச சபை உப அலுவலகத்தில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபை நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

மேலும் துவிச்சக்கரவண்டிக்கான உரிமம், வளர்ப்புநாய்க்கான உரிமம் ஆகியவற்றையும் உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குள் புதிதாக அமைக்கப்படும், புனரமைக்கப்படும் சகல வகையான கட்டடங்களுக்கும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படவேண்டும் எனவும் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக சபை நடவடிக்கைக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (50-201)

## வாதரவத்தைப் பகுதிக்கு மின்விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

புத்தூர், வாதரவத்தைப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் புதிதாக மின் கம்பங்கள் நடப்பட்டு மின்சார இணைப்புக்கள் பொருத்தப்பட்டதையடுத்து மின்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்விநியோகத்துக்கென நான்கு மின்மாற்றிகளும் அப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மின் விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (1-224)

## பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ்.மாவட்டப் பட்டதாரிகளின் எதிர்கால விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அனைத்துப் பட்டதாரிகளையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## இன்றைய சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்13

ஊரெழு - சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ்மன்ற அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி நிகழ்வு இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக லண்டனைச் சேர்ந்த சட்டத்தரணி க.செவ்வேளும் சிறப்பு விருந்தினராக லண்டனைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம், ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் சி.திரிகரன், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன், லண்டனைச் சேர்ந்த திருமதி புஸ்பராணி இராமநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (201)

* * *

தொல்புரம் கிழக்கில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் மகாசிவராத்திரி தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

### நாளை

| | |
|---|---|
| மாசி 30 | 14 .03.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.இ. 01.09 வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | பி.இ. 04.49 வரை |
| சுபநேரம்: | 09.21-10.51 வரை |
| ராகுகாலம்: | 04.51-06.21 வரை |

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் தலைமையில் மேற்படி வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (201)

* * *

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின பூசைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் நான்கு சாமமும் விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று மறுநாள் காலை திருவூஞ்சல் விழா இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். கலைநிகழ்வுகளும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளன. (201)

* * *

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலய மகா சிவராத்திரி தின பூசைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை 4 மணிவரை நான்கு சாமப் பூசைகள் இடம்பெறும். (201)

* * *

கோப்பாய்,மார்ச்13

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய சிவராத்திரி தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு விசேட பூசை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி நான்கு சாமப்பூசைகள் இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வுகளை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், ஓய்வுபெற்ற அதிபர் கவிமணி க.ஆனந்தராசா ஆகியோர் நிகழ்த்துவர். (201-92)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ்.இந்து சமயப் பேரவை தலைமையகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பரநடராஜர் ஆலயத்தில் இன்று சிவராத்திரியை ஒட்டி இரவு நான்கு சாமங்களும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இரவு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான மகா சிவராத்திரி நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சைவப்புலவர் கந்த சத்தியதாசனின் சொற்பொழிவும் மா.பரமேஸ்வரனின் திருப்புகழ் கச்சேரியும் இணுவில் இளந்தொண் டர் சபை அறநெறிப்பாடசாலை மாணவர்களின் 'பக்தநந்தனார்' நாடக மும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 ★ 05 ★ 1988



இறப்பு 13 ★ 03 ★ 2009

### நாகேஸ்வரன் யசோதரன் (கோகுலன்)

எமதருமை செல்லமே கோகிலா
காத்திருந்தோமடா உனது வரவுக்காக - நீ
காலமெல்லாம எம்முடன் வாழ்வாய் என்று எண்ணி. - ஆனால்
காலன் தனதாக்கி விட்டானே!
உன்னை எண்ணி தவிக்கிறோமடா தினமும்.

கா.பாஸ்கரன்,
41, சபாபதி வீதி, கொக்குவில். (95791)

பெரியமாமா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.

## ஆண் வேலையாள்கள் உடன் தேவை.

கொழும்பிலும் யாழ்பாணத்திலும் தனது சேவையைச் செய்யும் பிரபலநிறுவனம் ஒன்றிற்கு, வங்கி, தனியார் கம்பனிகளின் பராமரிப்பிற்கு உடன் துடிப்பான இளைஞர்கள் தேவை.

சுயவிவரக்கோவை, தேசிய அடையாள அட்டையுடன் இன்றும் (13.03.2010), நாளையும் (14.03.2010)காலை 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை நேரில் வரவும்.

இல.148, கோவில் வீதி,
(யுனிசெவ் முன்பாக)
யாழ்ப்பாணம்.

0212223818
0215673818

(C/565668)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா செல்லத்துரை

முள்ளியவளை, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சுதுமலை வீதி, தாவடிச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லத்துரை நேற்று (12.03.2010) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-வன்னிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம், அன்னப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கனகம்மா, சின்னத்தங்கம், சின்னதங்கச்சி, வேலாயுதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாரதிதாசன், காலஞ்சென்ற தேம்பாமலர், இரஞ்சிதமலர், வசந்தகுமாரி, பிரேமாவதி, கருணாகரன், விக்னதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிசிலியா, காலஞ்சென்ற சின்னத்தம்பி, துரைராசா, பாலசிங்கம், சிறீஸ்கந்தராசா, சசிகலா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ரமணன் மற்றும் அனோஜா, ரஜீவன், துஜீவன், ஜெனோ, ஜெனி, ஜென்ஸ், மதுஷன், மேனுஷன், மாதங்கி, அட்சயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2010) சனிக்கிழமை பி.ப 4மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பாரதிதாசன் மகன்
ந.துரைராசா மருமகன்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை)

சுதுமலை வீதி,
தாவடிச் சந்தி.
0213735772 (95855)

## மரண அறிவித்தல்

### இராசையா தெய்வப்புலேந்திரா (நெல்லியடி)



கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தெய்வப்புலேந்திரா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) 10.03.2010 புதன்கிழமை மாலை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசுவாமி - பறுவதம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜலக்ஷிமியின் அன்புக் கணவரும் உதயதாசன் (லண்டன்), பாரதிதாசன் (ஹொலண்ட்), இதயராணி (Demonstrator, விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), இனோதாரணி (பொறியியற் பீடம், இறுதி வருடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜேஸ்வரி (கனடா), குலேந்திரன் (கனடா), இரட்ணேஸ்வரி (சிங்கப்பூர்), திருநாமம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சறோஜினி (கனடா), சச்சிதானந்தம் (கனடா), பாலசிங்கம் (சிங்கப்பூர்), ஆதிரை (கனடா), அமரர் பேரம்பலம் (நெல்லைக் பேரன்), அமரர் பாலேந்திரம், சிவசுப்பிரமணியம் (கொழும்பு), அருளம்பலம் (கனடா), விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வராசாவின் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி) அன்புச் சகலனும் உமாதேவி,சறோஜினிதேவி, இராஜயோகம், சோதிமலர் (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
தொலைபேசி இலக்கம்: 021 226 4738 (95854)

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

அப்புக்குட்டி டுதர்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இலக்கம் 851193855V, விசேட அடையாள அட்டை மற்றும் IBSL அடையாள அட்டை என்பன கடந்த 21.02.2010 அன்று கொட்டடி சீனிவாசகம் வீதிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.0779352403 (95746)

## Menu Beauty Parlour

Rebonding
Starting
Wedding Make up
Evening Make up
Party Make up
Convocation Make up
Padi Care Mani care
Firming and curling
Hair colouring
Birthday Cake
Wedding Cake

ஓடர்களுக்கு செய்து தரப்படும்.
Diploma Certificate க்கான வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.
ஆரம்பம்: 15.03.2010

இல: 50, நாவலடி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0725360395 (95781)

## விற்றுத் தீர்த்தல் அதிரடிக்கழிவு விலை

| | |
|---|---|
| 01. Ceiling Fan | 2,350.00 |
| 02. D.V.D Player | 4,250.00 |
| 03. Computer Casing | 2,350.00 |
| 04. Stand Fan | 3,400.00 |
| 05. Table Fan | 2,400.00 |
| 06. Refrigerater (Double Door) | 30,500.00 |

தொடர்பு: கிங்ஸ் எலற்றோனிக்ஸ்,
11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0212223857 (95773)

## காணி விற்பனைக்கு

அரசடி வீதிக்கு அருகில் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்துக்கு முன்பாக) 4 பரப்பு காணியும், வேம்படி வீதி (மத்தியகல்லூரி பின்புறம்) பழைய வீட்டுடன் 4பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0778449739 (95787)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சமீபமாக, நல்ல சுற்றாடலில் சங்கிலியன் வீதியில் 10 அடிப்பாதையுடன் கூடிய 1½ பரப்புகாணி உடனடி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. விலையை நேரில்பேசி தீர்மானிக்கலாம். வேலை நாள்களில் பி.ப 4.30 பின்பு பார்வையிடலாம்.சனி, ஞாயிறுதினங்களில் முழுநேரமும் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:
ரீ.பரமானந்தர்
15/5, சங்கிலியன் வீதி, நல்லூர் வடக்கு. (95798)

## இந்து நாகரிக முன்னோடிப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இந்துநாகரிக பாட முன்னோடிப்பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளது.

அதற்கான வினாத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சையை நடத்துமாறு பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)

### பாடசாலைக்கு மடிக்கணனி கையளிக்கும் நிகழ்வு

வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்துக்கு மடிக்கணனி கையளிக்கும்நிகழ்வுநாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப 11.30 மணிக்கு அதிபர் திருமதி பு.சண்முகராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர்மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-6)

## மரண அறிவித்தல்கள்

### டாக்டர்தாமோதரம் சோமசேகரம்

(இளைப்பாறிய நில அளவையாளர் நாயகம்)



டாக்டர் தாமோதரம் சோமசேகரம் (இளைப்பாறிய நில அளவையாளர் நாயகம்) காலமாகி விட்டார்.

அன்னார் சதாநிதியின் அன்புக் கணவரும், அமரர் வைத்திய கலாநிதி அருளம்பலத்தின் சகோதரரும், குமாரி தமயந்தி (U.K), ஜயந்தி (HNB), அர்ஜுனா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகன்மோகன், றஹால் (Seylan Bank), கீதா ஆகியோரின் மாமனாரும், சதீஷ், விவேக், தனுக், ரித்திகா, பிரவீன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 60, பாடசாலை வீதி, தெகிவளை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெற்று தகனக்கிரியைகள் 10 மணிக்கு பொரளை மயானத்தில் (இந்துப் பிரிவு) நடைபெறும்.

இல: 60, பாடசாலை வீதி,
தெகிவளை,
தொ.பே.இல: 0777587163. (C/565461)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கந்தையா நாகரத்தினம்



காரைநகர், S.M. கேணியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகரத்தினம் 11.03.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரியின் (சித்திரா, லண்டன்) அன்புத் தாயாரும், தேவானந்தத்தின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தேவானந்தம் சித்திரா (மகள்),
சு.இராசகுமாரன் (பெறாமகன்,
நபா பன்முக வர்த்தகம்).

S.M கேணியடி,
காரைநகர். (C/565677)

### முருகேசு சின்னத்தம்பி



புலோலி கிழக்கு, ஊரியவத்தையைப் பிறப்பிடமாகவும், இல.9, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னத்தம்பி நேற்று (12.03.2010) வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, வள்ளிப்பிள்ளை, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சினி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்), ரகுலேந்திரன் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம், திருகோணமலை), ரவீந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா), ராஜசேகரன் (கனடா), குமுதினி, சாந்தினி (கனடா), மாலினி (ஆசிரியை, யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்), பாமினி (அமெரிக்கா), சுபாசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அச்சுதம்பிள்ளை (இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை, தற்போது CDB யாழ்.கிளை முகாமையாளர்), நகுலேஸ்வரி, பிரேமரஞ்சினி (கனடா), ராசினி (கனடா), சுபாசினி (கனடா), சிவராசா (யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி), வசந்ததாசன் (கனடா), தம்புசாமி (அமெரிக்கா), விமலதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா (உதவிக் கணக்காளர், உயர் நீதிமன்றம், மட்டக்களப்பு), நிரோஸ் (லண்டன்), நிஷாந்த் (இந்தியா), பிரசாந் (சிங்கப்பூர்), கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட டினேஷ், உமேஷ், காயத்திரி, அபிராமி, சிந்துரா, அஜித், அனுஷன், ஜனனி, தருணி, சஜன், சரோன் மற்றும் ஹாசினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2010) சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 09, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (95797)

தகவல்:
பிள்ளைகள்.

### ஜெமினி சுரேந்திரா

(இளைப்பாறிய திறைசேரி கணக்காய்வாளரும், ஜெமினி தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளரும், ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்)



கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த ஜெமினி சுரேந்திரா நேற்று (12.03. 2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய வியாவில் உபதபாலதிபர் திருமதி பேபிசரோசாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருளானந்தசிவம் மற்றும் சறோஜினி தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவஸ்கந்தாவின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03. 2010) சனிக்கிழமை காலை 9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைநகர், நிலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சு.பேபிசரோசா.
(மனைவி).

கருங்காலி,
காரைநகர். (95794)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளைக் கட்டி வளர்ப்பதன் மூலம் மிதிவெடியகற்றும் செயற்பாடுகளுக்கு உதவுங்கள்

## மிருசுவில் பகுதி மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 13

மிருசுவில் பகுதியில் மிதிவெடிகளை அகற்றிவரும் 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தின் பணிகளுக்கு அப்பகுதியிலுள்ள கால்நடைகள் இடையூறாக இருப்பதாக மிதிவெடியகற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே அப்பகுதி மக்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்த்து மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு 'சொண்ட்' நிறுவன மிதிவெடி அபாயக் கல்வித்திட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மிருசுவிலில் ஜே/336 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 'ஹலோரஸ்ட்' நிறுவனம் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. இப் பகுதியில் மட்டும் கடந்த வாரம் எட்டு கால்நடைகள் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளன. எனவே இதைக் கருத்தில் எடுத்து அப்பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்ப்பதன் மூலம் மிதி வெடியகற் றும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்து வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார் (50-16)


மிதிவெடியில் கால் ஒன்றை இழந்த நிலையில் .....

# போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக விளையாட்டு உத்தியோகத்ஸ்தர் அறிவித்துள்ளார். (50-23)

## மீள் குடியமர்ந்த மக்களுக்கு

# வேலணை, சங்கானைப்பகுதிகளில் இன்று ரூ. 25 ஆயிரம் கொடுப்பனவுக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வரும் 25 ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் இன்று சனிக்கிழமை வேலணை, சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் குடியேறிய குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 811 குடும்பங்களுக்கும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 316 குடும்பங்களுக்கும் குறித்த இடங்களில் கொடுப்பனவுக்கான கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே உரியவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றுடன் சென்று அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-6)




# கீரிமலை நகுலேஸ்வரத்தில் இன்று இந்தியக் கலைஞர்களின் பண்ணிசை

யாழ்ப்பாணம், மார்ச் 13

கீரிமலை அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விரதபூசை நிகழ்வுகளும் தீர்த்த விழாவும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

வட இந்திய பழனி முருகன் ஆதீன பண்ணிசை வித்துவான்களான பீ. சண்முக சுந்தரதேசிகர், ஜி. வெங்கடேஸ்வர தேசிகர் ஆகியோரின் பக்கவாத்திய சகிதம் நிகழ்த்தும் பண்ணிசை விசேட நிகழ்வும் வயலின், வீணை, நாதஸ்வரம், தவில் ஆகிய இசைக்கச்சேரிகளும் வில்லிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, கடந்த வருடங்களை விட இவ்வருடம் சிவராத்திரி விரதம் மிகவும் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான முழு ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக ஆலய ஆதீன கர்த்தா தெரிவித்துள்ளார்.

இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

சிவராத்திரி நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பக்தர்களின் வசதி கருதி மாவிட்டபுரம் ஊடாகவும் சேந்தாங்குளம் ஊடாகவும் ஆலயத்திற்குச் செல்ல முழுமையான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.( 50-201-224)

# பெற்றோரை இழந்த சிறுவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பண உதவி

வலி.வடக்கு, மார்ச் 13

இணுவில் கணேசன் கருணை நிதியத்தின் சார்பில் பெற்றோர்களை இழந்த பத்து சிறார்களுக்கு மாதாந்தம் கற்றல் செயற்பாட்டிற்காக ஆயிரம் ரூபா பணம் வழங்கும் நிகழ்வு உடுவில் பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப்பிரதேச செயலர் திருமதி உதயகுமார் யசோதா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் கணேசன் கருணை நிதியத்தின் நிர்வாக உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியருமான க.தேவராஜா, தலைவர் வை.ஸ்ரீஸ்கந்தவரோதஜன், பிரதேசசெயலக கணக்காளர் ஞா. லோகநாதன், உளவள உதவியாளர் க. க. சந்திரகுமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள்ளத் தொடர்வதற்காக ஒரு வருட காலத்திற்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)


# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)






படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி கையளிப்பு வைபவம் 2000.12.22 ஆம் திகதியன்று இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் தாயார், மனைவி, மற்றும் குழந்தைகள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

உறவுகளின் துன்பத்திலும்
தோள்கொடுக்கும் உற்ற நண்பன்
உங்களுக்காய் குரல்கொடுக்க....

போடுங்கள் புள்ளடி வீட்டுக்கு நேரே
அடுத்த புள்ளடி 6 க்கு மேலே

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 6

தொழிலதிபர்

உதயன் நிர்வாக இயக்குநர் சரவணபவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலர் மாவை சோ.சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) பொதுச் செயலாளர் பிரசன்னா இந்திரகுமார், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ் வின்) பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கூட்டாக இந்த விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

### இலங்கைத் தீவில் தமிழ்த்தேசிய இனம்

பதினாறாம் நூற்றாண்டில் மேற்கத்தேய வல்லரசுகளின் வருகைக்கு முன்னதாக இலங்கைத் தீவிலே மூன்று ராஜதானிகள் இருந்தன. அவற்றில் ஒன்று வடக்கிலே தமிழருக்கு சொந்தமாக இருந்தது. மத்திய மலையகத்திலே இருந்த கண்டி இராச்சியம் தான் கடைசியானதாக 1815 ல் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்தது. 1833 ஆம் ஆண்டு நிர்வாக வசதிக்காக இந்த மூன்று இராஜதானிகளையும் பிரித்தானியர் ஒன்றிணைத்தனர். அன்றிலிருந்து இலங்கை ஒரே நிலப்பரப்பாக ஆளப்பட்டது.

1948 ஆம் ஆண்டு ''காலனித்துவ'' ஆளுகையிலிருந்து சுதந்திரம் பெற்ற வேளையில் சாதாரண பெரும்பான்மைத்துவம் கொண்ட ஒற்றை ஆட்சித் தன்மையான அரசியல் அமைப்பு ஒன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது. இந்த அரசியல் அமைப்பின் 29 (2) உறுப்புரையில்



முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா விஞ்ஞாபனத்தை வெளியிட்டு விளக்குகிறார். அருகில் சுரேஷ் பிரேமச் சந்திரனும் அப்பாத்துரை விநாயகமூர்த்தியும் காணப்படுகின்றனர்.

குறித்ததொரு சமூகத்தையோ சமயத்தையோ பாதிக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற சட்டமோ அல்லது குறித்த ஒரு சமூகத்துக்கோ சமயத்துக்கோ மற்றவர்களுக்கு இல்லாத சலுகையை கொடுக்கும் சட்டத்தையோ நிறைவேற்றக்கூடாதென்ற தடை விதிக்கப்பட்டது.

### சமஷ்டி அரசியல் அமைப்பிற்கான கோரிக்கை

1949 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழித் தமிழர்களில் கணிசமானோருடைய குடியுரிமை பறிக்கப்பட்டதுடன், சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாக மாற்றப்பட்டது. 29 (2) உறுப்புரை இப்படியானவற்றை தடுப்பதற்காக இயற்றப்பட்டிருந்தும் கூட இந்த சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன. இது அதுவரை காலமும் இருந்த அரசாங்கக் கொள்கைக்கு மாறான செயலுமாகும். இந்த காலகட்டத்தில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அந்த பிரதேசங்களில் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் விதத்தில் அரசினால் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் முழுமூச்சோடு நடமுறைப்படுத்தப்பட்டன. இந்தப் பின்னணியில் இலங்கைத் தமிழ் மக்கள் சிங்களவரிடம் இருந்து பிறிதொரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்குச் சுயநிர்ணயஉரிமை உண்டு என்பதை 1951 ஏப்ரல் மாதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி எடுத்தியம்பியது. இந்தச் சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாடாகத் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு; கிழக்கில் ஒரு சமஷ்டி முறையான ஆட்சியை தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது. ஆரம்பத்தில் வெளிநாட்டுப் படையெடுப்புகளினாலும் பின்னர் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத பெரும்பான்மையினரின் மேலாதிக்க வாதத்தை உறுதி செய்யும் அரசமுறை ஒன்றின் மூலம் தமிழ்மக்கள் இழந்துவிட்ட சுயநிர்ணய உரிமையை திரும்பவும் வென்றெடுப்பதற்காக 1950 களிலிருந்து 1960களின் இறுதிவரை தமிழ் அரசுக்கட்சி பல அமைதி வழிப் போராட்டங்களை நடத்தியது.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

அரச கரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் இலங்கையின் பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர் பண்டார நாயக்காவிற்கும் தமிழ் மக்களின் தலைவரான எஸ்.ஜே.வி செல்வநாயகத்திற்கும் இடையில் 1957 ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அரச காணிகளுக்கு மேலான தனி அதிகாரத்தையும் மற்ற அரச அதிகாரங்களையும் பிரதேச சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிசெய்தது. ஆனால் பெரும்பான்மை சமூகத்தினர் இதனை எதிர்க்கிறார்கள் என்று காரணம் காட்டி பண்டாரநாயக்க இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தவில்லை.

### டட்லி - செல்வா ஒப்பந்தம்

பின்னர் 1960 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கின் குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதை தடைசெய்யும் வகையில் அரச காணி பகிர்ந்தளிப்பதற்கான கொள்கைகளை உள்ளடக்கி சுயாட்சியை ஏற்படுத்துகின்ற ஒப்பந்தம் ஒன்று தமிழ்த் தலைவர் எஸ் .ஜே.வி செல்வநாயகத்திற்கும் பிரதமர் டட்லி சேனநாயக்கவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் நடமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் 1965 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி அமைச்சரவையில் இணைந்து கொண்டது. ஆனால் ஒப்பந்தம் நடமுறைப்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும் சுயாட்சியை ஏற்படுத்த அரசு முயற்சிக்கவில்லை என்ற காரணத்தாலும் இலங் கைத் தமிழ் அரசுக் கட்சி அமைச்சரவையிலிருந்து விலகிக்கொண்டது.

### அரச குடியேற்றங்கள்

வடக்கு, கிழக்கைத் தங்களுக்கு பாரம்பரிய தாயகமாகவும் அதிலே தமது சுயநிர்ணய உரிமையை உடையதாகவும் கருதுகின்ற எமது மக்கள், இலங்கை சுதந்திரம் அடைந்த பின் வடக்கு, கிழக்கின் குடிசனப் பரம்பலைப் பாதிக்கும் வகையிலான அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் பெரிதும் பாதிப்படைந்தனர். 1940 களுக்கும் 1980 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் அரச காணி பகிர்ந்தளிக்கின்ற கொள்கையினாலும் குடிசனப் பரம்பல் வீதம் பெரியளவில் மாற்றம் அடைந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது கிழக்கு மாகாணத்தில் 9% ஆக இருந்த சிங்கள மக்களின் சனத்தொகை 1981 ஆம் ஆண்டு கடைசியாக நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் படி 25% வீதமாக உயர்ந்திருந்தது. அதே சமயம் 1947ற்கும் 1981ற்கும் இடைப்பட்ட காலத்தில் நாடளாவிய ரீதியில் சிங்கள மக்களின் சனத்தொகை 238% ஆக உயர்ந்த வேளையில் கிழக்கு மாகாணத்தில் மட்டும் சிங்கள மக்களின் சனத்தொகை 883% ஆக அதிகரித்தது. வடக்கு கிழக்கின் குடிசனப்பரம்பலை இவ்விதமாக மாற்றும் அரசின் நிகழ்ச்சி நிரல் முழுத்தீவிரமாக இன்று வரை நடைபெற்று வருகின்றது.

கடந்த 60 ஆண்டு காலமாக வடக்கு கிழக்கில் புதிதாகக் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கான நீர்ப்பாசன திட்டங்கள் தவிர வேறு எந்தவிதமான முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களும் எந்த ஒரு அரசினாலும் முன்னெடுக்கப்படவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான காலப்பகுதியில் எமது மக்களும் எமது நிலமும் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டன.

### குடியரசு அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றாமை

1970ம் ஆண்டு இலங்கைக்கு இலங்கை மக்களே உருவாக்குகின்ற அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதற்காக அரசியல் யாப்பு நிர்ணயசபை ஒன்று கூட்டப்பட்டது. இதிலே தமிழரசுக்கட்சியும் ஆரம்பத்தில் பங்குபற்றி சமஷ்டி ஆட்சி அடிப்படையிலான சில கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தியது. ஆனால் அந்த பிரேரணைகள் யாவும் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டபோது தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் அந்த அரசியல் யாப்பு நிர்ணயசபையிலிருந்து வெளியேறினர். அதைப் போலவே 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கும் தமிழ் மக்கள் தமது ஒப்புதலை வழங்கவில்லை. முதலாம் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்புக்கள் இரண்டும் ஒற்றையாட்சி முறையை உறுதிப்படுத்தி சிங்களமொழிக்கு மட்டும் அரச கரும மொழி என்ற அந்தஸ்தையும் பௌத்த மதத்திற்கே முதலிடம் என்ற அந்தஸ்தையும் கொடுத்தன. சோல்பரி அரசியல் யாப்பில் 29 (2) இல் சிறுபான்மை மதங்களுக்கும் மக்களுக்கும் எதிராக சட்டம் இயற்றக்கூடாது என்ற தடையையும் இந்த அரசியல் யாப்பு நீக்கியது. ஆகவே 1972ம் 1978ம் அரசியல் யாப்புகள் தமிழ்மக்களின் ஒப்புதலின்றி உருவாக்கப்பட்டதாகும்.

### தரப்படுத்தல்

பல்கலைக்கழக அனுமதிகளைத் தரப்படுத்தும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் [illegible] குறைந்த புள்ளிகளைப் பெற்ற சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறவும் வழிவகுக்கப்பட்டது. இது தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பெறுவதை தடுத்து அவர்களுடைய விரக்தியை அதிகரித்தது. 1970 ஆம் ஆண்டுகளில் இதற்கெதிராக அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்ட 40இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின்கீழ் நீதிமன்ற விசாரணையின்றி சில வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டனர்.

### தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள்

தமிழ்மக்களுக்கெதிராக இழைக்கப்பட்ட பாரபட்ச நட வடிக்கைகளுக்கும் மற்ற அநீதிகளுக்கும் மேலாக 1956, 1958, 1961, 1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் நாடு முழவதும் தமிழ் மக்களுக்கெதிராக வன்முறைகள் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்டன. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அரசினால் எந்த விதமான பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. இந்த சந்தர்ப்பங்களில் நாட்டின் மற்றப் பாகங்களில் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களை அரசாங்கம் கப்பல்களில் ஏற்றி வடக்கு, கிழக்குக்கு அனுப்பியதன் மூலம் இந்த இரு மாகாணங்களும் எமது பாரம்பரிய தாயகம் என்பதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் மேற்கண்ட நடவடிக்கையின் விளைவாக அரச பயங்கரவாதத்திற்கெதிராகவும் தமிழ் மக்கள் இழந்து விட்ட இறையாண்மையை மீண்டும் வென்றெடுப்பதற்காகவும் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையிலெடுத்தனர்.

### இழந்துபோன இறையாண்மையை மீட்டெடுப்பதற்கான அழைப்பு

இலங்கைத் தமிழரசுக்கட்சியும் ஏனைய தமிழ் கட்சிகளும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஒன்றுசேர்ந்து 1976ம் ஆண்டிலே இழந்த எமது இறையாண்மையை மீளப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். இது 1956ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் கொடுத்த ஜனநாயக ஆணையை அரசு புறக்கணித்ததாலும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை தொடர்ச்சியாக மறுத்து வந்தமையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். சிங்கள அரசாங்கங்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் கூட மதிக்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கெதிரான அடக்குமுறையும் பாரபட்சமும் எந்தவிதமான கட்டுப்பாடின்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1977 யூலை மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இழந்து போன இறையாண்மையை மீளப் பெறுவதற்கான ஆணையை தமிழ் மக்களிடம் கோரியிருந்தது. அந்த தேர்தலிலே வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்றைத் தவிர மற்ற எல்லாத் தொகுதிகளிலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வெற்றியீட்டியது.

### அதிகாரத்தை பகிர்வதற்கான ஒழுங்குமுறைகள்

1983ம் ஆண்டு தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்குப் பின்னர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று தமிழ் பேசும் மக்களுக்கு கூடிய சுயாட்சி வழங்குகின்றதோர் மாற்று அரசியல் திட்டத்தினூடாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பலமுயற்சிகள் செய்யப்பட்டன. 1987ம் ஆண்டு ஏற்படுத்திய இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரதிபலனாக வடக்குக் கிழக்கை ஒரு மாகாணமாக ஒன்றிணைத்து ஒரு அரசியல் நிர்வாக அலகு தோற்றுவிக்கப்பட்டது. மிகக் குறைந்தளவிலான அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபைகள் உருவாக்கப்படுவதற்கு இந்த மாற்றங்கள் வழிவகுத்தன. ஆனால் இந்த நாடு ஒற்றையாட்சி முறையின் கீழே தொடர்ந்தும் இருந்தது. அத்தோடு அதிகாரங்களைப் பகிரவந்த 13வது திருத்தச்சட்டம் மத்திக்கான அதிகாரங்களை மீளப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்பட்டது. அர்த்தமுள்ளவிதத்தில் அதிகாரத்தைப் பகிர்வதற்கு இது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல.



தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட நிகழ்வில் வேட்பாளர்கள் அமர்ந்

### ஒற்றையாட்சிமுறையை இல்லாதொழித்தல் பகிர்ந்தனுபவிக்கும் இறைமை

1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கை அரசாங்கம் அரசியல் சாசனத் திருத்தத்திற்காக ஒரு தொகுதி பிரேரணைகளை அறிவித்தது. இலங்கை ஒரு பல மொழி பல மதங்களைக் கொண்ட பன்மைத்துவ சமூகம் என்ற அடிப்படையில் ஐக்கியப்பட்ட நாட்டிற்குள் ஓர் அரசியல் வரைவைப் பிரிக்கப்படமுடியாத பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கம் வெளியிட்டது. 2000ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தின் பிரகாரம் ஒற்றையாட்சி முறை என்பது அகற்றப்பட்டு அரசியல் அதிகாரங்களைப் பொறுத்தவரையில் பகிரப்பட்ட இறையாண்மை என்ற அடிப்படை முன்வைக்கப்பட்டது.

### தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சு

எரிந்துகொண்டிருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு எந்த முன்னேற்றமும் ஏற்படாத அதேவேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் நெஸ்ரமோல்ட் நிறுவனம் நடத்திய ஆண்களுக்கான 12 கிலோமீற்றர் தூர ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்கள் வெற்றி இலக்கைக் கடந்து செல்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# இராமநாதன் கல்லூரியுடன் போராடி சம்பியன் வென்றது உடுவில் மகளிர்

வலிவடக்கு,மார்ச்13

உடுவில் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இராமநாதன் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் ஒரு அணிக்கு மற்ற அணி சளைத்தது அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டம் முடிவடையும் போது உடுவில் மகளிர் கல்லூரி 15:14புள்ளிகள் என்ற நிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்புடன் விளையாடி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டன.

தொடர்ந்து இரு அணிகளும் புள்ளிகளை பெற்ற போதிலும் இடையில் உடுவில் மகளிர் கல்லூரி கடும் எதிர்ப்பின் மத்தியிலும் இரண்டு புள்ளிகளைப் பெற்று முன்னணியில் காணப்பட்டது. இராமநாதன் கல்லூரி தொடர்ந்து புள்ளிகளைப் பெற்ற போதிலும் உடுவில் மகளிர் கல்லூரி 17:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் இருந்த வேளை ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 32:28 புள்ளிகள் என்ற அடிப்படையில் இராமநாதன் கல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாகியது. (50-86)

## கோட்ட மட்ட வலைப்பந்தாட்டம்

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் மூன்று அணிகளும் முதலிடத்தை வெற்றி கொண்டுள்ளன.

15 வயதுப்பிரிவினருக்கிடையிலான போட்டி இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்துடன் விளையாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 18:07 என்ற புள்ளி அடிப்படையிலும் 17 வயதுப்பிரிவினருக்கிடையிலான போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 30:08 என்ற புள்ளி நிலையிலும் 19 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் பண்டத்தரிப்பு யசிந்தா வித்தியாலயத்தை 27:21 என்ற புள்ளி அடிப்படையிலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

இப்போட்டிகள் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியின் தலைமையில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசலை மைதானத்தில் நடைபெற்றன. (50-224)




# 17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் சம்பியன் பெற்றது இராமநாதன் கல்லூரி

வலி.வடக்கு, மார்ச் 13

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டியில் இராமநாதன் கல்லூரி சம்பியனாகியது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவரைடயும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

போட்டியின் இறுதி நேரம்வரை எந்த அணி வெற்றிபெறும் என்று தெரியாத அளவுக்கு இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைப் பெற்று இறுதிவரை மிகவும் உற்சாகமாக விளையாடின.

முதல்பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 08:07 புள்ளிகள் என்ற அடிப்படையில் முதல்பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உற்சாகத்துடன் களமிறங்கி மிகவும் கடுமையாக மோதிக் கொண்டன.

இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைப் பெற்ற போதிலும் இறுதி நேரத்தில் இராமநாதன் கல்லூரி விரைவாக இரண்டு புள்ளிகளைப் பெற ஆட்டம் 09:07 என்ற நிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் நிறைவில் இராமநாதன் கல்லூரி 16:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வென்று கோட்டச் சம்பியனாகியது. (50-86)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அரியாலை ஐக்கியம் சம்பியன்

வலி.வடக்கு, மார்ச் 13

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்துக் கொண்ட முயற்சிகள் கைகூடாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 08:07 கோல்கள் என்ற அடிப்படையில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பியனானது. (50-86)

## நெடியகாடு இளைஞர்கழகம் நடத்தும் போட்டிகள்

வல்வெட்டித்துறை, மார்ச் 13

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவு வருடாந்த இல்ல தடகளப் போட்டிப் பெருவிழா இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமையும்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழக இல்ல தடகளப் போட்டி இடம் பெறும் அதே சமயம் ஏனைய பொது விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளும் இடம்பெறும்.

மரதன் ஓட்டம், விநோத உடை, அஞ்சலோட்டம், தலையணைச் சண்டை, கிறீஸ் கம்பம் ஏறுதல், கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் வெளிக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படவுள்ளன. (50-236)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான எல்லேப்போட்டியில் பெண்களுக்கான போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5 மணிவரையும் ஆண்களுக்கான எல்லேப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். மோகன் தெரிவித்துள்ளார். (50-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 13

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்டபட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் பெண் அணிகளுக்கு இடையிலான கரபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்வுள்ளது. (50-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 13

தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் பெண் அணிகளுக்கு இடையிலான கரபந்தாட்டப் போட்டியும் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானம், புனித அந்தோனியார் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளதாக விளையாட்டு உத்தியோகத்தர் என்.நித்திலநாயகம் தெரிவித்துள்ளார். (50-23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 13

நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்திற்காக அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ருவென்ரி - 20 கிரிக்கெட் ஆட்டத்தின் அரை இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

* யாழ்.மத்திய கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான ஆட்டம், வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் மன்னார் சென். சேவியர் கல்லூரிக்கு இடையிலான ஆட்டம் வட்டு.தொழில்நுட்பக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

இந்த அரைஇறுதி ஆட்டத்தில் வெற்றி பெறும் அணிகள் மதியம் 2 மணியளவில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (50-23)



சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் முதலிடத்தினைப் பெற்றுக் கொண்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீராங்கனைகளை படத்தில் காணலாம். (படம்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை ஒலிம்பிக் தீபம் ஏற்பதையும் அருகில் கல்லூரி அதிபர் ந.சபாரட்ணசிங்கி நிற்பதை முதலாவது படத்திலும்-

வெற்றிபெற்ற இல்லத்துக்கான வெற்றிக் கேடயத்தைஇல்லத்தலைவியிடம் பிரதம விருந்தினர் வழங்குவதையும்- ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பதிகாரியிடம் பிரதம விருந்தினரின் பாரியார் வழங்குவதை இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.


## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

அல்லலுற்ற தமிழருக்காய் அல்லும் பகலும் தனை அர்ப்பணித்து சேவையாற்றும்...

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி** LL.B

(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)





தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)


## வியாபார வரி, உரிமக் கட்டணங்களைச் செலுத்துக

யாழ்ப்பாணம், மார்ச்13

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட சகல வியாபார, வர்த்தக, தொழில் நிலையம் ஆகியவற்றுக்கான இவ்வருடத்திற்குரிய வியாபார வரி, உரிமக் கட்டணங்களை எதிர் வரும்31ஆம்திகதிக்கு முன்னர் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நகரசபை அலுவலகத்தில் மிதி வண்டிகளுக்கு இவ்வருடத்திற்குரிய இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. உரிய படிவத்தினைச் சமர்ப்பித்து எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-207)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

**வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி முதலாம் அரையாண்டு பரீட்சைகள்- 2008 (பழைய பாடத்திட்டம்)**

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பழைய பாடத்திட்டத்திற்குரிய 1ஆம், 2 ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு பரீட்சை களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை 18.03.2010 ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிடம் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 05.04.2010 அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு: முதலாம் வருடத்திற்கான புதிய பாடத்திட்டத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப மீள் பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவாளர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

**சண்முகலிங்கம் நேசமணி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.02.1925 | 11.02.2010 |

இன்று (13.03.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

28/1, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(95771)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை செல்லம்மா
(முத்துப்பிள்ளை)



தண்ணீர்தாழ்வுகட்டுவனைப் பிறப் பிடமாகவும், மூத்ததம்பி லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்லம்மா 11.03.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், தர்மநாயகி (தேவி), காலஞ்சென்ற பரமேஸ்வரி (மணி), திவ்யராணி (ராணி), சிவமலர் (குஞ்சு), சிறிகரன் (சிறி) ஆகியோரின் அன்புத் தாயும், குலசிங்கம், செல்வம், கிருஸ்ணகுமார், மகேந்திரன், காலஞ்சென்ற கனகாம்பிகை (வாணி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (12.03.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


## வீடு, காணி விற்பனைக்கு

6 பரப்பு வெறுங்காணியும், 6 பரப்பு வீடு வளவும் (4 அறை வீடு) விற்பனைக்கு உண்டு.

சோடாக்கொம்பனி லேன்,
குளமங்கால்,
மல்லாகம்.

**T.P : 0777-877843**

### கிங்ஸ்சிலி தேவப்பிரியம் அழகராஜா



இல. 33, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குழியைச் சேர்ந்த கிங்ஸ்சிலி தேவப்பிரியம் அழகராஜா நேற்று (12.03. 2010) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் அழகராஜா-டெய்சி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான மெதடிஸ்த உபதேசியார் S.A.சொலமன்- லில்லி நேசம் தம்பதியரின் அருமை மருமகனும், நிர்மலாவின் (Girlie) அன்புக் கணவரும், நிம்மி, போல், தேவா(Roshi) அவர்களின் அருமைத் தந்தையும், கிறிஷாந் அற்புதராஜாவின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.03.2010) சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பெதனி",
33,சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குழி.

(95777)

தகவல்
மனைவி,
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் முன்னாள் பூசகர்
சிவஸ்ரீ ந.தாமோதரக்குருக்கள் அவர்களின்
அன்புத் தாய்

**நடராசஐயர் ருக்குமணி அம்மா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய நாகேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,
புளியந்தீவு நாகேஸ்வரன் திருக்கோயில் - அனலைதீவு

## விற்பனைக்கு

புத்தம் புதிய Tusker Super லொறி விற்பனைக்குண்டு. (LJ-8xxx)
T.P.No:0776090926, 0775250996

## விற்பனைக்கு

Phone Boot Class, V.C.D., D.V.D, Video Copy, Video Stand என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்
இல. 50, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், 0779553691

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள நிசான் சனி AC மொடல் HB - 310, 13 சிறி 56XX கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0771310195

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்



உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த வி.பாலகிருஷ்ணன் காலஞ்சென்ற தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக உரும்பிராய் வடக்கு கணேசா சன சமூக நிலைய முன்பள்ளி மாணவர்களுக்கு குடிதண்ணீர் விநியோக வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.




நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் சமையற்கூடத் திறப்பு விழாவுக்கு வருகைதந்த உலக உணவுத்திட்ட அதிகாரிகளை கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி. சித்திரவடிவேலு மற்றும் எஸ்.எக்ஸ். குலநாயகம் ஆகியோர் சகிதம் பாடசாலை ஆசிரியர் குழாம் பாடசாலை முன்றிலில் வரவேற்கின்றமையைப் படத்தில் காணலாம்.



யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற திருத்தொண்டர் பெரிய புராணம், புராணப்படனப் பூர்த்தி நிகழ்வில் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனுக்கு ஆலயக்குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகில் இந்து நாகரிகத்துறைத் தலைவர் வேதநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



வல்வெட்டித்துறை ,ஊரிக்காட்டில் சிவசாயீஸ்வரம் என்னும் பெயரில் பகவான் சத்யசாயி பாபாவுக்கு பஜனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆரம்பதின விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் கலந்துகொண்டு நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதனையும், அருகில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் இ.வசந்தசேனன், வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் மற்றும் ஆ.ஜெகநந்தன், வி.இராசநாதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



வட்டு. இந்துக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவிற்குரிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கல்லூரி அதிபர் திருமதி ஜே. அருள்மயம் நிற்பதைப் படத்தில் காணலாம். (20)



பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இல்ல மெய்வன்மைப் போட்டி நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு. நடராசா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு [illegible] இராசையா சேதுலிங்கம் பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசனிடம் ஒலிம்பிக் பீடத்தைக் கையளிப்பதையும் அருகில் பிரதி அதிபர் திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



ஜனாதிபதி விருதுக்கான சமூக சேவைத் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரிச் சாரணர்கள் உடுப்பிட்டி தென்னிந்தியச் திருச்சபைச் சுற்றுச் சூழலை துப்புரவு செய்கின்றபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவவினையறுத்து பரசுகமளிக்கும் மகா சிவராத்திரி

**உலகத்து இந்து மதத்தினரால் இன்று மகாசிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

''நடராஜப்பெருமானின் பெருமையை ''அண்ட சராசரம் அவன் திருமேனி, அண்ட சராசரம் அவன் திரு ஆடல்,அண்ட சராசரம் அவனேயாகும்,அண்ட சராசரம் முழுவதும் அதிசயம்'' எனப் போற்றுகின்றார் யோகர் சுவாமிகள்.

திருவைந்தெழுத்தின் மேன்மையை, ஆற்றலை உணர்த்த வேண்டி மேலும் ''அஞ்செழுத்தாலே அனைத்தும் ஆயின. அஞ்செழுத்தாலே அனைத்தும் உதித்தன. அஞ்செழுத்தாலே அனைத்தும் நிலைத்தன.அஞ்செழுத்து அதிசயம் ஆரறிவாரே''என்று வியந்து துதித்து இன்புற்றவர் யோகர் சுவாமிகள்.

தாயினும் நல்ல தலைவனாய் இருந்து ஆருயிர் முழுவதும் மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும் பூரண முதல்வனான சிவன் வேண்டத்தக்கதையறிந்து வேண்டமுழுதும் தந்துதவும் பெம்மானின் அடி முடி தேடி அலைந்த மால் அயனுக்கு ''செப்பரிய முழுஞானச் செழுஞ்சோதிக் சிவலிங்கத்தே'' இங்குற்றேன். இங்குற்றேன் என்றோதி செருக்கடக்கிய ஓர் இரவே மகாசிவராத்திரி.

விரதங்கள் யாவற்றுள்ளும் தலையாயது மகாசிவராத்திரி விரதமாகும் சிவசக்தி அம்சம் கொண்ட சிறந்த விரதமாகப் போற்றப்படும் மகா சிவராத்திரி நோன்பானது பசித்திரு,விழித்திரு என்பதை உணர்த்தி நிற்பதாகும்.உண்ணாமலும், உறங்காமலும் இந்நோன்பினைக் கடைப்பிடிக்க நோற்றலின் ஆற்றல் எம்மை வந்து சேரும்.இறையருள் கைகூடும்.

சிவப்பரம்பொருளை யெண்ணி நோற்கப்படும் இவ் விரதமானது உலகெங்கும் பரந்து வாழும்,சிவ வழிபாட்டைக் கைக்கொள்ளும் இந்துப்பெருமக்களால் நிறைபக்தியோடு மனம் ஒன்றி அனுட்டிக்கப்பட்டு வரும் புனித விரதமாகும். ஆண்டு தோறும் மாசி மாதத்தின் தேய்பிறையின் பதின்னான்காம் நாளான கிருஷ்ண பட்சத்து சதுர்த்தசி திதித்தினத்தில் இவ் விரதம் அனுட்டிக்கப்படும். உண வொறுத்து உறக்கம் ஒழித்து இரவு முழுவதும் விழித்திருந்து சிந்தையுள் சிவனை இருத்தி வழிபடும் சிவனடியார்கள் சிவாலயங்களில் இடம்பெறும் நான்கு யாமப் பூசைகளிலும் கலந்து கொண்டு தெய்வத்தைத் தரிசிப்பது சாலமும் நன்று. மகா சிவராத்திரி இரவு நிகழும் நான்குயாமத் திருமுழுக்கும் வழிபாடும் எவ்வளவு சிறந்தது என்பதனை '' நன்றே யருளும் சிவனிரவின் நான்குசாமப் போதெல்லாங் குன்றாப் பிறவிக் குலமழித்து வீடு கூட்டும் பெருமாற்கு மன்றற் கலசம் வளர் நீரால் பிறவான் முழுக்கு வழி பாடுந் துன்றுந் தொண்டர் விழித்த பயன் துய்க்கும் வண்ணஞ் செய்வாரால்'' என்ற செய்யுள் செப்புகின்றது.


சிவாலயங்களில் நிகழும் நான்கு யாமப் பூசைகளுள் லிங்கோற்பவ காலம் மிக மிக மேலானது. ஆலயத்தின் கருவறையின் பின் புறத்தே காணப்படுகின்ற லிங்கோற்ப மூர்த்திக்கு குடமுழுக்கும் பூசையும் இடம்பெறும்.

ஆதியந்தம் இல்லா அரும் பெரும் சோதியாய் நின்ற ஈசனையெண்ணி எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க''எனும் திட மனத்தோடு சிவன் இராவில் இடம்பெறுகின்ற நான்குசாமப்பூசைகளிலும் குடமுழுக்கிலும் பங்கேற்று தரிசிப்பார்க்கு முடியாப் பிறவிப் பிணியில்லை கொடு நோய் இல்லை. மிடியுமில்லை. எனவே இவ் விரதத்தை அனுட்டிப்பார் பெரும் பாக்கியவான்களே.மகா சிவராத்திரியைப் பற்றிய புராணக்கதைகள் சிலவுள. அவற்றுள் நான்முகனும் நாராயணனும் அடிமுடி தேடியதொன்று. முன்னொருகால் அயனும் ,அரியும் தங்களில் யார் பெரியர் எனும் வாதத்தில் ஈடுபட்டனர்.கர்வம் மிகக் கொண்ட இருவரும் ஈற்றில் போர் செய்தே முடிவறியத் தலைப்பட்டனர்.படைப்பவனும்,காப்பவனும் சமர் செய்யின் சர்வ உலகமும் உயிர்களும் துன்புறும் என்பதை உணர்ந்த சிவனார் உயிர்களைக் காக்கத் திருவுளம் கொண்டார்.அவர்கள் முன் தழற் பிழம்பாகத் தோன்றி '' இச் சோதி வடிவின் அடியையாவது முடியையாவது யார் முதலில் காண்பரோ அவரே பெரியர் என்று அசரீரீ மூலம் உணர்த்தி நின்றார். அது கேட்ட பிரமனும் விட்டுணுவும் அடி முடி தேட ஆயத்தமானார்கள்.மண்ணையகழ்ந்து பன்றி உருவில் சென்ற மாலும்,அன்னமாய் பறந்து விசும்பெங்கும் அயனும் தேட முற்பட்டனர்.நெடு நாளாகியும் இருவரினாலும் அடியையோ, முடியையோ காணமுடியவில்லை. தங்கள் தவறை உணர்ந்தனர்.இயலாமையை எண்ணி வெட்கப்பட்டனர். அகந்தை போயகல செய்வதறியாது நின்றனர். அவ்வேளை சிவப்பரம் பொருள் சோதியின் நடுவே லிங்கத்தினுள்ளே காட்சி கொடுக்க இருவரும் பணிந்தனர். வணங்கினர்.முக்கண் முதல்வனே முதலானவன் என்றுணர்ந்து போற்றித் துதித்தனர். இப் பேரானந்தக் காட்சியை '' செங்கண்ணானும் பிரமனும் தம்முள்ளே எங்கும் தேடித்திரிந்தனர். காண்கிலர் இங்குற்றேன் என்று லிங்கத்தே தோன்றினான் பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே'' என அப்பர் சுவாமிகள் பாடியருளி உள்ளார்.

கந்த-தியாகராசா
கோண்டாவில்.

சிவலிங்க வடிவான ஓர் அருவுருவத்திருமேனி காட்டி ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாய் எங்கும் வியாபித்து நின்ற அத்திருக்கோல வடிவம் நமது உள்ளத்துள் உறையும் ஆத்மலிங்கம் என்பது ஆன்றோர் வாக்கு. செருக்கு நீங்கி சிவப்பரத்துவத்தை மாலயன் ஏற்றுக்கொண்ட இரவே மகா சிவராத்திரியாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

திருக்கைலையில் சிவனும்,சக்தியும் மகிழ்ந்திருந்த வேளை சிவபிரானின் கண்களை விளையாட்டாகப் பொத்தி உலகை இருளில் மூழ்கச் செய்த குற்றம் நீங்க உமையவள் விழித்திருந்து சிவலிங்கம் வளர்த்து பக்தியோடு நான்கு சாமப் பூசை செய்து தன் துன்பம் போக்கிய நாளும் இந்த மகா சிவராத்திரி தினம் என்பதும் புராணம் சொல்லும் கதையாகும்.



சூது வாதறியா வேடன் வழி தவறிய நிலையில் பசியும் வாட்ட,சோர்வும் துரத்த, செய்வதறியாது காட்டு மிருகங்களுக்கும் அஞ்சி இரவுப் பொழுதைக் கழிக்க மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். நித்திரையாகி விட்டால் தவறிக் கீழே விழுந்து விடுவேன் என்ற அச்சம் காரணமாக தூக்கம் விட்டு விழித்திருந்தான்.தான் ஏறி இருந்த மரம் வில்வ மரம் என்பதையோ,மரத்தினடியில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதையோ அவ் வேடன் அறிந்திருந்தானில்லை. பனித்துளியும் கொட்டக் கொட்ட அதையும் பொறுத்து விழித்திருக்கும் பொருட்டு மரத்தின் இலைகளைக் கொய்து கீழே போட்டவண்ணம் இருந்தான். இலைகள் சிவலிங்கத்தின் மேல் வீழ்ந்தன.பனித்துளிகளும் லிங்கத்தின் மேல் வீழ்ந்து அபிசேகமாயின.இலைகள் அர்ச்சனையாக அமைந்தன.இவ்வதிசயமும் மகா சிவராத்திரியன்றே நிகழ்ந்தமையால் ஏது மறியா வேடனும் பரகதியடைந்தான்.சிவனருள் பெற்றான்.

அறியாமை எனும் இருளில் இருந்துவிடுபட வேண்டுமெனில் மனம்,வாக்கு,காயம் யாவும் ஒருமித்து பசித்திருந்து,விழித்திருந்து உள்ளன்போடு தெய்வத்தைத் தொழுதால் நற்பலன் கிட்டும்.வழிதவறி வாழ்வில் சலிப்படையாது வாழ வேண்டின், நான்,எனது எனும் கர்வம் விட்டு அன்பைப் பெருக்கி நெஞ்சகத்தே இறைவனை இருத்தி சிவாயநம எனச் சிந்தித்து அபாயம் ஏதும் இன்றி மண்ணில் நல்ல வண்ண்ம் வாழலாம்.

எனவே என்றும் எமக்குத் தோன்றாத் துணையாய் இருந்தருளும் சிவனை யெண்ணி உண்ணாமை, உறங்காமை இரண்டையும் கைக்கொண்டு சிவராத்திரி நோன்பினை நோற்றுச் சிவகதி அடைவோமாக.***

# பிறரைப் பற்றியும் சிந்திப்போம்

அது ஒரு மாலை நேரம். வீட்டிற்குப் போவதற்காக தீவகம் செல்லும் பேருந்தை எதிர் பார்த்து மக்கள் கூட்டமாக நின்றிருந்தனர். பேருந்தும் வந்தது. மக்கள் விரைந்து பேருந்திற்கு அருகில் செல்கின்றனர்.ஆடம்பரமான ஆடை அணிந்திருந்த ஓர் இளைஞன் ஏதோ வெறி பிடித்தவன்போல பேருந்து நிற்கும் இடத்தை நோக்கிப் பாய்ந்தோடிப் பேருந்தில் வந்தவர்கள் இறங்குவதற்கு முன்பாக உள்ளே நுழைந்து உட்கார்வதற்கு இடம் பிடிக்கிறான். ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதாக நினைப்பு. பேருந்தில் ஏறுவதற்கு எத்தனையோ வயதானவர்கள்,கர்ப்பிணிப்பெண்கள், வைத்தியசாலைக்கு வந்து மருந்தெடுத்துச் செல்லும் நோயாளர்கள்,குழந்தைகளைத் சுமந்து நிற்கும் தாய்மார்கள் எனப் பலவகையினர் நிற்பதைக் கூட அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இப்படி எமது அன்றாட வாழ்வில் நாம் பிறரைப்பற்றி சிந்தனைகள் இல்லாத மனித ஜென்மங்களைக் காணுகின் றோம். தமது பேச்சு, செயல்களால் மற்றவர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறித்துக் கூட சிந்திப்பதில்லை.

பிறருக்காக தம் வாழ்வையே அர்ப்பணித்த இயேசு கிறிஸ்துதான் நமக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆம் இயேசு பிறருக்கான மனிதராய் பிறந்தார். இயேசு தமக்காக எதுவும் செய்யவில்லை. பிறரைப்பற்றிய எண்ணம், இரக்கம்,பரிவு அன்பாக மாறியபொழுது அவர் தம்மையே பிறருக்காகப் பலியாகக் கொடுத்தார். ஆகவே கிறிஸ்துவின் வழியைப் பின் பற்றும் நாமும் பிறருக்காக வாழ்பவர்களாக இருக்கவேண்டும். ''நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்'' (பிலி 2:4) தங்களது உடைமைகளைப்




பிறருக்காகக் கொடுத்த முதல் கிறிஸ்தவ சமூகம்தான் நமக்கு முன்மாதிரி(தி.ப 4:32) தங்களுக்கு ஏற்படக்கூடிய இறப்பைப் பற்றிக் கவலைப்படாமல் கிறிஸ்துவை அறியா தவர்களிடமும் பரிவுகொண்டு மறை பரப்புப் பணிக்காக தங்கள் உயிரையே கையளித்தவர்களும் எமக்கு சாட்சியாக உள்ளனர். அதனால்தான் திருச்சபை வளர்ந்தது. தெருவில் இறப்ப வர்களைப்பற்றியும், குப்பைத் தொட்டிகளில் வீசப்பட்ட குழந்தைகளைப் பற்றியும், கைவிடப் பட்ட முதியவர்களைப் பற்றியும் அன்னை திரேசா சிந்தனையற்றவராக இருந்திருப் பாரானால் அவர் உலகு அறிந்திராத சாதாரண கன்னியாஸ்திரியாகவே வாழ்ந்து மரணித்திருப்பார். ஆனால் அவரது சிந்தனைகள் எல்லாம் மற்றவரைப் பற்றி சார்ந்திருந்ததினால் உலகு போற்றும் அன்னையாகப் பிரகாசிக்கின்றார்.

ஆகவே தாய் தன் குழந்தையை அன்பு செய்ததுபோல் நாம் அனைவரையும் அன்பு செய்வோம். நாம் வேண்டுமென்று பிறருக்கு வேதனை கொடுப்பதில்லை. நாம் அறியாமலே பிறர் வேதனைப்படக் காரணமாக இருந்திருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்வதில்லை. எனவே நாம் செயல், சொல்,சிந்தனையால் பிறர் வேதனைப்படக் காரணமாகாதிருக்க எமது வாழ்வை இயேசுவிற்கு அர்ப்பணிப்போமாக!

க.அருள்நேசன், குருநகர்.

STUDY IN
United Kingdom
APR / MAY INTAKE IS IN PROCESS
O/L- A/L English சித்தியுடன் அனுமதி பெற்றுக்கொள்ளலாம்
22nd FEB 2010 முதல் அமுலுக்கு வரும் CAS System and Sponsorship Management System புதிய நடைமுறையின் கீழ் April / May Intakeகளுக்கான Student Visa செய்து தரப்படும். Appeal/ Addministrative Review (மறுக்கப்பட்ட விசா தொடர்பில்) ஆவணங்கள் வெற்றிகரமாக செய்து தரப்படும்
மற்றும் அனைத்து விசாக்களுக்குமான ஆலோசனைகளும் நிபுணத்துவமான முறையில் ஆவணங்கள் தயாரித்தும் தரப்படும்.
Eisc EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan) Colombo 6. Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com.
Contact: Robin - 0777 222 422 Selva - 0714 299 935
Web: www.expresslanka.com
12.03.2010 - 14.03.2010 வரை யாழ்.மாணவர்கள் British College of Higher Studies இல் பதிவுசெய்து Letter of offer ஐ பெற்றுக்கொள்ளலாம்.
Branch: No.15, Sriampiady Lane, Off Stanly Road, Jaffna.

## வந்தது மின்மாற்றி; நீங்கின சிரமங்கள்!

வடமராட்சி, மார்ச்.13

அல்வாய் கிழக்கு-புலோலி வட மேற்கு கிராமங்களின் மின் விநியோகத்திற்கென புதிய மின்மாற்றி ஒன்றை தெருமுடி மடத்தடி-தம்பசிட்டி வீதியில் இலங்கை மின்சார சபையினர் நிறுவியுள்ளனர்.

இப்பகுதியில் மின்மாற்றி நிறுவப்படாமையினால் இக்கிராமங்களுக்கான மின் விநியோகம் பல ஆண்டுகளாக வலுக் குறைந்த நிலையிலேயே இருந்து வந்தது. இதனால் மின் பாவனையாளர்கள் குறிப்பாக மாணவர்கள் இரவு நேரத்தில் படிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

புதிய மின்மாற்றி நிறுவப்பட்டதையடுத்து இக்கிராமத்திற்குச் சீரான, வலுவான மின்சாரம் கிடைத்து வருகின்றது. இதனால் மின் பாவனையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இருந்துவந்த சிரமங்கள் நீங்கியது.

(04-236)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்.13

யாழ்.புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா.நாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக தீவகவலய திட்டமிடல் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக வலயப் பொறுப்பாளர் கே.வதிமகன், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் ந.இராசதுரை ஆகியோரும் கலந்துகொள்வர். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## புனித நகரின் புனிதத்தைப் பாதுகாப்போம்

நான் இந்தப் பிரதேசத்தின் பாரம்பரிய சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எமது நல்லூருக்கு இப்பொழுது தென்னிலங்கையிலிருந்து அதிகளவில் பக்தர்களும் உல்லாசப் பிரயாணிகளும் வந்து தரிசித்துப் போகும் நிலை கண்டு மிக்க மகிழ்ச்சி. இலங்கைத் தீவு முழுவதற்கும் முருகனின் அருள்கிடைப்பதையிட்டு மிகவும் மன நிறைவு கொள்கிறேன். எங்களைவிட தென்னிலங்கை மக்கள் மிகவும் பக்தி பூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் தரிசிக்கிறார்கள். அவர்களின் வருகை நல்லுணர்வுக்கும், புரிந்துணர்வுக்கும் நல்லுதாரணமாகும்.

இந்த நேரத்தில் கோயிலில் தென்கிழக்கு, தெற்குப்பக்கம் அன்னாசிப்பழம்,கித்துள் பனங்கட்டி, ஐஸ்கிறீம், கடலை வியாபாரம் நாள் முழுவதும் நடைபெறுகிறது. அத்துடன் சிறிய வாகனங்களில் மெத்தை, அலுமாரி வியாபாரமும் தாராளமாக நடைபெறுகிறது. மாலைவேளையில் மேற்கு வீதியில் ஆதீனப் பக்கமாக பூக்கன்றுகள் முதலியன என்று அமோகவியாபாரம் நடைபெறுகின்றது.

இரவுப் பொழுதில் தெற்கு வீதி முழுமையாக மலசல கூடமாகமாறுகிறது. அத்துடன் நல்லூர் சிவன் கோயில்,ஆதீனம் என்பவற்றின் பின்பக்கம் முழுவதுமாக (பாவனைக்குரிய கதவுகளுட்பட)மறைக்கப்பட்டுத் தறப்பாள்களால் கட்டப்பட்ட கடைகளாக மாற்றப்பட்டுள்ளது. ஆதீன முதல் சன்னிதானத்தின் சமாதியில் இடம்பெறும் பூசைகள் என்றும் மன அமைதியுடன் தரிசிக்க முடியாதளவுக்குப் பேரிரைச்சலாக இருக்கும். வியாபாரிகளின் கூவும் ஒலிகள் சிவன் கோயிலின் பின்பக்கத்தில் அமைந்துள்ள தெட்சணாமூர்த்தி, ஆறுமுக சுவாமிகளுக்குரிய பூசைகள் அமைதியுடன் தரிசிக்க முடியாதளவுக்குப் பேரிரைச்சல். மாலை தொடங்கும் வானொலிப் பெட்டிகள் விளம்பர வாகனங்களின் ஒலி பெருக்கிகளின் சப்தம் இரவு பத்து மணிவரை நீடிக்கின்றது. இந்து விடுதிக்குப் பின்னாலுள்ள பருத்தித்துறைக்கு ஏறும் பஸ்தரிப்பு நிலையம் முற்றாக மறைக்கப்பட்டு கடைகள் கட்டப்பட்டுள்ளன. பஸ் தரிப்பிடம் துணிகள் காயவிடும் இடமாக மாற்றப்பட்டுள்ளது. கடைகளுக்கு முன்னாலிருந்து பஸ் ஏறமுடியாமலுள்ளது. பிராமணர் கட்டுக் குளமும்,அருகிலுள்ள மலசல கூடமும் மிகமோசமான சூழல் மாசடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இக்குளம்தான் சுற்று வட்டாரத்திலுள்ள குடும்பங்களின் நிலத்தடி நீராதாரமாகவுமுள்ளது. யோகர் சுவாமி, செல்லப்பா சுவாமி.... இன்னும் பலரின் காலடிபட்ட இப்பிரதேசத்தை அன்றாடச் சந்தையாக்க வேண்டாமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்புனித நகரம் பாதுகாக்கப்பட வேண்டும். சந்தைகள், சந்தைகள் நடை பெறும் இடங்களிலேயே இருக்க வேண்டும். இங்கு அல்ல. இப்பிரச்சினையை இப்பிரதேசத்திலும்,உலகெங்கும் வாழும் இந்துக்களின் உணர்வுகளுடனும், உயிர்த்துடிப்புடனும் சம்பந்தப்பட்ட விடயமாகப் பார்க்கப்பட வேண்டும். தனியே அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டாமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எல்லோரும் சேர்ந்து இப்புனித பூமியைப் பாதுகாப்போம். யாவரும் நல்லாதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றேன்.

நல்லூர். ப.வைகுந்தவாசன்.

## கைதடி வடக்கிற்கான பஸ் சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து கைதடி வடக்கிற்பான பஸ்சேவை கடந்த 4 வருடங்களாகவே சீரற்ற நிலையில் உள்ளது

காலையில் மட்டும் 7 மணி ,7.30 மணியென தாம் நினைத்த நேரத்தில் கைதடி வடக்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்காக ஒரே ஒரு சேவையை நடத்துகின்றனர். அது பாடசாலைச் சேவையெனக் கூறுகின்றார்கள். ஆனால் நேர ஒழுங்கு எதுவுமே இல்லை.பாடசாலை விட்டதும் மாணவர்களை ஏற்றிவராத சேவையில் காலையில் பாடசாலை மாணவர்கள் ஏற முன்வருவார்களா?

6 கிராம அலுவலர்கள் பிரிவுகளைக்கொண்ட கைதடிப்பிரதேசத்திலிருந்து நூறு வரையிலான மாணவர்கள் யாழ். முன்னணிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றார்கள்.

அதிகரித்த வாழ்க்கைச் செலவுடன் போராடும் நடுத்தர வறிய குடும்பங்களின் பெற்றோராகிய எமக்கு மாதம் 2000.ரூபா வீதம் ஒரு பிள்ளைக்கு கொடுத்து தனியார் பாடசாலைச் சேவையில் அனுப்பமுடியாதுள்ளது.

இச் சேவை குறித்து யாழ். பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும்,யாழ். சாலை முகாமையாளரிடமும் கேட்டால், ஆளணி பற்றாக்கறை,பஸ்கள் போதாமை, மீள் குடியேற்றத்துக்கான சேவைக்காக பஸ் கொடுத்தல் போன்ற காரணங்களைக் கூறுகிறனர். அதேவேளை எமது பக்கத்துக் கிராமமான நாவற்குழி, கோயிலாங் கண்டித்துறைக்கு பாடசாலைச் சேவை உட்பட 4 சேவைகளைக் கிரமமாக நடத்துகின்றனர். அதற்கு வளப் பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. கைதடிச்சந்தியிலிருந்து கைதடி வடக்கு,நவபுரம் போன்ற இடங்களுக்கு 200 ரூபா ஆட்டோவுக்கு கொடுக்கவழியில்லாது நடந்துவரும் மக்களுக்கு விமோசனம் எப்போது கிடைக்கும்? ஒழுங்காகப் பஸ் ஓடினால் தானே மக்களும் நம்பி காத்திருந்து ஏறுவார்கள். திடிரென ஓடவிட்டு சனமில்லையென நிப்பாட்டுவது எவ்வகையில் நியாயம்.

நாம் பார்க்க பக்கத்து கிராமத்திற்கு ஒழுங்காக சேவை நடத்துவதும் எவ்வகையில் நியாயம். 2006 ஓகஸ்ட் மாதத்திற்கு முன்பு ஒழுங்காக நடைபெற்ற கைதடி வடக்குச் சேவை மீண்டும் ஒழுங்காக நடைபெற வேண்டிய எமது கோரிக்கை நிறைவேறுமா?

கைதடி. ஒரு பெற்றோர்.

## நிர்வாகிகள் தெரிவு

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்துக்கான புதிய நிர்வாகசபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக சு. சே. குலநாயகம், உபதலைவராக மு.தங்கவேல், செயலாளராக பூ.அகமணிதேவர், உபசெயலாளராக நா.பாலேந்தரன் மற்றும் பொருளாளராக இ. யோகச்சந்திரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 6 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9)

* * *

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைப் பணியாளர் நலன்புரிச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி பிரேமா சிவசண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. நடப்பாண்டு நலன்புரி சங்க நிர்வாகிகளாக கீழ் வருவோர் தெரிவாகினர். தலைவர் டாக்டர் ஜெபநாமகணேசன். உபதலைவர் டாக்டர் ந.நித்தியகுமார், செயலாளர் க.தாயாகரன், உபசெயலாளர் சி.சரவணபவன், பொருளாளர் க.பேரின் பம், அத்துடன் நிர்வாகசபை உறுப்பினர்கள் 6 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (9-ரி-160)

* * *

சமூக அபிவிருத்தி மன்றத்தின் புதிய நிர்வாகசபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக திருமதி ருக்குமணி ஆனந்தவேலும், துணைத்தலைவராக திருமதி நவநீதம் ஜெகதீசனும், இணைப்பாளராக திருமதி. மகேஸ்வரி நாகரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக எட்டுப் பேர் தெரிவு செய்யப்பட்டனர். (9-ரி-224)



## சமய, சமூக தொண்டுகளில் அர்ப்பணித்து பணிபுரிந்தவர்

சமூக, சமய தொண்டுகளில் தன்னை முழுமையாகவே அர்ப்பணித்தவர் அமரர் கார்த்திகேசு சிவபாலன்.

யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த இவர் பல்வேறு அமைப்புகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மக்களுக்கு மகத்தான சேவையாற்றியுள்ளார். விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் பொது அபிவிருத்தி போன்ற துறைகளில் அதிகமாகச் சேவையாற்றியுள்ளார்.

அதனைவிட நீர்வை கந்தசுவாமி கோயிலின் பரிபாலன சபையின் செயலாளராக இருந்து ஆலய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனம், வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபை, கோப்பாய் கால்நடை வளர்ப்போர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புக்களிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் சேவையாற்றியுள்ளார்.

அமரர் கார்த்திகேசு சிவபாலன் சமாதான நீதிவானாகப் பதவிபெற்றும் பணியாற்றியாற்றினார்.

நீர்வேலிப் பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அவரின் பங்கு முக்கியமாக அமைந்துள்ளது. குறிப்பாக முன்னர் போக்குவரத்து இன்றி பாழடைந்து கிடந்த கோப்பாய்-நீர்வேலி இணைப்பு வீதியை மீளவும் திறப்பதற்கும் அதற்கான அபிவிருத்திப் பணிகளுக்கும் முன்னின்று செயற்பட்டவர்.

### நீத்தார் நயப்புரை

தற்போது நீர்வேலி தெற்கு கயிற்றப் புலம் வீதியை புனரமைத்து வீதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கு பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு அயராது ஈடுபட்டவர்.

விவசாய சம்மேளனத்தினூடாக விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் பல்வேறு நடவடிக்கைகளையும் அவர் மேற் கொண்டுள்ளார்.

ஊரில் இடம்பெறும் சிறுசிறு பிணக்குகள் மற்றும் பிரச்சினைகளை தான் முன்னின்று சமாதானப்படுத்தி அவற்றிற்குத் தீர்வை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் சமரசம் ஏற்படுத்துவதிலும் அக்கறையுடன் செயற்பட்டவர்.

சமூக, சமய பணிகளில் தன்னை வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தவர். சிவநெறிச் செல்வர் கார்த்திகேசு சிவபாலன் என்பவரைத் தெரியாதவர்கள் வலி. கிழக்குப் பிரதேசத்தில் யாருமே இருக்க முடியாது; இருக்கவும் மாட்டார்கள்.

எந்த நேரமும் நெற்றியில் விபூதியும், வேட்டியும் அணிந்து தமிழர் பண்பாட்டில் தனது சமூகப் பணியை ஆற்றிய பெருமை அவருக்குத் தனித்துவ அடையாளமாகும்.

நீர்வேலி தெற்கில் இரவுநேரம் வீதியில் தடுமாறிய அநாதரவாக நின்ற வயோதிபரைத் தனது சைக்கிளில் ஏற்றி சனசமூக நிலையை மண்டபத்தில் தங்க வைத்து பராமரித்த பெருந்தகை அமரர் சிவபாலன்.

இவ்வாறு அநாதைகள், சிறுவர்கள் போன்றவர்களுக்கு ஏற்ற வழிகளில் சேவையாற்ற வேண்டுமோ அந்த வழிகளில் சேவையாற்றுவதற்கும் பின்னிப்பதில்லை.

அவரது திடீர் மரணம் நீர்வேலிப் பிரதேசத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

நந்தன்.

## புத்தக சாலை



### பாடசாலையும் ஆசிரியரும்

பேராசிரியர் மா. சின்னத்தம்பி எழுதிய '' பாடசாலையும் ஆசிரியரும்'' ஓர் ஊடக வழிப்பார்வை எனும் நூல் வெளிவந்துள்ளது.

'' எங்கள் கல்விப் புலம் சார்ந்த ஆழமான கேள்விகளை முன்வைத்து பதிலுக்கான தேடலின் வடிவில் கட்டமைக்கப் பட்டுள்ள கல்வியியல் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களின் புதிய நூலின் வரவு மகிழ்ச்சி தருகின்றது'' என்று யாழ். பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### அடையாளம்



யாழ். பரி. புதுமைமாதா ஆலயத்தின் இளைஞர் படைப்பாக்க இயக்கத்தின் வெளியீடான 'அடையாளம்' இதழ் வெளிவந்துள்ளது.

கவிதை, கட்டுரை எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி ''அடையாளம்'' தன்னை பல்துறைசார் சஞ்சிகையாக அடையாளப்படுத்தி முதல் இதழாக மலர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தேடலும் விமர்சனங்களும்



'பூரணி', 'அலை' போன்ற ஈழத்து இலக்கியப் பரப்பில் அதிர்வினை உண்டுபண்ணி நின்ற சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் பணிபுரிந்த இ.ஜீவகாருண்யனின் 'தேடலும் விமர்சனங்களும்' எனும் நூலை தமிழியல் மற்றும் காலச்சுவடு பதிப்பகம் ஆகியன இணைந்து வெளியிட்டுள்ளன.

பொதுவாகவே இலக்கியம் மட்டுல்லாது தன்னுடைய தூரதரிசனப் பார்வையில் சகல பக்கங்களிலும் படரவிடக்கூடிய நுண்மையான-தனித்துவமான- ஆளுமைமிக்க ஜீவகாருண்யனின் இந்த எழுத்துகள் புதியதொரு வாசகத் தளத்துக்குள் படிப்போரைப் பயணிக்க வைக்கின்றன.

பொதுவாகவே தற்போது வெளிவரும் நூல்கள், கவிதை, சிறுகதை, கட்டுரை என்பன போன்ற குறித்ததொரு வரையறைக்குள் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டுள்ள சூழலில் அத்தகைய மரபார்ந்த தளைகளை அறித்தெறிந்துவிட்டு எவ்வித இலக்கிய வடிவங்களுக்குள்ளும் ஒடுங்கிவிடாது பல்வகைத் தன்மையான படைப்புகளை 'தேடலும் விமர்சனங்களும்' நூல் தாங்கி நிற்கின்றது.

ஆத்மார்த்தமான தேடல், போலியான இலக்கிய முகங்கள் பற்றிய சமூகப் பிரக்ஞையுடனான சாடல், தனிமனித விசாரங்கள் என்பனவெல்லாம் ஜீவகாருண் யனின் எழுத்துகளில் முதன்மைபட்டு நிற்கின்றன.

இதுதவிர பின்னிணைப்பாய் உள்ள மு.தளையசிங்கம், மு.பொன்னம்பலம், சுந்தரராமசாமி ஆகியோரின் கடிதங்கள் ஜீவகாருண்யனுக்கும் மேற்குறித்த படைப்பாளிகளுக்கும் இடையேயுள்ள இலக்கிய ரீதியான பிணைப்பினையும் வெளிக்கொணர்கின்றன.

வரண்டு போய்க் கிடக்கின்ற தமிழ் இலக்கியச் சூழலுக்கு ஜீவகாருண்யனின் 'தேடலும் படைப்புலகமும்'புதிய ஜீவனை ஊட்டி,தொடர்ந்தும் பலமுடன் பயணிக்க வைக்குமென நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் 5 மாவட்டப் பதிவகங்களிலும் கணனி மயப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள்

## ஐ.நா., ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கியுள்ளன

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் வடக்கில் உள்ள வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு காணி மாவட்டப் பதிவக செயற்பாடுகள் நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாவட்டங்களின் அரச அதிபர்களின் பெரும் உதவியுடன் பதிவாளர்நாயகம் ஈ.எம். குணசேகர தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி ஆவன செய்துவருகின்றார்.

கிளிநொச்சி காணி மாவட்ட பதிவகம் அரச அதிபரால் புதிதாக உருவாக்கப்பட்ட கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத் தீவு விவாக,பிறப்பு, இறப்புச் சான்றுகள் 'ஸ்கான்' செய்யப்பட்டு கணனி மூலம் சான்று வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான உதவிஸ்ய அரசமைப்பு இனவிவகார அமைச்சு ஐ.நா அபிவிருத்தித்திட்டம் மூலம் வழங்கியுள்ளது.

வவுனியா,காணிப்பதிவகத்திலும், பிரதேச செயலகத்திலும்,மன்னார்,கிளிநொச்சி காணி மாவட்டப் பதிவகங்களிலும் கணணி பொருத்தும், மென்பொருள் இடுதல், பயிற்சியளித்தல் ஆகிய நடவடிக்கைகள் இவ்வாரம் நடைபெறுகின்றன. அடுத்த வாரம் அளவில் அவ் அலுவலகங்கள் மூலம் அவ்வப் பிரதேசங்களுக்குரிய சான்றிதழ்கள் கணனி மூலம் உடனுக்குடன் வழங்கக்கூடியதாக இருக்கும்.

முல்லைத்தீவு செயலகம் ஆரம்பிக்கப்பட்டு காணி மாவட்டப் பதிவகத்திற்கு பொருத்தமான கட்டடத்தை அரச அதிபர் ஒதுக்கித்தரவுள்ளார். அதன்பின் முல்லைத்தீவு மாவட்டத்திலும் கணினி மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும். அதுவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சான்றிதழ்களை கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் காணிப் பதிவகங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது ஒரு அவசரமும் அவசியமுமான நடவடிக்கையாக குறியகாலத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன்மட்டுப்படுத்தப்பட்ட நிதி உதவியுடன் செய்யப்பட்டுள்ளதால் சிறுசிறு குறைபாடுகள் உள்ளன. அதாவது 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னான கொழும்பு மத்திய பதிவேட்டறையில் உள்ள இணைப்பிரதிகளை ஸ்கான் செய்ததன் மூலமே இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆதலால் நூற்றுக்கு நூறுவீதம் எல்லோருக்கும் சான்று உடனடியாக வழங்கப்படும் என்பது சாதியமில்லையாயினும் பரீட்சார்த்தத்தின்போது 90 வீதமான வெற்றியளித்துள்ளது. எனினும் கணினி மூலம் பெறமுடியாதவர்களது சான்றுகளை சிறிது தாம தமாக வேனும் பெற்றுக் கொடுக்க ஆவண செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட் டச் சான்றுகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இவ்வாண்டில் கணினிமயப்படுத்தம் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

உங்கள் சான்றிதழ்களை உங்கள் குடும்பத்தவர்களின் சான்றிதழ்களை இரண்டு பிரதிகளையாவது நேரகாலத்தோடு எடுத்து உங்கள் வசம் வைத்திருங்கள். இந்தச் சிந்தனை யாவருக்கும் இருக்குமாயின் அவசியமும் அவசரமுமான காலங்களில் கலங்கி நிற்கத் தேவையில்லை. கடந்தகால அசாதாரண நிலையிலும் அதிகாரிகள் முடிந்தளவில் ஆவணங்களைப் பாதுகாத்துள்ளனர். ஆனால் எல்லாவற்றையுமல்ல என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளத் தான் வேண்டும்.

**ந.சதாசிவ ஐயர்,**
**பிரதிப் பதிவாளர் நாயகம்,**

### அடகுப் பொருள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்,சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி,மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.01.2009இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத காலாவதித் திக தியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 20.03.2010சனிக்கிழமை காலை 9.00மணிக்கு இல.212,214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500)செலுத்தி

அல்லது

தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(சி/565639) ஹற்றன் நஷனல் வங்கி.

### வீடு வாடகைக்கு உண்டு

வீட்டில்அறைகள்,நாள்,கிழமை,மாத வாடகைக்கு உண்டு.
இல.230, இலுப்பையடிச் சந்தி,நாவலர்வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.0773611282

### Piano/Violin NOTES

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிக்கான 300சினிமாப் பாடல்களின் NOTES விற்பனைக்குண்டு. Organ, Guitar புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக் கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
KARAVEENA ISAI MANRAM,
75,TEMPLE ROAD, NALLUR,
T.P.NO.0777031293

### கந்தரநுபூதி மனனப் போட்டி

சுழிபுரம், பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலர்ச்சார்ச்சனையையொட்டி நடைபெறும் கந்தரநுபூதி மனனப் போட்டி வழமை போல் நடைபெற ஏற்பாடுகள் பஜனை சபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போட்டியில் பங்கு கொள்ளுபவர்கள்தங்கள்பெயரை பஜனைச் சபை செயலாளரிடம் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். பாடல்களை ஒப்புவிப்பர்களுக்கு பரிசுகள் வைகாசி மாதம் ஆலயத்தில் நடைபெறும் சங்காபிஷேக தினத் தன்று வழங்கப்படும்.

(1-28)

### அந்தியேட்டி அழைப்பு



திருமதி
**பரமேஸ்வரி**
(உருத்திரா ரீச்சர்)
(முன்னாள் ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி)

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த காலஞ் சென்ற குமாரசாமி தம்பதியினரது சிரேஷ்ட புத்திரியான எமது அன்புத் தெய்வத்தின் மறைவு கேட்டு நேரிலும் தொலை பேசியிலும் தந்தி மூலமும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் நாளை (14.03.2010)ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும். மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினைத் தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

23, அத்தியடி- புது றோட்,
யாழ்ப்பாணம். (சி/565633) குடும்பத்தினர்.

### தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி



திரு.கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்

'இந்தமண் எங்களின்
சொந்தமண் என்று
சொன்னவர்க்கு
அழிவேயில்லை
என்பதனை
உணர்த்திடுவோம்.....

தடுமாறும்
தலைமையின்,
நிலைகண்டு தளராது
தமிழ்த்தேசியம் காத்திட
தமிழ் மக்களை
அணைத்து முன்னணி
அமைத்துமே அரசியல்
களமாடும்
உங்கள் தலைவன்.

2

**திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
அவர்களை பெருவெற்றிபெறச் செய்திடுவோம்

| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | | X |
|---|---|---|

அரசறிவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.

### 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 ★ 04 ★ 1971



உதிர்வு 13 ★ 03 ★ 1985

**செல்வன் துரைசிங்கம் சரவணன்துரை**
(வகுப்பு 8 மாணவன், அச்சுவேலி மத்திய கல்லூரி)

வளரும் இளவயதில் விதி செய்த சதியால்
கதியின்றிக் கலங்குகின்றோம்
காத்திருந்த எம்மை கதிகலங்கவிட்டு - கந்தன் திருவடியில்
எதிர்பார்த்திருப்போம் எப்போது நீ வருவாய்.

[illegible] கரைக்காடு,
அச்சுவேலி.

அப்பா, அம்மா,
பெரியம்மா குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தனித்துவங்களைப் பேணும் சுயாட்சி அமைப்புக்கள் கொண்ட பல்தேசிய நாடாக்குவதே நிரந்தர தீர்வு

**எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள 7 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் புதிய ஜனநாயகக் கட்சியின் தேர்தல் கொள்கை விளக்கம் இங்கே 'உதயன்' தேர்தல்களத்தில் முழுமையாகத் தரப்படுகின்றது.**

இலங்கை மக்கள் அனைவரும் இரண்டு நிலைகளில் மோசமான நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் அனுபவித்த வண்ணமே உள்ளனர். ஒன்று பேரினவாத முதலாளித்துவ ஒடுக்கு முறை காரணமாக தேசிய இனப் பிரச்சினையின் தீர்வின்மை. இரண்டாவது வர்க்க ஒடுக்கு முறையினால் உருவாகி வளர்ந்துள்ள பொருளாதார நெருக்கடிகளும் பிரச்சினைகளும் இவற்றுடன் கூடவே பல்வேறுபட்ட அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை மக்கள் எதிர் கொண்டு அவற்றுடன் மல்லாட வேண்டியவர்களாக இருந்து வருகின்றனர். இவையாவற்றி லும் ஆளும் வர்க்க சக்திகளாக உள்ள அரசாங்க, எதிர்த்தரப்பினர் அனைவரும் ஒரு புறமாகவும் ஏகப் பெரும்பான்மையான அனைத்து உழைக்கும் வர்க்க மக்கள் மறுபுறமாகவும் இருந்து வருகின் றனர். இதில் காணவேண்டிய மற்றொரு உண்மையாதெனில் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையிலும் அடிப்படை வர்க்க முரண்பாட்டுப் பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினையிலும் அடிப்படை வர்க்க முரண்பாடு தோற்றுவிக்கும் பொருளாதாரப் பிரச்சினையிலும் உலக மேலாதிக்க ஏகாதிபத்திய சக்திகளும் பிராந்திய மேலாதிக்க வாதிகளும் தலையீடுகளையும் குறுக்கீடுகளையும் மேற்கொண்டு வந்தமையாகும். மேற் கூறியவற்றின் பாரிய தாக்கங்களையும் எதிர்விளைவுகளையும் நாட்டின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டம்சங்களின் அனைத்துத் தளங்களிலும் மக்கள் துன்பதுயரங்களாக அனுபவித்து வருகிறார்கள். எனவே இவை பற்றிய புதிய-ஜனநாயக கட்சியின் அடிப்படைக் கொள்கை நிலைப்பாட்டினையும் அவற்றுக்கான கோரிக்கைகளையும் சுருக்க வடிவில் பொதுத் தேர்தல் கொள்கை விளக்கமாக முன்வைக்கின்றோம்.

### பிரதான முரண்பாடு தேசிய இனப்பிரச்சினையே

இலங்கையின் பிரதான முரண்பாடு தேசிய இனப்பிரச்சினையே என்பதைப் புதிய ஜனநாயகக் கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளது. போரின் முடிவு தேசிய இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. பேரினவாதம் அரச இயந்திரத்துடன் மேலும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளதனால், தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் ஆகிய மூன்று தேசிய இனங்கள் மீதுமான தேசிய இன ஒடுக்கல் தீவிரமடைந்துள்ளது. மூன்று தேசிய இனங்களும் தங்களது இருப்பின் தன்மைக்கமைய வெவ்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

பொதுப்பட எல்லாச் சிறுபான்மைத் தேசிய இனத்தவரும் பாரபட்சமாகவே நடத்தப்படுகின்றனர். அவர்களுடைய தாய் மொழிக் கல்வியுரிமை, தங்கள் மொழியில் கருமங்களைச் செய்விக்கும் உரிமை என்பன சட்டவிரோதமான முறையில் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. அதைவிட உயர் கல்வி, தொழில்பயிற்சி, மற்றும் உத்தியோகத்துறை இட ஒதுக்கீடுகள் அவர்களுக்குப் பாதகமாகவே உள்ளன. அதற்கும் மேலாகப் பாரம்பரிய பிரதேசங்களில் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான பேரினவாத இன ஒடுக்கல் போராக முன்னெடுக்கப்பட்டதன் பயனாகத் தமிழ் மக்கள் பெருமளவிலான உயிரிழப்புக்கும் உடற் சேதத்துக்கும் பாரிய பொருள் நட்டத்திற்கும் ஆளாகியுள்ளனர். உள் நாட்டிலும் வெளிநாடுகட்கும் இடம் பெயருமாறு பல லட்சக்கணக்கானோர் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இதன் நடுவே, உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பேரில் தமிழரிடமிருந்து பறிக்கப்பட்டுள்ள நிலத்திற்கும் மேலாகத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் தமிழ




ரைத் தமது பிரதேசத்திலே சிறுபான்மையினராக்கும் நோக்குடன் தீவிரப்படுத்தப்படுகின்றன.

மேட்டுக்குடிச் சிந்தனையால் வழிகாட்டப்பட்டதனா லேயே தமிழ் மக்களைப் பேரழிவினுள் தள்ளிவிட்டன. எனவே இத் தவறுகளி னின்று மீண்டு, உழைக்கும் வர்க்கங்கள் என்ற அடிப்படையில், தமிழ் மக்களை ஒன்று படுத்தி அவர்களுக்கும் நாட்டின் பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்குமிடையில் போராட்ட ஐக்கியத்தை உருவாக்கி நாலாங்கட்டப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளின் போராட்டம் வீழ்ச்சியை நோக்கிச்செல்ல முன்பிருந்தே இவ்விடயம் பற்றிப் புதிய-ஜனநாயகக் கட்சி தெளிவாகக் கூறிவந்துள்ளது.

### முஸ்லிம் மக்கள் மீதும் ஒடுக்குமுறை

முஸ்லிம்கள் நாடு முழுவதும் பரவி வாழ்வதால் அவர்கள் வாழுகிற ஒவ்வொருஇடத்லிலும் வெவ்வேறு விதமான ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவர்களுடைய தொழில்களும் சிறு வணிகமும் பேரினவாத வெறிக் கும்பல்களது தாக்குதல்களுக்கு உள்ளாவதுடன் காலத்துக் காலம் வெவ்வேறு பிரதேசங்களில் முஸ்லிம் சமூகங்கள் பயங்கரமான பேரினவாத வன்முறைக்கு முகங்கொடுத்துமுள்ளன. அதைவிடக் குறுகிய தமிழ்த் தேசியவாதம் முஸ்லிம்களை இலக்கு வைத்துப் படுகொலை



உள்ளது.

எனவே நாட்டின் தேசிய இனப்பிரச்சினை மேலும் தீவிரமாகிச் சிறுபான்மைத் தேசிய இனங்கள் கடுமையாக ஒடுக்கப்படுகிற இச்சூழலில், தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்றி இந்த நாட்டின் பிற பிரச்சினைகளைத் தீர்ப்பது இயலாது என்பதைப் புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்துகிறது. அந்த நோக்கில் நீண்ட காலத் தீர்வாகப் பின்வரும் கருத்தைப் புதிய ஜனநாயகக் கட்சி தொடர்ந்து முன்வைத்து வந்துள்ளது.

இலங்கையின் சகல தேசிய இனங்களையும் தேசிய சிறுபான்மையினரை

## தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வின்றி பிற பிரச்சினைகளைத் தீர்க்க இயலாது

### திறந்தவெளி சிறைக்கூடங்களாக அகதி முகாம்கள்

அகதி முகாம்கள் எனப்படும் திறந்த வெளிச் சிறைக்கூடங்கள் ஒரு புற மிருக்க, பல ஆயிரக்கணக்கானோர் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் வழக்கோ விசாரணையோ இல்லாது சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் வாடுகின்றனர். தமிழ் மக்களும் மலையகத் தமிழரும் மட்டுமன்றி முஸ்லிம்களும் சிங்களவரும் இவ்வாறு அரசியற் காரணங்கட்காகத் துன்புறுத்தப்படுகின்றனர். இந்த நிலைக்கான மூல காரணம் பேரினவாத அரசின் திட்டமிட்ட இன ஒடுக்கலே. எனினும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தமிழரே தீர்த்துக் கொள்வர் என்று கூறப்பட்டு முதற் கட்டமாகப் நாடாளுமன்ற அரசியற் பேரங்களாகவும், இரண்டாங் கட்டமாகச் சாத்வீகப் போராட்டங்களாகவும் முன்னெடுத்த முயற்சி, மூன்றாங் கட்ட மாக ஆயுதப் போராட்ட வடிவை எடுத்துத் தோற்றது. தோல்விக்கான காரணங்களில் இரண்டு அடிப்படையானவை. ஒன்று எந்த நிலையிலும் தேசிய இன விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப்படவில்லை என்பது. அதுவே ஆயுதங்களை முதன்மைப் படுத்தவும் ஜனநாயக நடைமுறைகளை நிராகரிக்கவும் காரணமானது. மற்றது போராட்டத்தைக் குறுந்தேசியவாத நோக்கில் பிற ஒடுக்கப்பட்ட மக்களுடைய போராட்டங்களிலிருந்து தனிமைப் படுத்தியமை. அதன் விளைவாக மேலாதிக்க வல்லரசுகளை நம்பியும் அவற்றுக்குச் சார்பாக நின்று உலகின் ஏகாதிபத்திய, மேலாதிக்க விரோதப் போராட்டங்கட்கு ஆதரவுதராது பாதகமாகவே செயற்பட நேர்ந்தது.

### தனிமைப்படுத்தப்பட்ட போராட்டம்

அதனால் தமிழர் விடுதலைப் போராட்டம் இலங்கையினுள்ளும் உலக மட்டத்திலும் தனிமைப்பட்டுப் போக நேர்ந்தது. இம் மூன்று கட்டப் போராட்டங்களும் ஒரே தவறான குறுந் தேசியவாத உயர் வர்க்க

களையும் நடத்தியுள்ளது. 1990 ஆம் ஆண்டில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டமை அவர்களுக்குகெதிரான ஒரு பெரிய கொடுமையாகும். அரசாங்கம் ஒருபுறம் தமிழரையும் முஸ்லிம்களையும் பிரித்து வைக்கும் விதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், முஸ்லிம்களின் நிலங்களையும் உடைமைகளையும் உரிமைகளையும் பறிப்பதில் பேரினவாதக் கும்பல்களுக்கு உடந்தையாகவே செயற்பட்டு வந்துள்ளது.

### மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு

மலையகத் தமிழ் மக்கள், 1948 ஆம் ஆண்டு குடியுரிமை பறிக்கப்பட்ட போதிலிருந்து தங்களது இருப்பிற்காகப் போராடி வந்துள்ளனர். 1963ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை அவர்களுக்கு இழைக்கப்பட்ட ஒரு பெரும் அநீதி. அதன் நடைமுறைப்படுத்தலுக்கு ஏதுவாக அவர்கள் மீதான கொடிய உழைப்புச் சுரண்டலும் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்பு அவர்களிற் பலர் தோட்டங்களிலிருந்து விரட்டப்பட்டமையும் அமைந்தன. நீண்ட போராட்டத்தின் பயனாக அவர்கள் வென்றெடுத்த வாக்குரிமை மூலம் அரசியலில் அவர்களுக்குக்கிடைக்கக்கூடிய குரலை அடக்கும் முயற்சிகள் தீவிரமாகியுள்ளன.

### மலையகத்திலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தோட்டங்களை அழிக்கும் மேல் கொத்மலைத் திட்டம் போன்றன ஒரு புற மும் அவர்கள் மீதான பேரினவாத வன் முறை இன்னொரு புறமும் தொடர்கின்றன. மலையகத் தமிழர் ஒரு தேசிய இனமாகத் தம்மை அடையாளப்படுத்து வதை மறுக்கும் செயல்களில் பேரினவாதிகளுக்கு உடந்தையாக மலையகத் தலைவர்கள் எனப்படுவோரும் செயற்படுகின்றனர். இத்தகைய மலையக தம் தலைமைகளை மக்கள் அடையாளம் காணவேண்டியும்

யும் சமமாகக் கருதும் ஐக்கிய இலங்கையினுள் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான சுயாட்சிப் பிரதேசங்களையும், தொடர்ச்சியான பிரதேசங்களைக் கொண்டிராத சமூகத்தினருடைய தனித்துவத்தைப் பேணும் வகையிலான சுயாட்சி அமைப்புக்களையும் கொண்ட பல்லின பல் தேசிய நாடாக இலங்கையை மீளக் கட்டியெப்புவதன் மூலமே நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான நிலைக்கக் கூடிய தீர்வைக் காண முடியும்.

### உடனடி நடவடிக்கை

அதேவேளை, போரின் விளைவுகளையும் பேரினவாதத் தாக்குதல்களின் நேரடிப் பாதிப்புக்களையும் கருத்தில் கொண்டு பின்வரும் உடனடியான நடவடிக்கைகளைப் புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்துகிறது.

* போரால் பாதிக்கப்பட்டு இடப்பெயர்வுக்குள்ளான அனைவரும், தாமதமின்றித் தமது சொந்த வதிவிடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.
* போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனரமைப்பு புனர்வாழ்வு மூலமான இயல்பு வாழ்வு மீட்கப்பட வேண்டும்.
* போரிலான சகல இழப்புக்களுக்கும் உரிய நட்ட ஈடு வழங்கப்பட்டு சுயசார் பின் அடிப்படையில் சமூகங்கள் தம் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப வாய்ப்பளிக்கப்பட வேண்டும். மக்கள் பெருந்தொகையாக வாழும் பகுதிகளி லிருந்து படை முகாங்கள் நீக்கப்பட வேண்டும்.
* வழக்கு விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உரிய நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.
* திட்டமிட்ட குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுச் சமூகங்களின் பாரம்பரியப் பிரதேச உரிமை பேணப்பட வேண்டும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



குடும்பத்தில் குதூகலம் சந்தோஷம் அதிகரிக்கும் நாள். தொழில் ரீதியாக மட்டுமின்றி, வேறு சில வகைகளிலும் பணவரவுகளைப் பெறலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் அகன்று பாசம் அதிகரிக்கும். உங்களைப் புரிந்து கொள்ளாமல் விமர்சித்த சிலர் இப்போது பாராட்டுவர். ஆதாயம், வெற்றி பெறும் நாள்.

### இடபம்



சிறிய வேலை ஒன்றுக்காக ஒரு முறைக்கு இரு முறை அலைய நேரிடலாம். கடன் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்த ஒரு விடயம் நடக்காமல் போனாலும், எதிர்பாராத ஒரு விடயம் நடக்கலாம். உடல் உபாதைகளை எதிர்கொள்ளலாம்.

### மிதுனம்



இறைவழிபாட்டின் மூலம் இன்னல்களைக் குறைக்க வேண்டிய நாள். சக ஊழியர்கள், அயலாருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். நொடியில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்றுக்காக பல மணி நேரம் காத்திருக்கலாம். உங்களுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பு கைநழுவிப் போகலாம்.

### கடகம்



மங்கையர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். நண்பர்களுடன் சேர்ந்து சில நல்ல காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். ஓய்வாக இருக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். பாராட்டுக் கிடைக்கும்.

### சிங்கம்



குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். நடந்து முடிந்த சில சம்பவங்களை அசை போட்டுப் பார்ப்பீர்கள். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். மாணவர்கள் பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் கொள்வர். உத்தியோகத்தர்கள் முக்கிய பொறுப்புகளை ஏற்றுச் செய்ய நேரிடலாம்.

### கன்னி



தேவையில்லாத விடயங்களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். பெண்கள் குடும்பப் பெரியவர்களின் விமர்சனங்களை சந்திக்கலாம். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். குல தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிலர் நீண்ட தூர பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம்

### துலாம்



ஆதாயங்களை விட செலவுகள் அதிகரிக்கும் நாள். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி விட்டு புதிய பொருள்கள் வாங்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் உத்தியோகத்தர்கள் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். மனதில் வஞ்சகத்தை வைத்துக் கொண்டு வெளியில் இனிப்பாகப் பேசும் உறவினர்களிடம் எச்சரிக்கை அவசியம்.

### விருச்சிகம்



சோர்வு, சோம்பல் இல்லாமல் எந்த வேலையையும் உற்சாகமாகச் செய்வீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையலாம். மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். சிறு பணவரவுகளைப் பெறலாம்.

### தனுசு



முக்கிய வேலை ஒன்றை மற்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு அது முடியுமோ அல்லது முடியாதோ என கவலை அடையலாம். வெளியூர்களில் இருக்கும் உறவினர்கள் சிலர் உங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு எரிச்சல் உண்டாக்கலாம். மறதியால் அவதியுண்டு.

### மகரம்



நல்லவர்களின் ஆதரவும், நட்பும் கிடைக்கும் நாள். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள், ஒரு வகையில் வந்த வரவுகளை மற்றொரு வகையில் செலவாகலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. சுகமான இனிய அனுபவங்களை பெறலாம்.

### கும்பம்



சிரமங்கள் இருந்தாலும், தொடங்கிய சில வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகள் சாதகமாக அமையலாம். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். முக்கியமான காரியமாக திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். அரசியல்வாதிகள் உற்சாகமாகக் காணப்படுவர்.

### மீனம்



நிதி நிலைமையில் மேம்பாடு காணும் நாள். தொழில் ரீதியாக வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். உறவினர்கள் உங்களின் குணம் அறிந்து நடந்து கொள்வர். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சக ஊழியர் ஒருவருக்கு எதிர்பாராமல் உதவிகள் செய்ய நேரிடலாம்.

## சுயநிர்ணய உரிமைகளின்.......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ தமிழ்,முஸ்லிம், மலையகத்தமிழ் மக்களுடைய வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் பாரபட்சமும் இனத்து வேஷ நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டு இனப்பகையைத் தூண்டுவோருக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★தமிழ்ப் பேசும் அனைத்து மக்களுக்கும் நாட்டின் எப்பகுதியிலும் தமது தாய் மொழியில் கற்கவும் அரச கருமங்கள் உட்பட்ட சகல காரியங்களையும் தமிழில் செய்வதற்குமான சட்ட ரீதியான உரிமை பேணப்படவேண்டும்.

★முஸ்லிம்களுக்குகெதிரான துவேஷத்தைத் தூண்டி அவர்களது சமூகங்கள் மீது தொடுக்கப்படும் வன்முறைகள் தடுக்கப்பட வேண்டும். முஸ்லிம்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் அவர்களுக்குரிய நிலத்தை அபகரிக்கும் நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும்.

★ மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த பகுதிகளில் அவர்களது இருப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

★ மலையகத் தமிழருக்கு, குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு போதிய சம்பள உயர்வு வழங்கப்பட்டு தமக்கான வீடுகளையும் பயிர்ச்செய்கை, கால் நடை வளர்ப்புத் தொழில்களை விருத்தி செய்து சுயாதீனமான ஒரு பொருளாதார இருப்பைப் பேணுவதற்காக நிலத்தையும் கொண்டிருப்பதற்கான சட்டப் படியான உரிமையும் வாய்ப்பு வசதிகளும் வழங்கப்படவேண்டும்.

★ கல்வி தொழில்வாய்ப்புக்களில் இன்னமும் பின்தங்கியே உள்ள மலையத் தமிழ்ச் சமூகத்தினருடைய கல்வி, தொழில் வாய்ப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்

இலங்கையின் எந்தத் தேசிய இனத்தின் இருப்பும் நிலைப்பும் சுதந்திரமும் சுபீட்சமும் பிற தேசிய இனங்களது நலன்களிலிருந்து பிரிக்க இயலாதவை. எனவே தமிழ், முஸ்லீம்,மலையகத் தமிழ் மக்களுடைய விடுதலையினின்று முழுநாட்டினது நலன்களையும் பிரித்து நோக்க இயலாது. அதே போல தேசிய மட்டத்திலும் ஒவ்வொரு சமூகத்தினுள்ளும் இருக்கிற வர்க்கம், சாதி, பால் அடிப்படையிலான ஒடுக்குமுறைகளை நாம் புறக்கணிக்க இயலாது. தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம், இன ஒற் றுமை என்கின்ற பேர்களில் சமூக ஒடுக்கு முறைகளைக் கண்டும் காணாமல் இருந்து வந்த போக்கு தமிழ் மக்களின் விடுதலைக்கு எவ்வகையிலும் உதவவில்லை என்பதை வரலாற்றில் பட்டறிவாக இங்கு மீண்டும் நினைவூட்ட வேண்டியுள்ளது.

தொழிலாளர்கள் போராடிப் பெற்ற பல தொழிற்சங்க உரிமைகளையும் சட்ட ரீதியான பிற தொழிலாளர் உரிமைகளையும் முதலாளிய உலகமயமாக்கலின் ஒரு பகுதியான தாராள தனியார் பொருளாதாரத்தின் கீழ் இழந்துள்ளனர்.

சாதியத்திற்கு எதிராக எமது மார்க்சிய லெனினியக் கட்சியின் தலைமையின் கீழ் பெறப்பட்ட வெற்றிகள் முழுமையான சாதிய ஆதிக்க ஒழிப்பைச் சென்றடையாமல் இன்னமும் பல தடைகள் சமூகத்தினுள் இருந்து வருகின்றன. குறுகிய தமிழ்த் தேசிய வாதம் அத்திய சக்திகளுக்கு உடந்தையாகவும் இருந்து வந்துள்ளது.

பெண்களின் கல்வி, வெளி வேலை வாய்ப்புக்கள் அதிகமாகியுள்ள போதும் அவர்களுடைய வேலைச் சுமை கூடியுள்ளது. அது ஒரு புறமிருக்க தொழில் பார்க்குமிடங்களிலும் வெளியிலும் அவர்கள் பாலியற் துன்புறுத்தல்களுக்கு உட்படுவது அதிகமாகியுள்ளது. எனவே உழைக்கும் வர்க்கப் பெண்கள் சாதி, இனம் , வர்க்கம் என்ற அடிப்படைகளில் மட்டு மன்றிப் பால் அடிப்படையில் குடும்பத்தினுள் ஒரு புறமும் வெளியில் இன்னொரு புறமும் ஒடுக்கப்படுகின்றனர். ஆயுதப் போராட்டமோ நகர் சார்ந்த வேலை வாய்ப்புக்களே உழைக்கும் வர்க்கப் பெண்களுக்கு விடுதலையை வென்று தர உதவவில்லை. பெண்ணியம் பற்றிப் பேசுவோருடைய அக்கறைகள் வசதி படைத்த நடுத்தர வர்க்க எல்லைக்குள் நின்றுவிடுகின்றன.

எனவே, சமூக ஒடுக்கு முறைகள் பற்றிப் பேசினால் இன ஒற்றுமை சமூக ஒற்றுமை என்பன குலையும் என்ற வாதத்தை நாம் என்றுமே ஏற்றதில்லை. புதிய ஜன நாயகக்கட்சி எந்தச் சமூக அநீதிக்கும் விலக்களித்ததில்லை பேரின வாதத்தை நாம் என்றும் ஏற்றதில்லை.புதிய ஜன நாயகக் கட்சி எந்தச் சமூக அநீதிக்கும் விலக்களித்ததில்லை.

பேரினவாத ஒடுக்கு முறை உட்பட அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்த்துப் போராடி வந்துள்ளது. எனவே பின்வரும் கோரிக்கைகள் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் உள்ளடங்குகின்றன.

★திறந்த பொருளாதார கொள்கையின் வரவையடுத்துத் தொழிலாளி வர்க்கத்திடமிருந்து பறிக்கப் பட்ட சகல தொழிற்சங்க உரிகைமகளும் மீள வழங்கப்பட வேண்டும். தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை விலக்கில்லாமல் அனைத்துத் தொழில்துறைகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

★பொருள்களின் விலையுயர்வு தடுக்கப்பட்டு வாழ்க்கைச் செலவு கட்டுப்படுத்தப்படவேண்டும். சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும்.

★ தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்களது உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும்;

★ ஒழியாமல் எஞ்சியுள்ள சாதியக் க்ருத்தியல் சிந்தனையின் விளைவாக இன்னமும் கடைப்பிடிக்கப் பட்டுவரும் சாதியத் தீண்டாமை சாதியடிப்படையிலான பார பட்சம் புறக்கணிப்பு ஒடுக்கல் ஆகியன அறவே அகற்றப்படவேண்டும்.

★ பெண்களுக்கெதிரான அனைத்துச் சமூக வன்முறைகளுக்கும் எதிரான கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் மேலாக ஆண் பெண் சமத்துவச் சிந்தனை பாடசாலைகள் தொட்டு அனைத்துச் சமூக நிறுவனங்களிலும் வலியுறுத்தப்படவேண்டும்.

★வர்க்கம், சாதி, பால், பிரதேசம் ஆகிய அடிப்படைகளில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் பிரிவினர்களுக்குக் கல்வி, உயர்கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய துறைகளில் சிறப்புச் சலுகைகள் வ்ழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை வென்றெடுக்க மக்களின் பரந்துபட்ட ஐக்கியத்தின் அடிப்படையில் சகல தேசிய இனங்களையும் சிறுபான்மைச் சமுகங்களையும் ஒன்றிணைத்த மாற்று அரசியலின் ஊடான ஒருபுதிய வெகுசனப் போராட்ட அணியிணைக் கட்டியெழுப்புவது முக்கியமானது. சிங்கள மக்களைப் பகைவர்களாகக் காட்டி வந்த குறுகிய தமிழ்த் தேசியவாத நோக்கை முற்றாக நிராகரித்துப் பரந்துபட்ட சிங்கள உழைக்கும் மக்களை ஒரு நேச சக்தியாகக் கருதிச் செய்படுவதன் மூலமே சிங்கள மக்களைப் பீடித்திருக்கும் பேரினவாதத்தை முறியடிக்கவும் தேசிய இனங்களின் உரிமைகளை ஏற்கச்செய்யவும் இயலும். அதன் மூலம் தமிழ் மக்களை இலங்கையின் பிற சமூகங்களிலிருந்தும் தனிமைப் படுத்துகிற போக்கிலிருந்து இன ஒடுக்கு முறைக்கு எதிரான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் காப்பாற்றி முன்னோக்கிக் கொண்டு செல்லவும் இயலுமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்கமும் பிராந்திய வல்லரசான இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களும் தேசிய இனப்பிரச்சினையைப் போராக்க உதவியதுடன் அதற்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படுவதற்குத் தடையாகவும் இருந்து வந்துள்ளன. இலங்கை மீது ஏகாதிபத்தியத்தின் பிடி கடந்த முப்பது ஆண்டுகளில் மிகவும் இறுகிப்போயுள்ளது. இலங்கை மிகப் பெரிய கடனாளி நாடாக உள்ளது. தேசிய பொருளாதாரமற்ற இலங்கை தன் கூலி உழப்பை நேரடியாகவோ ஆடைத் தொழிற்சாலைகள் என்பன மூலமோ உலகச் சந்தையில் விற்று வருகிற வருமானத்தின் மீது தங்கியுள்ளது. எனவே அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக ஏகாதிபத் தியத்தினின்றும் இந்திய மேலாதிக்கத்தினின்றும் நாட்டின் இறைமையையும் பொருயளாதாரத்தையும் மீட்கும் பணி முக்கியமானது.

தேசிய இனப் பிரச்சனையைத் தமது குறுக்கீட்டுக்கும் வணிக அரசியல் ராணுவ ஆதிக்க நோக்கங்களுக்கும் பயன்படுத்த முனையும் சகல அந்நியத் தலையீடகளும் எதிர்க்கப்படவேண்டியவையே. நமது புதிய ஜனநாயகக்கட்சி பாராளுமன்றத்தின் மூலம் எவ்வகையிலும் பயனுள்ள ஒரு சமூக மாற்றத்தைக் கொண்டுவர இயலும் என்று நம்பியதில்லை. அத்தகைய எதிர்பார்ப்பை என்றும் மக்கள் மத்தியில் பரப்பியதும் இல்லை. இத் தேர்தலின் முக்கியத்துவம் மக்கள் மத்தியில் சரியான சிந்தனைகளைக் கொண்டு செல்வதற்கும் அதன் மூலம் மாற்று அரசியலின் ஊடக மக்களை அணி திரட்டுவதற்குமான வாய்ப்புமேயாகும்.

நமது கட்சியின் நிலைப்பாட்டை ஆராய்ந்து அறிந்து ஆதரவு தருவதன் மூலம் மக்கள் தமது உரிமைகளுக்கான போராட்டத்தை வலிமைப்படுத்துகின்றனர். அந்த ஆதரவின் வலிமையோடு நமது புதிய ஜன நாயகக் கட்சி நாடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் தனது போராட்டப் பாதையில் தளராது மக்களோடு இருந்து செயற்படும். மக்களை அணிதிரட்டி போராட்டப் பாதை யில் முன் செல்லும் என நாம் உறுதிகூறு கிறோம். இப் பொதுத்தேர்தலில் மக்கள் எமக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வழங்குவார்ளாயின் உழைக்கும் மக்களுக்கு நேர்மையான அரசியல் சக்தியாக இருந்து செயற்பட்டு ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்பி முன்செல்வோம் என்பதை உறுதியளிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரம்பேசும் தமிழ்ச் சக்திகளை சிதறடிக்க அரசு மறைமுகச் சதி

## சாடுகிறார் கூட்டமைப்பின் திகாமடுல்ல வேட்பாளர்

மட்டக்களப்பு, மார்ச்13

அறுபது வருட காலங்கள் பல இழப்புக் களைச் சந்தித்தும் பல வழிகளில் போராட் டங்கள் நடத்தியும் பலவித இன்னல்களை அனுபவித்தும், நியாயமான தீர்வுகளை எட்டாதநிலையில் இருக்கும் தமிழ் இனத் தின் நியாயமான கோரிக்கைகள் இன்று சர்வதேசத்தின் முன் முக்கிய பிரச்சினை யாக உணரப்பட்டுள்ளன. இலங்கை அரசு தமிழர்களின் அரசியல் சக்தியுடன் பேசித் தீர்வைக் கொடுக்க வேண்டிய அழுத்தம் ஏற்படுகின்ற வேளையிலே பொதுத் தேர் தல் நடைபெறவிருக்கின்றது. இதில் தமி ழரின் பேரம்பேசும் சக்திகளைச் சிதறடிக்க அரசு மறைமுகமாகச் சதிசெய்கிறது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் திகாமடுல்ல மாவட்டத்தின் தலைமை வேட்பாளர் டாக்டர் வில்லியம் தோமஸ் தெரிவித்தார். நேற்று பாண்டிருப்பில் நடை பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் சோரம்போகாத அரசி யல் சக்தியைச் சிதறடித்து தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை வழங்காது தான் நினைக்கும் தீர்வை வழங்க அரசுக்குத் துணைபோகும் தமிழ் அரசியல்வாதிகளை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவர அரசு முனைப்புடன் செயற்படுகின்றது. இதற்கு எமது தமிழ் மக்கள் ஒருபோதும் துணை போகமாட்டார்கள் என்பதைப் பேரின வாதம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மிகவும் முக்கியமான தேர்தலாகத் தமிழ் மக்களுக்கு அமையப்போகும் இத் தேர்த லில் தமிழ் மக்கள் புத்தி சாதுர்யமாகவும், இராஜதந்திர ரீதியாகவும் ஆழமாகச் சிந் தித்துச் செயற்படுவதன் மூலமே எதிர்காலத் திலாயினும் எமது மக்கள் இதுவரை கால மும் அனுபவித்த விலை மதிக்க முடியாத பல இழப்புக்களுக்கும், துன்பங்களுக்கும் நல்லதொரு விடையைக் காணமுடியும்.

சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகி யிருக்கும் அரசு, தமிழ் மக்களின் நியாய மான கோரிக்கையை மூடிமறைக்க அர சிற்கு முண்டு கொடுக்கும் சக்திகளைப் பல கோணங்களிலும் உருவாக்கி தமிழ் மக்களின் அரசியல் சக்தியைக் குழப்புவதற்குக் களமிறக்கியுள்ளது. இவர்களை எமது மக் கள் ஓரம் கட்டுவதன் மூலம் நிச்சயம் தமி ழினம் எதிர்காலத்தில் தன்மானத்துடன் அபிவிருத்திப் பாதையில் நகரலாம் என் பது உண்மை. எனவே, தன்மானத்துடன் அபிவிருத்தியை நோக்கி நகர்வதா? அல்லது அடிமைத்தனத்துடன் வெளிப்பூச்சாக அபி விருத்தியடைவதா என்பதை எமது மக்கள் தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

எமது மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தை சரி யாகப் பயன்படுத்தி 'வீட்டுச் சின்னத் திற்கு' வாக்களிக்க வேண்டும் - என்றார்.

(ஸி)



அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிறன்று சம்மாந் துறை அப்துல் மஜித் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள், ஊடகவியலாளர்கள் வரவேற்கப்படுகின்ற மையைப் படத்தில் காணலாம்.

## கல்முனையில் 5 பாடசாலைகளுக்கு புனர்நிர்மாணப் பணிக்கு நிதியுதவி.

மட்டக்களப்பு, மார்ச் 13

கிழக்கு மாகாண சபையின் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தின் கீழ் கல்முனை வலயத்திலுள்ள ஐந்து பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன எனக் கல்முனைக் கல்வி வலயத்தின் பிரதம இலி கிதர் நஜீம் எம்.பதுறுதீன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். எல்.எம்.துல்ஹர் நஹீமீனின் வேண்டுகோ ளின் பேரிலேயே இந்நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மகா வித்தி யாலயக் கட்டடத் திருத்த வேலைக்காக 8 லட்சம் ரூபாவும், மருதமுனை அல்-ஹம் ஹா வித்தியாலய கட்டடத் திருத்த வேலைக் காக 30 லட்சம் ரூபாவும், மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு 25 லட்சம் ரூபாவும், மருதமுனை அல்-மதீனா வித்தியாலயத்திற்கு 5 லட்சம் ரூபாவும் கிழக்கு மாகாண சபை யின் திட்டத்தின் மூலமாக ஒதுக்கப்பட் டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸி)

கிழக்குப் புதினம்

# விளம்பரம் என்ற போர்வையில் பெண்கள் அலங்கோலப்படுவது தடுக்கப்பட வேண்டும்

## கல்முனைப் பொலிஸ் அதிகாரி கருத்து

மட்டக்களப்பு, மார்ச் 13

''ஊடகங்களில் பெண்கள் வியாபாரப் பொருளாகப் பாவிக்கப்படுகின்றனர். விளம் பரம் என்ற போர்வையில் அவர்கள் அலங் கோலப்படுத்தப்படுகின்றனர். ஆடை விட யத்தில் பெண்களே தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்-சிங்கள சமூகங்களைவிட முஸ்லிம் பெண்களே இந்தத் தொற்று நோய்க்கு ஆளாகாமல் உள் ளனர். அவ்வகையில் அவர்களின் அணுகு முறை வரவேற்கத்தக்கது.''

-இவ்வாறு கல்முனைப் பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பு அதிகாரி விமல் சீ.பெரேரா தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற் பாட்டில், இத் தாபனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பீ.ஸ்ரீகாந்தா தலைமை யில், நூறாவது சர்வதேச மகளிர் தினம் கல் முனை கிறிஸ்தவ இல்லத்தில் நடைபெற் றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்று கையில் தெரிவித்தவை வருமாறு:-

பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டுமென ஊர்வலம் வரு வதிலோ, கைப்பட்டி அணிவதிலோ பிரயோ சனம் எதுவும் ஏற்படப் போவதில்லை. இது குறித்து சமூகத் தரப்பினர் மானசீகமாக உண ரும்போதே வன்முறைகளைக் களைய முடியும்.

வன்முறைகள் ஏற்படுவதைத் தடுப்ப தற்கும் அதற்கான தீர்வை முன்னெடுப் பதற்கும் மிக முக்கியமானது நிதானமான சிந்தனையாகும். பெண்கள் தமது நிதானப் போக்கைப் பாதுகாப்பது வன்முறையற்ற சூழலை ஏற்படுத்துவதற்கான வழி முறை யாகும்.

சமயங்கள் கூறுகின்ற கருத்துகள் இன்று நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பெண் களுக்கு அவை அளிக்கும் கண்ணியம் உணரப்படுமாயின் பெண்களுக்கெதிரான வன்முறையற்ற இலக்கை நோக்கி உலகம் எப்போதோ நகர்ந்திருக்கும்.

மற்றவர்களின் கருத்துகளை செவிம டுத்து, மதிப்பளித்து அவர்களை மேன்மைப் படுத்த வேண்டும் என்ற நிலை எல்லோரி டத்திலும் ஏற்படுமானால் மகளிர் உரிமை, சிறுவர் உரிமை எனத் தனித் தனியாகப் பேச வேண்டிய நிலை ஏற்படாது - என்றார்.

(ஸி)

# அறநெறிப் பாடசாலைகளுக்கான இந்துசமயப் பரீட்சை ஜூன் மாதம்

திருகோணமலை, மார்ச் 13

பரீட்சைத் திணைக்களத்தினால் அற நெறிப் பாடசாலைகளுக்கான இந்துசமயப் பரீட்சை, எதிர்வரும் ஜூன் மாதம் நடத் தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் விண் ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்படும் தகை மைகளைக் கொண்டிருக்கவேண்டும்.

இப்பரீட்சை இந்துசமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தில் பதிவுசெய் யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைக ளிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக் கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று பதினோராம் ஆண்டில் கல் வியை மேற்கொள்பவர்களும், ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியடையா தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றமுடி யும்.

இப்பரீட்சையில் தோற்றவுள்ள விண் ணப்பதாரி மேற்குறித்த தகமையைப் பெற்றுள்ளார் என்பதனை இந்து அற நெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிப்படுத்தல் வேண் டும்.

பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாட சாலையொன்றின் ஊடாக மட்டுமே இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும் விண்ணப்பப் படிவங்களை ஏற் றுக்கொள்ளும் இறுதித் திகதி, 2010.04.01 ஆம் திகதியாகும்.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங் கள் பதிவுத் தபால்மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங் கமைப்பு வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்கு மான கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண் டும். (ஸி)

# அட்டாளைச்சேனை வைத்தியசாலையில் இரவுக்கடமையில் டாக்டர்கள் இன்றி அவலம்

## மாகாண சுகாதார அமைச்சருக்குக் கடிதம்

அம்பாறை, மார்ச் 13

அட்டாளைச்சேனை பிரதேச வைத்திய சாலையில் இரவு நேரங்களில் வைத்தியர் கள் கடமையில் இல்லாததால் நோயாளி கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை களை எடுக்குமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளி வீதியைச் சேர்ந்த ஏ.ஆர்.முகம்மது சியாத் என்பவரே, கடிதமூலம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கு மேற் படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

''கடந்த சனிக்கிழமை இரவு 7மணிய ளவில் எனது தாய் திடீரென சுகயீன முற்று மயக்கமடைந்திருந் தமையால் எனது வீட்டிற்கு அண்மையிலுள்ள தனியார் வைத் திய நிலையத்திற்கு அழைத்துச் சென்ற போது, தாயாரைப் பரிசோதித்த வைத்தி யர், உடனடியாக அரச வைத்தியசாலை யில் சேர்க்குமாறு என்னைப் பணித்தார்.

''அந்த வைத்தியரது கட்டளைக்கிணங்க இரவு 7.14 மணியளவில் அட்டாளைச் சேனை, பிரதேச வைத்தியசாலையில் எனது தாயைச் சேர்ப்பதற்காகக் கொண்டு சென்றேன். இந்த வேளையில் அங்கிருந்த வைத்தியசாலை ஊழியர்கள் எனது தாயாருக்குச் சிகிச்சையளிக்க மறுத்து விட்டனர். ஏனெனில், இங்கு கடமை புரியும் வைத் தியர், அவரது பிரத்தியேக வைத்திய நிலை யத்தில் இருக்கின்றார் எனவும், அங்கு சென்று சிகிச்சை பெற்று, நோயாளியைச் சேர்ப்பதற் கான சிட்டையைப் பெற்றுக்கொண்டு வருமாறும் என்னிடம் கூறினர்.

''சுமார் அரைமணி நேரம் மயக்க நிலையிலிருந்த எனது தாயாருக்குச் சிகிச்சைய ளிக்குமாறு அவர்களிடத்தில் மன்றாட்டமாகக் கேட்டபோதும் அவர் கள் எனது பேச்சை அலட்சியம் செய்து, எனது தாயாருக்குச் சிகிச்சையளிக்க மறுத்துவிட்டனர்.

''எனவே, சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் எனது தாயாரைச் சேர்த் ததும் அங்கு அவருக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டது.

''அட்டாளைச்சேனை பிரதேச வைத் தியசாலையில் வைத்தியர்களுக் கான விடுதி வசதிகள் இருக்கின்றபோதிலும், இரவு வேளைகளில் இங்கு கடமை யாற்றுகின்ற வைத்தியர்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கில் கடமை நேரத் தில் தங்களது பிரத்தியேக வைத்திய நிலையங்களில் இருந்து கொண்டு, வைத்தியசாலைக்கு வருகின்ற நோயா ளிகளை இவ்வாறு நடத்துவதையிட்டு நான் மிகவும் வேதனையடைகின்றேன்.

''ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறக்கூடாது என்ப தற்காக உரிய நடவடிக்கை மேற்கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்'' - என்றுள்ளது.

இந்த வேண்டுகோள் பிரதிகள் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர் மற்றும் மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகின்றது. (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வியாபாரி மூலை, எரிஞ்ச அம்மன் கோயிலடியில் இயங்கிவரும் மயிலிட்டித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நெக்டெப் கட்டிக்கொடுத்த சங்க அலுவலகம், மீனவர் இளைப்பாற்று மண்டபத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு வருகைதந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நெக்டெப் நிறுவனப் பணிப்பாளர் வி.தெய்வேந்திரம், யாழ்.பிராந்திய மின்பிடி நீரியல் வளப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் ஆகியோர் மாலை சூட்டி வரவேற்கப்பட்டு, மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும்,

இளைப்பாற்று மண்டபத்தின் பெயர்ப்பலகையை நெக்டெப் நிறுவனப் பணிப்பாளர் வி.தெய்வேந்திரம் திரை நீக்கம் செய்வதையும் அருகில் மீனவர் சங்கத் தலைவர் சு.யோகராசா நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: கர்ணன்)*

# பயங்கரவாதத் தடுப்பு - அவசரகாலச் சட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே நீக்கமுடியும்

## விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றை ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே நீக்கமுடியும் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் ஐ.தே.கட்சி வேட்பாளர் பட்டியலின் தலைமை வேட்பாளரான அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தமது அணியின் கொள்கை விளக்கப் பிரகடனத்தை வெளியிட்டபோதே இப்படித் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகள், அடிப்படைப் பிரச்சினைகள் என்பவற்றுக்கு உரிய தீர்வினைப் பெறவேண்டும் என்ற நோக்கிலேயே யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் மக்கள் தலைவன் அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் அணியில் நாம் போட்டியிடுகின்றோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு இன்று 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில். அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தயாராக இல்லை. அரசில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் இதனைக் கடுமையாக எதிர்க்கின்றன. இதனைவிட இனப்பிரச்சினைக்கான தீர்வினைத் தயாரிக்க அமைக்கப்பட்ட சர்வகட்சிக் குழுவின் அறிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணி தீர்வினை முன்வைக்கும் என எதிர்பார்ப்பது பகற்கனவாகும்.

### உரிய தீர்வு வேண்டும்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவே சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி பேச்சை ஆரம்பித்தார். ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வைக் காணவும் இணக்கம் ஏற்பட்டது. இதன் அடிப்படையில் தமிழ்மக்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும். இத்தகைய தீர்வை ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே வழங்கமுடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், பனை - தென்னை அபிவிருத்திச் சங்கத்தினர், தனியார்துறை ஊழியர்கள், அரச ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள், வேலையற்ற பட்டதாரி மாணவர்கள் உட்படப் பலதரப்பட்டவர்களும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு இன்னமும் தடைகள் போடப்படுகின்றன. எனவே, இவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்படவேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும். யுத்தத்தில் பலியான மக்களின் உயிர்கள், விலைமதிக்க முடியாதவை. உறவுகளை இழந்து சோகத்தில் மூழ்கியுள்ள மக்களின் துயரங்களை நாம் அறிவோம். யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், சொத்துகளை இழந்தவர்களுக்கும் உரிய நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள், நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். மீள் குடியேற்றப்படாது முகாம்களில் தொடர்ந்தும் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளுடன் மீளக் குடியேற்றப்பட வேண்டும். உரிய நிவாரணங்களும் இவர்களுக்கு வழங்கப் பட வேண்டும்.

தமிழ்மக்களை வாட்டி வதைக்கப் பயன்படுத்திய அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றை நீக்க வேண்டும். யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டியதன் அவசியம்தான் என்ன? ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே இந்தச் சட்டங்களை நீக்கமுடியும்.

### போராளியின் விடுதலைக்கு நடவடிக்கை

யுத்தத்தின்போதும், யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின்போதும் சரணடைந்த போராளிகள் மற்றும் கைதுசெய்யப்பட்டோர் விடுவிக்கப்படவேண்டும். கைதாகியுள்ளவர்களும், சரணடைந்தவர்களும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே, இவர்களின் கஷ்டங்கள் போக்கப்படவேண்டும். இவர்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளமையினால் அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே, இத்தகையவர்களின் விடுதலைக்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்வாதிகளும் தமது விடுதலைக்காகப் பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். எனவே, தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் விடுவிக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

கடந்த சில வருடங்களில் புல நூற்றுக் கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டதுடன், பெரும் எண்ணிக்கையானோர் காணாமற் போயுள்ளனர். பெருமளவானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த விடயம் குறித்து ஆராய விசேட ஆணைக்குழு அமைக்கப்படும். கடத்தப்பட்ட மற்றும் காணாமல் போனோரது பெற்றோர், உறவினர்கள்படும் பாடுகளை நாம் உணர்வோம். படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுப்போம்.

யாழ். குடாநாட்டுக்கான சாதாரண போக்குவரத்தை உறுதிப்படுத்துவதுடன், யாழ்தேவி ரயில் சேவையையும் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### தமிழ்மக்களின் அச்சம்

யுத்தம் முடிவடைந்ததையடுத்து, வடக்கிலும் குடியேற்றங்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அது போக்கப்பட வேண் டும்.

யாழ்.குடாநாட்டில் உள்ள மத ஸ்தலங்களின் அபிவிருத்திக்கு உதவவேண்டியது அவசியம். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். குடாநாடு விவசாயத்தில் தன்னிறைவைப் பெற்றிருந்தது. அந்த நிலையை மீண்டும் ஏற்படுத்தப் பாடுபடுவோம்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் எதுவித பிரச்சினையுமின்றி நாட்டுக்கு வந்து போகும் நிலையை ஏற்படுத்துவதுடன், அதன் மூலம் எமது உறவுகளின் முதலீடுகளை அதிகரித்து யாழ். குடாநாட்டை சொர்க்கபுரியாக மாற்றுவோம்.

குடாநாட்டிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு, வேலையற்ற பட்டதாரிகளுக்கு உரிய தகுதியான வேலை என்பன வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வேலையற்ற பட்டதாரிகள் படித்துவிட்டு வேலையின்றிக் கஷ்டப்படுவதால் அவர்கள் படும் வேதனைகளை நாம் அறிவோம். எனவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கையை மேற்கொள்வோம்.

அபிவிருத்தி என்ற போர்வையில் ஒருசிலர் இலாபம் உழைக்கும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சகலருக்கும் சம பங்கை வழங்குவோம்.

குடாநாட்டு மக்களின் தேவைகளை அறிந்து நாம் சேவையாற்றக் காத்திருக்கின்றோம், - என்றார்.


**ST.PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION JAFFNA ST.PATRICK'S DAY**

**17th MARCH 2010**

TRIDUM:- 14th,15th And 16th AT 5.15 pm
FESTIVAL EUCHARIST SERVICE
ON 17th MA RCH 2010 AT 7.30 AM
AT THE COLLEGE CHAPEL

**NOTE:-** THE PATRICIAN RAFFLE DRAW WILL BE HELD AT **4.00** pm.on **21.03.2010** AT **MATHURAM SQUARE**

THE O.B.A. TEA WILL BE HELD AFTER THE DRAW AT THE SAME - VENUE. MEMBERS OF THE O.B.A. ARE CORDIALLY INVITED TO GRACE THE OCCASION.

**No. 61.ST.PATRICK'S ROAD, JAFFNA.**

**GEN.SECRETARY O.B.A.JAFFNA.**



**வாசனா சம்பத**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 810 திகதி: 11.03.2010

ஆங்கில எழுத்து: E

வெற்றி இலக்கங்கள்: 19 38 50 64

போனஸ் இலக்கம்: 15

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 13,304,665.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 02 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 06 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 278 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14220 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 199770 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 10,573,400.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 13,304,665.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை 234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வின்சர் சந்தியில் வீதிச் சமிக்ஞை விளக்கு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 13

நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல், விபத்துக்கள் எனபவற்றைத் தவிர்ப்பதற்காக யாழ்.வின்சர் சந்தியில் விரைவில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

வின்சர் சந்தியின் மத்திய பகுதியில் இந்த வீதிச் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்கு தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

யாழ். நகரின் பிரதான நுழைவாயில்களில் ஒன்றாக உள்ள வின்சர் சந்தியில் முதன்முதலில் இந்த வீதிச் சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (50- 224)

## காலாவதியான அனுமதிப்பத்திரத்துடன் விறகு ஏற்றி வந்த லொறிச் சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

திகதி காலாவதியான அனுமதிப்பத்திரத்தை வைத்து தென்னிலங்கையிலிருந்து விறகு ஏற்றி வந்த லொறியினை யாழ்.மாவட்ட வன பரிபாலன திணைக்களத்தினர் தென்மராட்சிப் பகுதியில் மடக்கிப் பிடித்தனர்.

லொறியின் சாரதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் வாகன உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் விறகைப் பறிமுதல் செய்து யாழ்.மாவட்ட மரக் கூட்டுத்தாபனத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டு லொறியினைப் பிணையில் செல்ல அனுமதித்தார். (50-207)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

நல்லூர்,மார்ச்13

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலைப் பிரதேசத்தில் வசிக்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான சீருடைகள், கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறும்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரியாலைப் பகுதியின் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த 155 மாணவர்கள் இந்த உதவிகளைப் பெறவுள்ளனர்.

லண்டனில் உள்ள அரியாலையைச் சேர்ந்தவர்களின் அமைப்பான 'பேரன்ற் தமிழ் அசோசியேசன்' இதற்கான உதவிகளை வழங்கியுள்ளது.

மாணவர்களுக்கான அன்பளிப்புக்களைச் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் வழங்குவார்கள். (50-ரி-111)




## அனுமதியின்றித் தங்குமிட விடுதிகளை நடத்துவோர் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 13

அனுமதிப்பத்திரமின்றித் தங்குமிட விடுதிகளை நடத்துவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலங்களில் முறையற்ற விதத்தில் தங்குமிட விடுதிகள் நடத்தப்படுவது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. எமது பிரதேசசபையின் முன் அனுமதியின்றித் தங்குமிட விடுதிகளை நடத்துதல் சட்டத்திற்கு முரணான செயலாகும்.

எனவே இவ்வாறான தங்குமிட விடுதிகளை நடத்த விரும்புவோர் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு அதற்கான முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். முன் அனுமதியின்றி தங்குமிட விடுதிகளை நடத்துவோர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (50-16)

## கோப்பாய் பாடசாலைகளின் தடகளப் பரிசளிப்பு விழா

கோப்பாய்,மார்ச்13

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளின் தடகளப்போட்டி பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம், யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் ஆகியோர் வழங்குவர். (50-72)

## பெப்ரவரி மாதத்துக்கான சமுர்த்தி நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

கடந்த பெப்ரவரி மாதத்துக்கான சமுர்த்தி நிவாரண விநியோகம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

177ஏபீ, 50 ஏபீ ஆகிய முத்திரைப் புள்ளிகளுக்கு இந்த நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அரிசி,கோதுமை மா, சீனி, பருப்பு போன்றவை நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.இந்த நிவாரண விநியோகப் பட்டியல் பின்வருமாறு:-

| | | A | B | C | D |
|---|---|---|---|---|---|
| | | 1500/- | 615/- | 350/- | 250/- |
| பொருள் | விலை | அளவு | அளவு | அளவு | அளவு |
| அரிசி (வெள்ளை) | 54.50 | 2.000 | 0.500 | 0.500 | 0.500 |
| அரிசி (நாடு) | 69.65 | 6.850 | 2.700 | 2.750 | 1.300 |
| கோதுமை மா | 52.41 | 8.000 | 2.000 | 1.000 | 1.000 |
| சீனி | 106.00 | 0.500 | 0.500 | 0.250 | 0.250 |
| பருப்பு | 167.00 | 0.500 | 0.500 | 0.250 | 0.250 |

(50-224)

## கியூடெக் நிறுவனம் நடத்தும் மகளிர் தின விழா திங்களன்று

யாழ்ப்பாணம்,மார்ச்13

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'பெண்ணே விழி சமூகம் விழிப்படைய' என்ற தொனிப் பொருளில் நடத்தப்படும் மகளிர் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் காலை 9 மணிக்கு இந்த மகளிர் தின விழா ஆரம்பமாகும்.

இந்த விழாவில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். ஜி.வி.பி. நிறுவனத்தின் இணைப்பாளர் திருமதி றஜினி சந்திரசேகரம் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கரித்தாஸ்- கியூடெக் இயக்குநர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் ஆசியுரையை நிகழ்த்துவார். (50-224)







தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இல்லத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்நிகழ்வில் தலைமை உரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும்,
விருந்தினர்களுடன் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் மகளிர் இல்லப் பிள்ளைகள் நிற்பதை நான்காவது படத்திலும்,
இல்ல மாணவிகளின் ஓவியக் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள் :நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை மின்சாரசபையின் பிரதிப்பொது முகாமையாளர் இ.முத்துரட்ணானந்தன் மற்றும் விருந்தினர்கள் பாடசாலைச் சமூகத்தினரால் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், கல்லூரி அதிபர் திருமதி முத்துத்தம்பி தலைமையுரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினர் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும், வெற்றி பெற்ற வீராங்கனை ஒருவருக்கு பிரதம விருந்தினர் வெற்றிக் கேடயம் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 12.02.1939
மறைவு: 13.02.2010

**அமரர் அப்புக்குட்டி கிருஸ்ணசாமி (A.K)**

மெழுகைப்போல் தினம்
எமக்காகி - நின்ற
எம் குலதெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
தேடிக்காணா
கை கூப்பும் தெய்வமே- இன்று
நாம் உங்களை இழந்து -
வேதனைகள் சுமந்தபடி
பாதை அறியா கால்களாய்...
என்றும் நெஞ்சினிலே
நினைவுகள் சுமந்தபடி
உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

எமது தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசியூடாக அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலியூடாக தம் கவலைகள் பகிர்ந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (13.03.10) சனிக்கிழமை அன்னாரின் அஸ்திக் கிரியை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் நாளை மறுதினம் (15.03.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் வீட்டுக்கிருத்திய கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்திலும் நடைபெறும். தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மந்துவில் வடக்கு,கொடிகாமம்.
0779189464

உங்கள் பிரிவோடு: மனைவி-பார்வதி
(காலநாயனி, கேதீஸ்வரன், கிருஸ்ணானந்தி, நிஷாந்தினி, மிதுலன்)




## இலத்திரனியல் நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், மார்ச்13

குடாநாட்டில் நிறுப்பதற்குப் பயன்படும் இலத்திரனியல் கருவிகள், நகைகள் நிறுக்கும் கருவிகள் என்பவற்றுக்கு யாழ். மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் திணைக்களப் பரிசோதகர்களால் பரிசீலித்து முத்திரையிடும் பணி இடம்பெறவுள்ளன.

இதற்கான பணி எதிர்வரும் 17 ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக்கருவிகளைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளர்.

(50-204)

## பட்டிமன்றப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்13

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பட்டிமன்றப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்குபற்றுவோர் பிரதேச செயலகப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தமது பதிவினை உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

யாழ். பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் கல்வி கற்கும் 3 மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(204)

## வடமராட்சியில் மகளிர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்13

வடமராட்சி தெற்குப் பிரதேச செயலக பிரதேச மட்ட சர்வதேச மகளிர் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார். ''சுமைகளைச் சுகமாக்கும் நங்கையர்க்கு ஏது செய்வோம்'' எனும் தலைப்பிலான கவியரங்கு, கலை நிகழ்வு, மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் [illegible] இடம்பெறவுள்ளன.

(50-201)

## நெஞ்சைவிட்டகலா 1ம் ஆண்டு நினைவுகளில்

தாயின் மடியில்
20 - 02 - 1937



இறைவன் அடியில்
22 - 02 - 2009

**அமரர் செல்வதுரை விவேகானந்தன் (விவே)**

(திதி: திரயோதசி - 13.03.2010)

எங்கள் அன்புத் தெய்வமே, அப்பா!
எம்மைப் பாசத்தால் அரவணைத்துக்
கண்ணின் இமை காப்பதுபோல் காத்தீர்கள்
எங்களை விட்டுப்பிரிய
எப்படி மனம் வந்தது, அப்பா
எல்லாம் ஒரு கனவு போலத் தோன்றுகிறது.
எத்தனை, எத்தனை ஆண்டுகள் போனாலும்
வற்றாது எமது கண்ணீர்
என்றும் தங்கள் ஆத்மா சாந்தியடைய
விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்

**ஓம் சாந்தி !**

மனைவி, மக்கள், மருமகன், பேர்த்தி
மற்றும் குடும்பத்தினர் - கொழும்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பின் தேர்தல் விஞ்ஞாபனம்

...ருந்தனர். ஆரம்பத்தில் பல்வேறுபட்ட ஆயுதமேந்திய இயக்கங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபொழுதும் கூட 1987 இலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் தனி நாட்டுக்காகப் போராடும் ஒரேயொரு ஆயுதமேந்திய இயக்கமாகப் பரிணமித்தது. ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளை நடத்தின. 2002 ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானதோடு பின்னர் ஒஸ்லோ நகரில் நடைபெற்ற பேச்சின் பிரகாரம் ஒஸ்லோ உடன்பாடு என்ற பெயரில் இரு தரப்பினரும் சில அடிப்படைக் கொள்கை விதிகளை ஏற்றுக் கொண்டனர்.

அது பின்வருமாறு:

''உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியிலமைந்த வாழ்விடப் பிரதேசங்களில் சமஷ்டிக் கட்டமைப்பிலான அரசியல் தீர்வொன்றை ஐக்கிய இலங்கைக்குள் கண்டெடுப்பதற்கும் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.''

**இராணுவத் தாக்குதல்களும் அதன் பின் விளைவுகளும்**

இந்தப் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்படாமல் அரச இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் போராட்டம் திரும்பவும் ஆரம்பமாகி; 2009 மே மாதம் 19ஆம் திகதியோடு அனைத்து இராணுவ மோதல்களும் முடிவுக்கு வந்தன. இந்த 30 வருட போராட்ட காலம் தமிழ் தாயகத்தையும் தமிழ் மக்களையும் முற்று [illegible]ழுதாக சூறையாடி ஏதுமற்ற ஏதிலிகளாக்கியுள்ளது. பத்து இலட்சம் தமிழ் மக்கள் பாதுகாப்புத்தேடி வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்தும், மேலும் ஐந்து இலட்சம் மக்கள் நாட்டிற்குள் ளேயே இடம்[illegible]யர்ந்தவர்களாகவுமிருக்கிறார்கள். இந்தப் போராட்ட காலத்[illegible] ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இராணுவத் தாக்குதலில் கடைசிக் கட்டங்களில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சர்வதேச நிறுவனங்களினாலே மதிப்பிடப்பட்டுள்ளது. வேறு பலர் அங்கங்களை இழந்தும் பாரதூரமான காயங்களிற்குள்ளாகியும் மன உளைச்சல்களிற்குள்ளாகியும் துன்பப்படுகின்றார்கள். இதைவிட வன்னியில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடு வாசல் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்தும் பின்னர் எல்லா முறைமைகளையும் மீறி தடுப்பு முகாம்களில் கைதிகளாக அடைக்கப்பட்டுமிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இன்னமும் இந்த முகாம்களிலே கைதிகளாக வாழ்கின்றனர். பதினோராயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வேறாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். ''விடுவிக்கப்பட்ட மற்றவர்கள் எந்த வித நிவாரணமோ வாழ்வாதாரமோ இன்றி தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளுமாறு விடப்பட்டுள்ளனர். தங்களுக்கு என்று சொல்லிப் போக வீடொன்று கூட அவர்களுக்குக் கிடையாது. இந்த மக்களுடைய திட்டவட்ட மீள் குடியேற்றமும் புனர்வாழ்வும் எமது தாயகத்தை மீளக்கட்டியெழுப்புவதும் இந்த மணித்துளியின் உடனடித்தேவையாக உள்ளது. தமிழ் [illegible]களுடைய வணக்க ஸ்தலங்களான இந்து, கிறிஸ்தவ ஆலய[illegible]ள் பல அசுத்தப்படுத்தப்பட்டு இடித்தழிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் மிக உயர் நிலைகளுக்கு இது சம்பந்தமான முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**எமது மக்கள் சுரண்டப்பட்டு எமது நிலம் சூறையாடப்படுகின்றது**

''உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் குறிப்பாக யாழ்



...பாளர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்

குடாநாட்டிலும் சம்பூர் உள்ளிட்ட மூதூர் கிழக்கிலும் ஏராளமான நிலப்பரப்பு பலவருடங்டகளாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட்டு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பூர்வீகத் தமிழ் மக்களுக்கு தங்களுக்குச் சொந்தமான பிரத்தியேக வீடுகளில் வாழ்வதற்கும் தங்களது சொந்தக் காணிகளில் பயிர் செய்வதற்கும் மீன்பிடித்தல் மற்றும் வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப் பட்டிருக்கின்றது. தொழில்துறை சுற்றுலாத்துறை வட கிழக்கின் அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் பிரதேசங்களின் குடிசனப் பரம்பலை மாற்றி சிங்களக் குடியேற்றங்களாக ஆக்குவதற்கு பல முன்னெடுப்புகள் தீவிரமாக நடைபெறுகின்றன. கரையோரப் பகுதியில் மீன் பிடித் தலுக்கான உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்களுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பனை வள அபிவிருத்திச் சபை அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் இருப்பதன் காரணமாக தங்கள் வாழ்வுக்கு பனைவளத்தில் தங்கியிருக்கின்ற மக்கள் மிக மோசமாகச் சுரண்டப்படுகிறார்கள். தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடும் உரிமை தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டு அவர்களுடைய சமத்துவத்திற்கான உரிமை பலவழிகளில் மீறப்படுகின்றது. பல வருடங்களிற்கு முன்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் குற்றச்சாட்டின்றித் தடுத்துவைக் கப்பட்டுள்ளார்கள் எமது மக்களில் பெரும்பாலானோரது வாழ்க்கை நிலைகள் பரிதாபமானதாகக் காணப்படுகின்றது.

**2010 ஜனாதிபதித் தேர்தல்**

ஜனவரி ஜனாதிபதித் தேர்தலிலே எமது மக்களுடைய அவல நிலையைக் குறித்தும் எமது அரசியல் உரிமைகளைப்

பரிசீலிப்பதிலும் அரசிற்கு இருந்த அக்கறையற்ற போக்கை எமது மக்களுக்கு விளக்கிச் சொன்னோம். சர்வகட்சி பிரதிநிதி குழு ஒன்று அமைக்கப்பட்டபொழுது கூட வடக்குக் கிழக்கில் இருந்து தெரிவான 23 தமிழ்ப் பிரதிநிதிகளில் 22 நாடாளுமன்ற பிரதிநிதி களைக் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு இக் கூட்டங்களுக்கு அழைக்கப்படவில்லை. ஜனாதிபதியால் உருவாக்கப் பட்ட நிபுணர்கள் குழுவின் பெரும்பான்மையினரால் கொடுக்கப் பட்ட சிபார்சுகளும் கூட கருத்திலெடுக்கப்பட வில்லை. இந்தக் காரணங்களுக்காகவும் ஏனைய பல காரணங்களுக் காகவும் ஜனா திபதி ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக இருப்பதற்கு இரண் டாவதுதவணைக்காக கேட்ட மக் களாணையை நிராகரிக்கும்படி தமிழ் தேசியக் கூட்ட மைப்பு மக்களைக் கேட்டுக்கொண்டது. தமிழ் மக்கள் மிகத் தெளிவாகவும் சந்தேகமற்ற முறையிலும் ஜனாபதித் தேர்தலில் தமது தீர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். ஒரு புதிய மக்களாணைக்கான ஜனாதிபதியின் கோரிக்கைக்கெதிராக மிகப் பாரியளவில் தமிழ் மக்கள் வாக்களித்ததன்மூலம் முதலாவது தவணையின் பொழுது ஜனாதிபதியின் ஆட்சிமுறையை தாங்கள் விரும்பவில்லை என்பதை மிகத் தெளிவாக வெளிக்காட்டியிருக் கின்றார்கள். அதைவிட முக்கியமானதாக தமக்கு அரசியல் சுதந்தி ரமே வேண்டும் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக் கின்றார்கள்.

**அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு**

இந்த நாட்டைப் பூர்விகமாகக் கொண்ட இரு இனங்கள் பகிரப் பட்ட இறையாண்மையூடாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள் வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக முக்கியமானதென சில குறிப்பான அரசியல் சாசன விதிமுறைகளும் கொள்கை களும் அவசியம் என்று கருதுகிறது. கீழே தரப்படும் அதிகாரப் பகிரலுக்கான முக்கிய அம்சங்கள் நீடிய சமாதானத்துக்கும் இலங் கையின் அனைத்து மக்களின் மேம்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் மிக அடிப்படையானவை :-

* தமிழ் மக்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம் அவர்கள் இலங்கைத் தீவில், சிங்கள மக்களுடனும், ஏனையோருடனும், பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றார்கள்.
* தொடர்ச்சியான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடமாகும்.
* தமிழ்மக்கள்சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்
* அதிகாரப் பங்கீடானது இணைந்த வடக்கு - கிழக்கு மாகா ணத்தில்,சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையில் நிறுவப்பட வேண்டும். இது தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்புடைய தாக இருக்க வேண்டும்.
* அதிகாரப் பங்கீடானது நிலம், சட்டம் ஒழுங்கு, கல்வி,சுகாதாரம் உட்பட சமூக, பொருளாதார அபிவிருத்தி, வளங்கள் மற் றும் நிதி அதிகாரங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும்.
* புதிய தொழிற்றுறைகளை உருவாக்கவும் மற்றும் எமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கவும், வடக்கு - கிழக்கில் நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்படும்.
* பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியாத மாணவர் களுக்கு அவர்க ளுக்குரித்தான அவசியமான துறைகளில் உயர் கல்வி [illegible]ற்பதற்கான மாற்று ஏற்பாடுகளை செய்தல்.

**எமது மக்களின் உடனடித் தேவைகள்**

எமது மக்களிற்கு நிலைத்து நிற்கக் கூடியதும் சமாதானமுமான வாழ்வொன்றிற்காகச் செயற்படுகின்ற அதே வேளையில் அவர்களுடைய உடனடியானதும், தற்போது நிலவக் கூடியதுமான முக்கிய பிரச்சினைகளை கையாள்வதிலும் விரைந்து செயற்படுவோம். இப்பிரச்சினைகள் தொடர்பாக பின்வரும் விடயங்களிற்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவமும், இராணுவ தளபாடங்களும் அகற்றப்படுதல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் மூலமும் 1983ம் ஆண்டிற்கு முந்திய நிலைக்கு எமது பிரதேசத்தை இட்டுச் செல்லக் கூடிய அர்த்தமுள்ள இராணுவ விலக்கல் அவசியமானது.

* போரினால் இடம்பெயர்க்கப்பட்ட தமிழ் மக்கள் விரைவாத தமக்குரிய சொந்த இடங்களில் வீடுகள் வழங்கப்பட்டும், வாழ்வாதாரங்கள் மீளமைக்கப்பட்டும், அவர்களது கௌரவம் மதிக்கப்படுகின்றதுமான வகையில் மீள் குடியேற்றப் படவேண்டும்.
* இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கும் உடல் ஊனங்களுக்கும், சொத்திழப்புகளுக்கும் போதிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
* தேசிய நல்லிணக்கத்திற்கான முதற்படியாக எந்தவித குற்றமும் சுமத்தப்படாத, தடுப்புக்காவலில் உள்ள நபர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுவதுடன், ஏனையவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட வேண்டும்.
* கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் தமது இல்லங்களுக்கு வர அனுமதிக்கப்பட வேண்டுமென்பதுடன், அதற்கேற்ற சூழ்நிலை உருவாக்கவும் வேண்டும்.
* புலம் பெயர்ந்த தமிழ் மக்களதும், சர்வதேச சமூகத்தினதும் செயலூக்கமிக்க பங்களிப்பின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில், முழுமையான மீள்குடியேற்றமும், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தியாகியன முன்னெடுக்கப்படும்.
* அகதிகள் என்ற நிலை அடியோடு நீக்கப்பட வேண்டும் - அதுவரை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் இன்றைய உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்யும் வகையில் உயர்த்தப்படவேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம்.



* சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமூகங்களின் சமத்துவத்தை உறு திப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத்தரம், வாழ்வாதாரம் மற்றும் தொழில் துறையை மேம்படுத்தவும் உத்தரவாதப்படுத்தும் வகை யில் சமூக மேம்பாட்டு ஆணையம் ஒன்றின் அவசியத்தை வற்புறுத்தி நிற்கின்றோம்.
* கரையோர மக்கள், மீனவ சமூகம் சுதந்திரமாகத் தங்கள் தொழிலை நடத்துவதற்கும், தங்கள் தொழிலில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கும் சந்தைப்படுத்துவதற்கும், அவர்கள் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கும் பொருத்தமான நடவடிக்கையை முன்னெடுப்போம்.
* அடித்தட்டு மக்கள், கூலித் தொழிலாளர்கள் ஊதியம் மற்றும் வாழ்வாதாரம் மேம்படவும், தனியார் துறை ஊழியர், அரசு ஊழியர் சம்பளம் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் உயர்த்தப் படவேண்டும்.
* நம் சமூகத்தில் பெண்களின் சமத்துவத்தைப் பேணவும். போர் காரணமாக அநாதரவாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான பெண்கள், முதியோர், சிறுவர் ஆகியோரின் பாதுகாப்பு மற்றும் எதிர்கால நல்வாழ்வுத் திட்டங்களை உத்தரவாதப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம்.
* வேலையற்ற பட்டதாரிகள், மற்றும் வேலையற்றோர் தொழில்வாய்ப்பு பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாம் உறுதி பூண்டுள்ளோம்.

**2010 பொதுத் தேர்தலில் எதிர்நோக்கும் சவாலான பிரச்சினைகள்**

ஒன்றுபட்ட நாட்டிற்குள் தமது கலை[illegible]திகளைத் தாமே தீர்மானிக்கக் கூடிய த[illegible] மறுக்க முடியாததும், பிரிக்கமுடியாததுமான உரிமைகளை இலங்கையின் அரசுகள் தொடர்ச்சியாக நிராகரித்தே வந்துள்ளன. 1956 ஆம் ஆண்டிலிருந்து அவர்களின் இறைமைக்கான கோரிக்கைகள் அனைத்தும் நியாயப்படுத்த முடியாத வகையில் மறுக்கப்பட்டே வந்துள்ளன.

30 ஆண்டுகால அஹிம்சைவழிப் போராட்டங்கள் அனைத்தும் கொடூரமான அடக்குமுறை மூலம் நசுக்கமுற்பட்டமையே ஓர் தவிர்க்க முடியாத ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

அடுத்துவந்த முப்பதாண்டுகளில் ஆயுத ரீதியான எதிர்ப்பை அடக்குதல் என்ற பேரில் எமது மக்களின் அடிப்படை உரிமைகள் மோசமாகப் பறிக்கப்பட்டன. அப்பாவிப் பொதுமக்கள் மீது விமானக்குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டன, மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டன, மக்கள் தமது வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர், ஏராளமான இளைஞர்கள் சிறைப்படுத்தப்பட்டும், சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் மேலும் மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அத்துடன் அநேகர் கொல்லப்பட்டும் ஊனமுற்றும் சொத்துக்களை இழந்துமுள்ளனர். மிகக்கடுமையான மனித உரிமை வேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல் மூலம் விசாரணைக்கு அமைக்கப்பட்ட போதும் அது ஆக்கபூர்வமான தீர்வொன்றிக்கு இட்டுச் செல்லாமல் முடிவிற்கு வந்தது.

அரச காணி சம்பந்தமாகவும் மற்றைய வளங்கள் சம்பந்த மாகவும், குடிசன பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப் படவேண்டும். இதற்கென ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மாற்றிஅமைக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசானது அப்பட்டமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீறி இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிரித்துவிட்டது எனக் கூறுகின்றது. வியன்னா பொது இணக்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீரிமலை நகுலேஸ்வரம்

அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலய

**மகா சிவராத்திரியும் தீர்த்த உற்சவமும்**

## கிரிஜாகால நிகழ்வுகள்

இன்று (13.03.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் விஷேட அபிஷேகங்களும் பூசைகளும் மதியம் 12 மணிக்கு பஞ்சமுகா அர்ச்சனையும், பி.ப. 4 மணிக்கு சனிப்பிரதோஷ விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து பி.ப. 6 மணிக்கு முதற்சாம அபிஷேக பூசைகளும், அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு இரண்டாம் கால அபிஷேக பூசைகளும், இரவு 11 மணி தொடக்கம் லிங்கோற்பவகால விசேட திரவிய ஹோம அபிஷேகங்களும் நடைபெறும். அதிகாலை 3 மணிக்கு 4 ஆம் சாம அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று அதிகாலை 5 மணிக்கு வசந்த மண்டப விசேட பூசைகள் நடைபெற்று பின்னர் வீதிவலம் வந்து கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடுவதற்கு எழுந்தருளுவார்.

## *சிவராத்திரி கால விசேட நிகழ்ச்சி நிரல்*

1) வட இந்திய பழனி முருகன் ஆதீன பண்ணிசை வித்துவான்கள் P.சண்முகசுந்தர தேசிகர், G.வெங்கடேஸ்வரதேசிகர் சிறந்த பக்கவாத்திய சகிதம் பண்ணிசை நிகழ்த்துவார்கள்.
2) நாதஸ்வர வித்துவான் ருத்ராபதியின் பேர்த்தி கோகிலத்வனி விஜயராகவன் (பிரிந்தா கானாலய இசைக்குழுவினர்) - வயலின்
3) வீணை - சரங்கினி விஜயராகவன், ரேணுகா விஜயராகவன் யாழ். பக்கவாத்திய கலைஞர்கள்
4) சின்னமணி வில்லிசைக் குழுவினரின் கச்சேரி மாலை 7.30 மணிக்கு இடம்பெறும்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு மாவிட்டபுரம் ஊடாகவும், சேந்தாங்குளம் ஊடாகவும் பேருந்துகள், சிற்றூர்திகள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவன் அடியார்கள் வருகை தருவதற்கு உயர்திரு.அரச அதிபரினால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

ஆகவே அடியார்கள், அன்பர்கள் அனைவரும் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் பங்குபற்றி இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

விழா ஒழுங்கமைப்பு :
**திரு- அங்கஜன் இராமநாதன்**
விமன்காமம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

(95799)

## மக்கள் வங்கியின் பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

மக்கள் வங்கியின் பொதுச்சபைக்கு கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் பங்குகளைக் கொண்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கேட்டுள்ளார். வங்கியில் பங்குடமையாளராகவுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணிய சர்மாவும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் யாழ்.மா.கூ. அ. உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார். (ஒ)

**கோழி இறைச்சி விற்பனை**

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவு வழங்கப்படும். தொடர்பு:- லக்ஷ்மி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கல்ட்டி, தொபே: 0217912783

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701283083 முதல் 701299479 வரை. சீட்டிழுப்பு இல. 630 திகதி 11-03-2010

வெற்றி எண்கள்

**21 28 40 45 N**

ஜக்பொட் பரிசு ரூ. 11,899,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,899,450/= | |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 333 | 1,000/= | 333,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 550 | 1,000/= | 550,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14215 | 60/= | 852,900/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6755 | 40/= | 270,200/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 166869 | 20/= | 3,337,380/= |
| | | மொத்தம் | ரூ. 6,181,480/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - P.W.நதீகா சுஜீவனி - தொடந்தாவ.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - L.இளமாறன் - லிந்துலை.

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 701289172-9-20 |
| நுவரேலியா | 701286646-8-26 |
| அநுராதபுரம் | 701289650-9-38 |
| கண்டி | 701284018-4-49 |
| மாத்தளை | 701288989-8-24 |
| களுத்துறை | 701285236-3-18 |
| கம்பஹா | 701298975-2-40 |
| கம்பஹா | 701295121-2-40 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,581,480/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 12,351,430/=

தொடர் இல. 601327583 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மார்ச் 15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

தோற்றம்: 27.07.1960

மறைவு: 01.02.2010

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

# சின்னத்துரை பாலசுந்தரம்

(சின்னத்தம்பி பாலா)



**உள்ளத்தால் உயர்வாகி**
**வாழ்விற்கு வழிகாட்டி**
**இதயத்தில் இருக்கும்**
**எங்கள் உறவே!**
**உங்கள் ஆத்மா**
**சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

கடந்த 01.02.2010 அன்று லண்டனில் எமது குடும்ப ஒளி விளக்கு இறைபதம் அடைந்த செய்திகேட்டு நேரிலும், தொலைபேசியிலும் துயர் பகிர்ந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (13.03.2010) சனிக்கிழமை லண்டன் (OSHWALL HALLNO.1) இல் 41 ஆம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் நிகழ்வதோடு அன்னாரின் பிறந்த ஊரான கரவெட்டி இல்லத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண்ணாத்திலைை,
கரவெட்டி மேற்கு.

**குடும்பத்தினர்.**

(92182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளினி விடுதலை குறித்து 29 இல் முடிவு; உயர் நீதிமன்றில் தமிழக அரசு தகவல்

## இனியும் தாமதம் கூடாதென நீதிபதிகள் கண்டிப்பு



சென்னை, மார்ச் 13

நளினி விடுதலை செய்யப்படுவது குறித்து தமிழக அரசு வரும் 29 ஆம் திகதி முடிவு செய்யும் - என்று சென்னை உயர்நீதிமன்றில் அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

நளினி விடுதலை தொடர்பாக ஆலோசனைக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை மீது முடிவு எடுப்பதில் தாமதம் கூடாது - என்று உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி கடந்த 19 ஆண்டுகளாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்ற அவரது கோரிக்கையை சட்டப்படி, சிறை ஆலோசனைக் குழுவைக் கூட்டி பரிசீலிக்க வேண்டும் என்று உயர் நீதி மன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி மேல் முறையீடு செய்தார். அதே உத்தரவின் வேறு சில பகுதிகளை எதிர்த்து நளினியும் மேல்முறையீடு செய்தார்.

இந்த நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, சிறை ஆலோசனைக் குழு கூடி தனது அறிக்கையை மாநில அரசிடம் அளித்தது. சிறை ஆலோசனைக் குழுவின் அறிக்கை பரிசீலிக்கப்படுவதற்கு முன்பு, மேல்முறையீட்டு வழக்கை விசாரிக்க வேண்டும் என்று சுவாமி கோரினார். இதையடுத்து, நீதிபதி எலிப் தர்மாராவ், நீதிபதி கே.கே.சசிதரன் ஆகியோர் கொண்ட ஆயம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன் சிறை ஆலோசனைக் குழுவின் அறிக்கையை 'சீல்' செய்த கவரில் நீதிபதிகளிடம் சமர்ப்பித்தார். தொடர்ந்து அவர் முன் வைத்த வாதம் வருமாறு -

நளினி முன்கூட்டியே விடுதலை கோருவது தொடர்பான சிறை ஆலோசனைக் குழுவின் அறிக்கையை தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. இந்த அறிக்கை தொடர்பாக மேலும் சில விவரங்கள், ஆலோசனைக் குழுவிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. இதுதொடர்பாக, முடிவு எடுக்க 2 வாரம் கால அவகாசம் வழங்க வேண்டும் - என்றார்.

இதுதொடர்பாக முடிவு எடுப்பதில் தாமதம் கூடாது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.அதற்குப் பதிலளித்த பி.எஸ்.ராமன்-

இதுதொடர்பாக விரைந்து முடிவு எடுக்க வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட நபர் சிறையில் தொடர்ந்து வாடக் கூடாது - என்றார்.

இதையடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு -

நளினி விடுதலை தொடர்பான சிறை ஆலோசனைக் குழுவின் அறிக்கையின் மீது தமிழக அரசுதான் உரிய முடிவு எடுக்க வேண்டும். இதுதொடர்பான முடிவு எடுக்க அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன் 2 வாரம் அவகாசம் கோரியுள்ளார். எனவே, வழக்கு விசாரணை மார்ச் 29 ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்படுகிறது என்று நீதிபதிகள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

## 17 இலங்கை மீனவர் கைது

மசூலிப்பட்டினம், மார்ச் 13

இந்தியக் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த 17 சிங்கள மீனவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் 3 படகுகளில் வந்த இவர்களை அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடலோர பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். வழி தவறி இந்தியப் பகுதிக்குள் வந்து விட்டனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று ஆந்திர மாநிலப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நக்ஸலைட் தலைவர் உட்பட 20 பேர் கூட்டுப்படையால் கைது

ராஞ்சி, மார்ச் 13

ஜார்கண்ட், மேற்கு வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களை சேர்ந்த கூட்டுப் பாதுகாப்பு படையினர் 400 பேர், 3 மாநில எல்லைகளில் உள்ள சாய்பாசா மலைப்பகுதியில், அதிரடியாக நக்ஸலைட் வேட்டையில் ஈடுபட்டனர். நடுக்காட்டில், நக்ஸலைட் முகாம் ஒன்றை பொலிஸ் படையினர் சுற்றி வளைத்தனர். அப்போது அங்கிருந்த நக்ஸலைட் ஏரியா கொமாண்டர் பாண்டு மஜ்கி உட்பட 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

அங்கு 200 பேருக்குத் தேவையான உணவு சமைத்து வைக்கப்பட்டிருந்தது.

## இந்தியச் செய்திகள்

# நடிகையோடு இணைத்து ஆபாசப்படம்; என் புகழைக் கெடுக்கத் திட்டமிட்ட சதி

## மீண்டும் வீடியோவில் தோன்றி நித்தியானந்தா பேட்டி

சென்னை, மார்ச். 13

நடிகையோடு இணைத்து ஆபாச படங்கள் வெளியிடப்பட்ட சம்பவம் எனது புகழைக் கெடுக்க நடத்திய திட்டமிட்ட சதியாகும் - என்று நித்தியானந்தா சாமி யார் 2 ஆவது முறையாக வீடியோவில் தோன்றி பரபரப்புப் பேட்டி கொடுத்துள்ளார்.

அந்தப் பேட்டியில் கேள்வி, பதிலாக அவர் ஆங்கிலத்தில் விளக்கம் அளித்தார். அதன் விவரம் வருமாறு: -

என்னைப் பற்றியும், தியான பீடம் பற்றியும் சில குறிப்பிட்ட தொலைக்காட்சிகளும், சில பத்திரிகைகளும் வதந்தியைப் பரப்பி அவதூறுகளைக் கிளப்பிவிட்டுள்ளன. இதன்மூலம் தியான பீடம் பற்றி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டமிட்டு இவ்வாறு அவதூறுத் தகவல்களை வெளியிடுகிறார்கள்.

எனக்கு எதிராக ஒரு சதி வலை பின்னப்பட்டுள்ளது. மிகப்பெரிய அளவில் திட்டம் தீட்டி செயற்படுகிறார்கள். தியான பீடம் பற்றி பல்வேறு கதைகளையெல்லாம் சொல்கிறார்கள். நான் ஏமாற்றி சொத்து சேர்த்தேன் எனவும் தவறான தகவல்களை பரப்பிவிட்டுள்ளனர். நான் யாரையும் ஏமாற்றிச் சொத்து சேர்க்கவில்லை. தியான பீடங்கள் உள்ள நிலங்கள் யாரிடமிருந்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவை அல்ல. இதை என்னால் ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியும்.

நான் எங்கும் ஓடி ஒளியவில்லை. எந்த ரகசிய இடத்திலும் பதுங்கி இருக்கவில்லை. எனக்குரிய ஆன்மிகக் கடமைகளை நான் தவறாமல் செய்து கொண்டிருக்கிறேன். உரிய நேரத்தில் வந்து எனது புகழைக் கெடுக்க சிலர் செய்த திட்டமிட்ட சதியை அம்பலப்படுத்துவேன்.

# பாகிஸ்தான் லாகூர் நகரில் நேற்று இரு வேறு தற்கொலைத் தாக்குதல்கள்

## 47 பேர் உயிரிழப்பு; 38 பேர் காயம்

லாகூர், மார்ச் 13

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரட்டைத் தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 47 பேர் பலியாயினர். 38 பேர் வரை காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான கட்டத்திலிருக்கின்றனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஒரு குண்டுத் தாக்குதல் மக்கள் நடமாட்ட மிகுந்த சந்தைப் பகுதியில் நடைபெற்றது. மற்றொரு குண்டுத் தாக்குதல் மக் கள் குடியிருப்புப் பகுதியில் இடம் பெற்றது. இந்தத் தாக்குதல்கள் இராணுவ வாகனங்களை இலக்கு வைத்தே நடத்தப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இந்த இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும், 15 முதல் 20 விநாடிகளுக்கிடையில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. அண்மித்துக்கொண்டிருந்த இராணுவ வாகனங்களை இலக்கு வைத்து, மோட்டார் சைக்கிள்களில் வந்த தற்கொலைக் குண்டுதாரிகள் இத்தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள் என பஞ்சாப் மாகாண சட்டத்துறை அமைச்சர் ரணா சனவுல்ல, நிருபர் களுக்குத் தெரிவித்தார்.

இரு தற்கொலைக் குண்டுதாரிகளும் தத் தம் மோட்டார் சைக்கிளை இராணுவ வாக னங்களுடன் மோதியவாறே குண்டுகளை வெடிக்க வைத்துள்ளனர். இந்தப் பிராந்தியத்தில் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் அவர் கூறினார்.

முதல் குண்டுத் தாக்குதல், இராணுவ முகாம்களும், பாதுகாப்பு நிறுவனங்களும் இயங்கும் ராபஜாருக்கருகில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இரண்டாவது குண்டுத் தாக்குதல் சத்ர் சந்தி சதுக்கத்துக்கருகில் நடத்தப்பட்டுள்ளது என பாதுகாப்பு வட்டாரம் விவரித்தது.

## சுபாஷ் கோட்டுக்கு அறிவியல் விருது

அமெரிக்க வாழ் இந்தியர் சுபாஷ் கோட்டுக்கு அமெரிக்காவின் தேசிய அறிவியல் மையம் (என்.எஸ்.எவ்.) அறிவியல் விருது வழங்கியுள்ளது.

வாஷிங்ரனில் உள்ள தேசிய அறிவியல் மையம் ஆண்டுதோறும் 36 வயதுக்குட்பட்ட சிறந்த ஆராய்ச்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து எலன் டிவோட்டர்மேன் விருது வழங்கி வருகிறது.

2010 ஆம் ஆண்டுக்கான விருது கவுரண்ட் கணித அறிவியல் மையத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வரும் அமெரிக்கவாழ் இந்தியரான சுபாஷ் கோட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 6 கோடியே 75 லட்சம் பரிசுத்தொகையும் வழங்கப்பட் டுள்ளது.

இந்தத் தொகை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு சுபாஷ் கோட் தீவிர ஆராய்ச்சியினை மேற்கொள்ள வழங்கப்பட் டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் 'நாசா' குறித்த கொள்கைக்கு எதிர்ப்பு

வாஷிங்ரன், மார்ச் 13

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின், 'நாசா' தொடர்பான புதிய கொள்கையால், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த புளோ ரிடாவில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மேலும், இதனால் வேலையிழப்பு அபாயம் ஏற்படுமோ என்ற அச்சமும் விஞ்ஞானிகளிடம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பெப்ரவரி முதலாம் திகதி சமர்ப்பித்த பட்ஜெட்டில் 2011 ஆம் ஆண்டிற்காக, 'நாசா'விற்கு மொத்தம் 273 ஆயிரத்து 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டது. இதில், வரும் 2020 ஆம் ஆண்டு, நிலவிற்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை இரத்து செய்யவும் பரிந்துரைக்கப்பட்டது.

அதற்கு மாறாக, வர்த்தக ரீதியிலான விண் வெளி ஓடம் மற்றும் புதிய தொழில்நுட் பங்களின் வளர்ச்சிக்காக ஆண்டுக்கு 86 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என ஐந்தாண்டுகளுக்கு செலவிட திட்டமிடப்பட்டது.

இதுகுறித்து புளோரிடாவைச் சேர்ந்த ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், கடந்த வாரம் ஜனாதிபதி ஒபாமாவிற்கு எழுதிய கடிதத்தில், ''விண்வெளியில் நமது சாதனைகளை புதுப்பித்துக் கொண்டே இருக்கவேண்டும். மேலும் ஊக்குவிக்கவேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால், விண்வெளியில் நமது சாதனைகளுக்கு, தற்போது சவால் விடும் மற்ற நாடுகள் நம்மை வென்றுவிடும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகரித்துவரும் நிதிப்பற்றாக் குறையை தவிர்க்க, ஜனாதிபதி ஒபாமா, இத்தகைய நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார். ஆனால், ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கையால் தங்களுக்கு வேலையிழப்பு ஏற்படுமோ என, புளோரிடாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், தொழில்நுட்பத் திறமையாளர்களும் அஞ்சுகின்றனர்.

ஏனென்றால், 'நாசா'வில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் புளோரிடா வைச் சேர்ந்தவர்கள். மேலும், ஜனாதிபதித் தேர்தலில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாகாணம் புளோரிடா. இங்கு தற்போது ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு கிளம்பி யுள்ளது.




# சீனாவில் எட்டுப் பெண்கள் மணமகன்களைத் தேடி தெருக்கூத்து!

பீஜிங், மார்ச் 13

சீனாவில், எட்டு இளம் பெண்கள், தங்களுக்கேற்ற கணவரைத் தேடி தெருவில், உள்ளாடை மட்டும் அணிந்தபடி ஆடிப் பாடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

தங்களை 'கிரேஸி பியூட்டிஸ்' என்று இவர்கள் வர்ணித்துக்கொண்டனர். அனைவருமே திருமண வயதைத் தாண்டியவர்கள். இருப்பினும், இன்னும் மணமகன் கிடைக்காமல் சிரமப்பட்டு வருகிறவர்கள்.

இதனால் வீட்டிலும் ஏச்சுப்பேச்சு கிளம்பியது. இதையடுத்து ஒரு முடிவெடுத்து எட்டு பேரும் குவோங்ஷோ நகரிலுள்ள ரயில்வே நிலையத்திற்கு வந்தனர். பின்னர் தங்களது உடைகளை படு வேகமாகக் கழற்றிப் போட்டனர்.

என்ன நடக்கிறது என்பது புரியாமல் அனைவரும் திகைத்து நின்றபோது உள்ளா டைகளுடன் தெருவில் இறங்கி ஆடிப் பாட ஆரம்பித்தனர். அங்கு நின்று வேடிக்கை பார்த்த வாலிபர்களை அணுகி தங்களைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா என்றும் கேட்டனர்.

இதுதவிர தங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய தாளையும் அவர்கள் வாலிபர்களின் கைகளில் திணித்தனர். ''எனது அம்மா என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு வலியுறுத்துகிறார்'' என்ற வாசகம் அடங்கிய தட்டியையும் அவர்கள் ஏந்திக்கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் இந்தக் கூத்து நடந்தது. ஆனா லும் ஒரு வாலிபரும் அவர்களை மணம்முடிக்க முன்வரவில்லை. இதையடுத்து, ஏமாற்றத்துடன் உடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து அவர்கள் கிளம்பிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வைத்தியசாலையின் சிறுவர் விடுதி 'பெயர்ஸ்' நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டது

வவுனியா,மார்ச்13

வவுனியா வைத்தியசாலையின் ஆறாம் இலக்க சிறுவர் விடுதி 'பெயர்ஸ்' காக்கும் கரங்கள், நிதியத்தின் உதவியுடன் பூரணமாகப் புனரமைக்கப்பட்டு கடந்த6ஆம்திகதி சனிக்கிழமை பெயர்ஸ் பணிப்பாளர் ரமணி சமர சுந்தரவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இது பெயர்ஸ் காக்கும் கரங்கள் நிதியத்தினால் நிறைவேற்றி வைக் கப்பட்ட தாய்,சேய் நலன்பேணும் 16 ஆவது திட்டமாகும்.

இந்த நிகழ்வில் பணிப்பாளர் ரமணி சம்ரசுந்தர, வவுனியா நகர முதல்வர் எஸ்.நாதன், வைத்திய கலாநிதி கல்யாணி குருகே ஆகியோர் பெயர்ஸ் நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளாக தாய், சேய் நலன்களை மேம்படுத்துவதற்காக ஆற்றிவரும் அரும்பணிகளை பாராட்டிப் பேசினார்கள்.

நிகழ்வின் இறுதியில் விடுதியில் தங்கியிருந்த சிறுவர்களுக்கு பெயர்ஸ் நிறுவனத்தினால் பொதிசெய்யப்பட்ட பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள், வவுனியா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (50-352)

# முதலீட்டுச் சபையின் பணிகள் யாழ்ப்பாணத்தில் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கை முதலீட்டுச் சபை தனது பணிகளை யாழ்.மாவட்டத்திலும் விஸ்தரித்துள்ளதாக முதலீட்டுச் சபையின் யாழ்.அலுவலக சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் அறிவித்துள்ளார்.

மேற்படி சபையின் கிளை அலுவலகம் 'தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்', முதலாம்மாடி, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ளது. விவரங் களுக்கு 0212221336, 0777776606, 0213207371 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் மேற்படி நிறு வனத்தினூடாக முதலீட்டாளர்கள் பல்வேறு வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (50-201)

# அரசாங்க அறிவித்தல்

## நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களை கொள்வனவு செய்வற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

1. சிவப்பு நாட்டரிசி, 2. கோதுமை மா (பிறிமா - கிறீன் பிரான்) , 3. சீனி , 4.பருப்பு

இப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட(Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால கோரப்படுகின்றன. இப் பொருள்களை விற் பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 5,000.00 உம், மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் ' நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிட்டு 19.03.2010 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது பொருள்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருள்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பொருள்களின் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்துடன் தொடர்பு கொண்டு 13.03.2010 முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 19.03.2010 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருள்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

க.கணேஷ்
அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலரும்
யாழ். மாவட்டம்

# தமிழ்த் தேசியக் கூட்ட...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வகையில் இந்திய - இலங்கை உடன்பாட்டை இலங்கை மீறமுடியாது.

அரசின் நீதித்துறையானது பாரபட்சமானதும், அதிகாரத்துவப் போக் குடையதுமான பல்வேறு நடவடிக்கைகளின் அனுபவங்கள் தமிழ் மக்கள் அரசின் நீதித்துறையையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளியிருக்கின்றது.

இந்நாட்டின் நிர்வாகத்துறையின் கொள்கைகள் தமிழ்மக்களை இந்நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வகையில் பெருமளவு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இன்றிருக்கக்கூடிய ஆட்சிமுறை ஒன்றில் மத்திய சட்டவாக்கமைப்பு பெரும்பான்மைத்துவத்தின் மேலாதிக்கத்தின் கீழ் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளது. இது மிகத் தெளிவான ஒரு இன ஒழிப்புத் திட்டமே.

ஆனால் எவரும் இதுவரை இதனைத் தடுத்து நிறுத்த வில்லை. பல ஆண்டுகளாக இந்தியாவும், சர்வதேச சமூக மும் இது தொடர்பாக எழுப்பிய கரிசனைகளை இலங்கை அரசும் ஏனைய நாடுகள் எவையும் தமக்கு அறிவுரை கூறவோ, வழி காட்டவோ முடியாதென நாகரிகமடைந்த தேசங்களைக் கொண்ட சர்வதேச சமூகத்திற்கு பகிரங்க மாகவே பிரகடனம் செய்கிறது. இப்போக்கு தொடருமா னால் திட்டமிட்டபடி அரசின் இன ஒழிப்பு வெற்றி பெறும். இத் தீவில் இருந்து தமிழர் என்ற மக்கள் இல்லாதொழிக்கப்படுவார்கள்.

இப்பொதுத் தேர்தல் முடிந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது. எமது மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையை அரசு மதித்து தமிழ் மக்களின் இறையாண்மையை அங்கீகரிக்கக் கூடிய வகையில் ஆட்சிமுறையை மீளக்கட்டியமைப்பதற்கான பேச்சை எம்முடன் நடத்த வைப்பது முதலாவது கட்டம் கடந்த காலத்தைப்போல அரசு எமது மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையைத் தொடர்ந்து புறக்கணிக்குமானால் இவ்விடயத்தை நாம் நேரடியாக இந்தியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் கொண்டு செல்வோம்.

தமிழ் மக்களுக்கெதிரான இவ்வின ஒழிப்புத் திட்டம் தொடர்பாக உரிய பார்வையைச் செலுத்தி பொருத்த மானதும் தாக்கமானதுமான நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

இன்றைய பாணியிலேயே இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உரிய கௌரவம் வழங்காத ஆட்சி முறையைத் தொடருமானால், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீண்டும் வென்றெடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்முறையற்ற காந்திய வழியிலான சட்ட மறுப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுக்கும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டால்; அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்களில் தமிழ் மக்கள் நேரடியாக தங்களைத் தாங்களே ஆளுகை செய்வதைத் தடுத்தால் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோடு சர்வதேச சமூகம் வேறு தீர்க்கமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோருவதற்கு வழி அமைப்பதாக இருக்கும்.

தமிழ் மக்களுடைய உடனடித் தேவைகளை சந்திப்பதற்கும் எமது அரசியல் இலக்கை அடைவதற்கும், தமிழ் மக்களுக்கிடையிலான ஐக்கியம் மிகவும் முக்கியமானதென்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். நான்கு பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் கூட்டமைப்பாக இருந்தபோதும் கடந்த நாடாளு மன்றத்தில் அது பிளவுபடவோ அல்லது ஓர் உறுப்பினரேனும் வெளியேறாத ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பேயாகும். எனினும் அன்றிலிருந்து தமிழ்பேசும் மக்களின் ஒன்றுபட்ட அரசியல் செல்வாக்கைப் பலவீனப்படுத்த வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கெதிராக பெருமளவிலான சுயேச்சைக் குழுக்களை ஒழுங்கு செய்ததனூடாக கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைய அவசியத் தேவை எமது ஒற்றுமையை பாதுகாத்தலும் வெளிப்படுத் தலுமாகும். எமது மக்களையும் அவர்களின் நிலங்களையும் அழிப்பதற்கு அங்குலம் அங்குலமாக அரசு முன்னேறும் வேகத்தை நிறுத்துவதற்கான முதற்படி இதுவேயாகும். எமக்கிடையேயான ஒற்றுமை யின்மையை வெளிக்காட்டும் நேரம் இதுவல்ல. ஏனைய காலத்தை விட தமிழ், முஸ்லிம் உறவு தற்போது முக்கியமானது என்பதும் உண்மையே. அண்மைக் காலங்களில் தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இத்த கைய ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதுடன் இக் குறிக் கோளை நோக்கி தமிழ் முஸ்லிம் தலைமைகள் ஆக்கபூர்வமாக செயற்படுகின்றனர். இவ்வொற்றுமையை மேலும் உறுதியான தாக்கவும் நிலைநாட்டவும் நாம் ஈடுபாட்டுடன் செயற்படுவோம். வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களைத் திட்டமிட்ட வகையில் விரைவில் மீள்குடியேற்றுவதிலும் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம்.

கௌரவமான மனிதர்கள் என்ற எமது தனித்துவமான அடையாளத்தைப் பேணும் வகையில் எமது மக்களின் வாழ்வு மீள்கட்டியெழுப்பப்படும். நாங்கள் தனி மக்கள் என்ற வகையில் எமது உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே, இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பெயரிலும் வீட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனைவரும் வாக்களிப்பதன் மூலம் துணிச்சலுடன் எழுந்து எமது ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டுமெனத் தமிழ்பேசும் மக்களைக் கோருகின்றோம்.

இரா. சம்பந்தன் - தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மாவை. சோ.சேனாதிராசா - பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழரசுக்கட்சி

பிரசன்னா இந்திரகுமார் - பொதுச் செயலாளர், தமிழீழ விடுதலை இயக்கம்

சுரேஷ் பிரேமச்சந்திரன் - ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# கண்ணீர் அஞ்சலி

யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் ஆசிரியை செல்வி சின்னத்தம்பி மாலினி அவர்களின் தந்தை

## முருகேசு சின்னத்தம்பி

நேற்று (12.03.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும் பத்தினரின் துயரில் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/சன்மார்க்க ம.வி.

(95786)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர்

## செல்வி விஜயநாகேஸ்வரி பாலசுப்பிரமணியம்

அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடையும் பாடசாலைச் சமூகம் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.
யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (95788)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மராஜா உதயகுமாரி (உதயா)



உடுவிலைச் சேர்ந்த திருமதி பத்மீராஜா உதயகுமாரி நேற்று (12.03.2010) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் நடராஜா பத்மராஜாவின் (தேவா) அன்பு மனைவியும் சந்திரகாசன் (அவுஸ்திரேலியா), ஜோன்சன் ஆகியோரின் பாசமிகு தாயும் சுஜாதாவின் (அவுஸ்திரேலியா) அன்பு மாமியும் டிலானி, ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பாலசிங்கம், மனோன்மணி, தியாகராஜா, நடராஜா, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, லோகேஸ்வரி, விவேகானந்தன், புவனேஸ்வரி, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராஜா - ராஜலக்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் லிங்கேஸ்வரி, காலஞ்சென்ற கமலேஸ்வரி, காலஞ்சென்ற பத்மதேவா (அன்பான இயேசு பாடகர்), சிவனேஸ்வரி, சந்திரேஸ்வரி, பத்மசூரியா, பத்மசேகரா, பத்மசீலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.03.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயோன் சேமாக்காலை, மல்வம், உடுவிலில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி, உடுவில், (சிவஞானப்பிள்ளையார் கோயில் அருகில்).*

தகவல்:
பத்மராஜா (தேவா -கணவர்),
ஜோன்சன் (மகன்).

(95858)




தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் மற்றும் டிப்ளோமா நிலைகளுக்கான கற்கைநெறிகள்

GAA

மாணவர்கள் தெரிவு செய்யும் பாடநெறியின் கட்டணத்தில் 50% கட்டணத்தை மகேஸ்வரி நிதியம் செலுத்த முன் வந்துள்ளது. என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இச் சலுகை 28-3-2010 வரை மட்டுமே..!

- Diploma In Microsoft Office 2007
- Diploma In Desktop Publishing
- Diploma In Web Design
- Diploma In Computer Applications
- Ad.Diploma In Digital Pre Press
- Ad.Diploma In Video Editing

100% Practical

Student Visa, மற்றும் உள்நாட்டு,வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற சான்றிதழ்.

Global Academy of Automations

#5, First Floor, New Market Building, Jaffna.

Tel : 011-3050111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க காந்திய வழியில் மீண்டும் போராடுவோம்!

## மாவை சேனாதிராஜா சூளுரை

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உரிய கௌரவம் வழங்காத இந்த ஆட்சி முறையைத் தொடருமானால், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீண்டும் வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்முறையற்ற காந்தி வழியிலான அகிம்சை வழிப்போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு வைபவத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

மீளக்குடியமர்வு எனக் கூறி இந்த அரசு மோசடி செய்து ஏமாற்றி வருகிறது. உயர் பாதுகாப்பு வலயம் இருக்கும்வரை மீள் குடியமர்வு நடவடிக்கை என்பது சாத்தியமற்றதாகும்.

எமது பகுதியில் 45 வீதத்திலும் அதிகமானவை உயர்பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டிருக்கிறன. அது மட்டுமன்றி மக்கள் குடியிருப்புகள் உடைமைகள் மற்றும் பொதுச் சொத்துகளும் அழிக்கப்பட்டிருகின்றன.

இந்நிலையில் மீளக் குடியேற்றம் என்பது மீள இடமாற்றமாகவே இருக்கும். குடியிருப்புகள், வாழ்வாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாதவரை அது எப்படி மீள் குடியேற்றமாகும்?

தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரித்துள்ளது. மாநாடு ஒன்றை விரைவில் நடத்தி அதில் மக்களுக்கு தெரியப்படுத்தவிருக்கிறோம்.

இந்த பொதுத்தேர்தல் முடிந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. எமது மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையை அரசு மதித்து தமிழ் மக்களின் இறையாண்மையை அங்கீகரிக்கக் கூடிய வகையில் ஆட்சிமுறையை மீளக் கட்டியமைப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும்.

ஒஸ்லோ, டோக்கியோ பிரகடன உடன்பாட்டின் அடியாகவே அந்தப் பேச்சுக்கள் அமையவேண்டும். ஒஸ்லோ உடன்பாட்டை 51 நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமே.

**கூட்டமைப்பின் பலத்தைச் சிதைக்கவே சுயேச்சைக் குழுக்கள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையையும் பலத்தையும் சிதைப்பதை நோக்கமாக கொண்டே திட்டமிட்ட முறையில் சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமென்றி, தலைமைப் பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தாமாக விலகிச் சென்றுள்ளனர். அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியை விட்டு விலக்கவில்லை.

எனவே, எமது மக்கள் இந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு வேட்பாளர்களை தெரிவு செய்வார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது - என்றார்

**சுரேஷ் பிரேச்சந்திரன்**

இதேவேளை, அங்கு உரையாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியவை வருமாறு -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அடிப்படைக் கொள்கைகளை என்றைக்கும் விட்டுக்கொடுக்கவில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு நீதியான - நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக சுயநிர்ணய ரீதியிலான தீர்வையே முதன்மைப்படுத்தி வருகிறது. தனது அடிப்படை கொள்கையிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு விலகிவிட்டது என சிலரால் விமர்சிக்கப்படுகிறது. அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களாகவிருந்த கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன்,போன்றோர் தலைமைப் பதவிக்கு விரும்பியே அவர்கள் தாமாகவே கட்சியிலிருந்து விலகினரே தவிர அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலக்கவில்லை.

நடைபெற்று முடிந்த போருக்குப் பின்னரும் தமிழ் மக்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமைகள் தொடர்கின்றன.

கிளிநொச்சிப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தேர்தல் பணிகளை செய்ய முடியாதளவில் கெடுபிடிகள் இருந்து வருகின்றன. அரசு சார்ந்த வேட்பாளர் எவ்வித அனுமதியுமின்றி சுதந்திரமாக நடமாட முடிகிறது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதியில் தேர்தல் முன்னாயத்தங்களில் ஈடுபட, மக்களைச் சந்திக்க இராணுவத்தின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சுதந்திரமாக நடமாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் - என்றார்.

**விநாயகமூர்த்தி**

அங்கு அப்பாத்துரை விநாயகமூர்த்தி உரையாற்றும்போது கூறியவை வருமாறு -

தமிழ் மக்களதும் தமிழ் தே[illegible] கூட்டமைப்பினதும் ஒற்றுமை, புரிந்துணர்வு சீர்குலைக்கப்படக் கூடாது என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக நான் போட்டியிட நிர்பந்திக்கப்பட்டேன்.

தமிழ் மக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் எந்தச் சக்தியும் பிரித்து விடமுடியாது. அது என்றைக்குமே பலம் பொருந்தியதாகவே இருக்கும்.

இலங்கையில் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் அனுமதியுடன் இலங்கைக்கு மீளவும் வந்துள்ள கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விருப்புகளை - இலக்குகளை நிறைவேற்றுபவர்களாகவே இருக்கின்றனர்.

சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வுத்திட்டத்தை முதன்மைப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது கொள்கைப் பிரகடனத்தை அன்றிலிருந்து முன்வைத்து வருகிறது. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விருப்புகளை நிறைவேற்றத் துடிக்கும் கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தமிழ்க் கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கையிலிருந்து மீறிவிட்டது எனக் கூறும் குற்றச்சாட்டுக்கள் எந்த விதத்திலும் உண்மையற்றவை - என்றார்.

(அ-14-111)

# இலங்கை அரசின் செயற்பாட்டாலேயே ஐ.நா. தலையிடும் நிலைமை ஏற்படுகிறது

## விசனத்துடன் சுட்டிக்காட்டுகிறது ஜே.வி.பி.



கொழும்பு, மார்ச் 13

இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி ஐ.நா. சபையோ அல்லது அதன் உறுப்பு நாடுகளோ இலங்கை விவகாரத்தில் தலையிடுவதை எவராலும் தடுக்க முடியாது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவே இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கு நாம் எந்த நாடுகளையும் அனுமதிக்க முடியாது. ஆனால், இலங்கை அரசு அந்நாடுகள் தலையிடுவதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இலங்கை நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தெரிவித்துள்ளார். அதற்கு ஜனாதிபதி எதிர்ப்பையும் தெரிவித்துள்ளார்.

பான் கீ - மூன் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் அரசின் செயற்பாடுதான்.

யுத்தம் முடிந்ததன் பின்னர் ஐ.நா. சபைக்கும் இலங்கைக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது. எதிர்க்கட்சி எம்.பிக்கள் மீது அடக்கு முறையைப் பயன்படுத்தாதிருத்தல், தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புதல், அகதிகளைத் துரிதகதியில் மீள்குடியமர்த்தி அவர்களை நன்கு பராமரித்தல் மற்றும் மனித உரிமைகளைக் காப்பாற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுதல் போன்றவிடயங்கள் தொடர்பிலேயே இலங்கைக்கும், ஐ.நா. சபைக்குமிடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

**ஒப்பந்தத்தை மீறினால் தலையிடுவது இயல்பு**

இந்த ஒப்பந்தத்தில் இணங்கப்பட்ட விடயங்கள் எவற்றையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை. அவற்றை முற்றாக மீறியது. இரு தரப்பினரிடையே ஏதேனும் ஒரு விடயத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டால், அந்த ஒப்பந்தத்தை ஒரு தரப்பினர் மீறினால், மறுதரப்பினர் அதில் தலையிடுவது இயல்பு. அதுதான் இங்கேயும் நடக்கின்றது.

இலங்கையில் மனித உரிமைகளைக் காப்பாற்றுவோம் என்று சொல்லி ஒப்பந்தம் செய்துவிட்டு அந்த ஒப்பந்தத்தை அரசு முழுமையாக மீறி வருகின்றது.

சரத் பொன்சேகாவை எதுவித நியாயமான குற்றச்சாட்டுகளும் இல்லாமல் அரசு கைதுசெய்தது. ஊடகங்களை அடக்கி ஒடுக்குகின்றது. இவ்வாறான மனித உரிமை மீறல்கள் பல இடம்பெற்று வருகின்றன. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு எப்படி ஐ.நா. சபையால் மௌனமாக இருக்க முடியும்?

இலங்கை நிலைமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காகவே குழு அமைக்கப்படவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் சொன்னார். விசாரணை நடத்துவதற்கு என்று அவர் சொல்லவில்லை. ஆனால், ஐ.நா. செயலாளர் நாயகம் விசாரணை நடத்த வேண்டும் எனச் சொல்கிறார் எனக் கூறி சிங்கள மக்களிடையே அரசு பொய்ப்பிரசாரங்களைப் பரப்பி வருகின்றது.

அரசில் உள்ளவர்கள் சிலர் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். அவர்கள் அலரிமாளிகைக்கு முன்பாகத் தான் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும். - என்றார்.

(அ-சி)

# நாட்டில் இருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட ஊடகவியலாளர்களை திரும்பிவர அரசு அழைப்பு

கொழும்பு, மார்ச் 13

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட ஊடகவியலாளர்களை திரும்பி வருமாறு அரசு அழைத்துள்ளது. அவர்கள் நாடு திரும்பும் பட்சத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனசட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த ஊடகவியலாளர்களின் சேவை தற்போது அரசுக்குத் தேவைப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

தற்போது அரசின் பல்வேறு பணிகளை முன்னெடுக்கவும், அவற்றை விஸ்தரிக்கவும், நாடு கடத்தப்பட்ட மற்றும் நாட்டிலிருந்து வெளியேறிய ஊடகவியலாளர்கள் மீண்டும் நாடு திரும்பி, தம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அவர்கள் வெளிநாடுகளில் இருந்தால், அரசுக்கு எதிராகவே செயற்படுவார் கள், எனவே, அதனால் எந்தப்பயனும் கிடைக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே ஊடகவியலாளர்களை மீண்டும் அரசு நாட்டுக்கு அழைக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஊடகவியலாளர்கள் விடயத்தில் இலங்கை அரசு மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என அமெரிக்க அரசு அழுத்தம் கொடுத்தமையாலேயே இம்முடிவை அரசு எடுத்துள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

# பிரதம நீதியரசர் யாழ்.வருகின்றார்

யாழ்ப்பாணம்.மார்ச் 13

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா இருநாள் விஜயம் மேற்கொண்டு எதிர் வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

அன்றைய தினம் யாழ்.நீதிமன்ற சட்டத்தரணிகள் மண்டபத்தில் சட்டத்தரணி அமரர் எஸ்.கனகரத்தினத்தின் உருவப் படத்தை பிரதம நீதியரசர் திறந்து வைப்பார்.

மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றதுக்கான கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டுவார்.

(ஒ-1-207)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்துவ அட்டைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

நல்லூர் பிரதேச பிரிவுக்குட்பட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்க அங்கத்துவ அட்டைகளில் ஒரு தொகுதி தமக்குக் கிடைத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் செ.சந்திசேகரன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் புதிதாக அங்கத்தவர்கள் இணைந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-6)

# மகளிர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்.மார்ச் 13

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ்.பல்கலைக்கழக சட்டமாணவர் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கும், திறந்த பிரிவாகவும் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், 'இலங்கையில் பெண்களின் சமூகநிலை', 'பெண்களின் சமத்துவம்', 'போருக்குப்பின்னரான அபிவிருத்தியில் பெண்கள்' எனும் தலைப்புகளில் ஒன்றுக்கு 1500 சொற்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

திறந்த பிரிவினருக்கான போட்டியில் எவரும் பங்குபற்ற முடியும். 'பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான தேசிய, சர்வதேச சட்டங்களில் புதிய அணுமுறைகளின் அவசியம்', 'தேசத்தை கட்டியெழுப்புவதிலும், அபிவிருத்தியிலும் பெண்களின் பங்களிப்பு' எனும் தலைப்புகளில் 3000 சொற்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்துடன் தமது விவரங்களை தனியாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான முடிவுதிகதி எதிர்வரும் மே முதலாம் திகதியாகும். கட்டுரைகளை 'சட்டமாணவர் சங்கம், சட்டத்துறை, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீநகர சபை, யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA
X
இலங்கைத் தமிழரசுக் கட்சி



6
உதயன் தொழிலதிபர்
நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன்

## தேர்தல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கு மாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தாம் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 37 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றுவதற்காகப் பொலிஸ் பிரிவில் மட்டும் ஆயிரத்து 320 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ-சி)

## பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது கணவர் பெப்ரவரி 8ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டார் என்றும், அவர் சட்டரீதியான வகையில் கைது செய்யப்படவில்லை என்றும் அனோமா பொன்சேகா தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

அவர் இதுவரை சட்டரீதியான எந்த நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படவில்லை. நாட்டின் சட்டத்துக்குப் புறம்பாக அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். ஆகவே அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு, இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டு, அவர் தொடர்பில் சட்டத்தை நிலைநிறுத்தும்படி பணிப்புரை வழங்குங்கள் - என்று அனோமா பொன்சேகா இந்த மனுவில் கோரியுள்ளார்.

இராணுவத் தளபதி உட்பட ஏழுபேர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-சி)

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தேர்தலுக்கான தபால் வாக்குச் சீட்டு களையும், வாக்காளர் அட்டைகளையும் பாதுகாப்பாக விநியோகிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

வடபகுதியில் அகதி முகாம்களிலுள்ள மக்களுக்கும் மற்றும் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கும் வாக் காளர் அட்டைகள் விநியோகிப்பது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தபால் மா அதிபர் எம்.கே.பி.திஸாநாயக்க கூறினார்.

தபால் வாக்குச் சீட்டுகள் அடங்கிய - முத்திரையிடப்பட்ட - பொதிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி தபால் திணைக்களத்திற்கு கிடைக்கவுள்ளன என்றும் தபால் மா அதிபர் மேலும் கூறினார். (அ-சி)

## இணைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழிடம், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் ஆகிய திம்புக் கோட்பாட்டின் பிரதான மூன்று அம்சங்களும் கூட அந்தத் தேர்தல் விஞ் ஞாபனத்தில் வற்புறுத்தப்பட்டிருந்தன.

நேற்று யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், அதன் யாழ். மாவட்டத் தலைமை வேட்பாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதில் யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் பன்னிரு வேட்பாளர்களில் பதினொரு பேர் பங்குபற்றினர்.

**(இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முழு விவரமும் 6ஆம், 19ஆம் 22ஆம் பக்கங்களில்)**

## பயங்கரவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்றுக் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் உருவான பயங்கரவாதப் பிரச்சினை காரணமாக இந்த நாடு பாரிய அழிவுகளைச் சந்தித்தது. அதிக எண்ணிக்கையிலான உயிர்ச் சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட்டன.

சுமார் 30 வருடங்களாக இந்தப் பயங்கரவாதம் எமது நாட்டை ஆட்டிப்படைத்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது அந்தப் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார்.

இருப்பினும், இனிமேலும் அந்தப் பிரச்சினை தோன்றாதிருப்பதற்கான நடவடிக் கைகளை நாம் எடுக்க வேண்டும். இனங்களிடையே நல்லுறவையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவது எமது கடமை.

பயங்கரவாதம் உருவானதற்கான காரணம் என்ன, இனிமேல் அது உருவாகாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் - என்பவை தொடர்பாக ஆராய்ந்து சிபாரிசுகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட குழுவொன்றை நியமிக்கத் திட்டமிட்டுள்ளார். மிக விரை வில் இக் குழு நியமிக்கப்படும் - என்றார். (அ-சி)

## கீரிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்சேவைகள் நடத்தப்படவுள்ளன.

தெல்லிப்பழை, சேந்தாங்குளம் ஆகிய பாதைகள் ஊடாக நேரடியாக கீரிமலைக்கு பஸ் சேவைகள் நடத்தப்படும்.

காலை 6.30 மணி முதல் மூன்று டிப் போக்களில் இருந்தும் அடிக்கடி பஸ் சேவைகள் கீரிமலைக்கு நடத்தப்படும் என்று போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (ஒ-1)

## இங்குள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, தமிழி னத்துடன் நல்லிணக்கப் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான பணியை முன்னெடுக்கும்படி இலங்கையைக் கோரியுள்ள கனடா, இடம்பெயர்ந்த தமிழர்களின் மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தும்படியும் வற்புறுத்தியிருக்கின்றது.

கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரவை ஒட்டாவில் நேரில் சந்தித்துப் பேசிய கனடாவின் வெளி விவகார நாடாளுமன்றச் செயலாளர் தீபக் ஒபரோய் இந்த விடயங்களை அப்போது தெரிவித்தார் என 'இந்தோ - ஏஸியன்' செய்திச் சேவை தெரிவித்தது.

''முப்பது வருட யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படுவதற்கு நல்லிணக்கம் மிக முக்கியமானதா கும். நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் திசை யில் நகர்வதற்கு இலங்கை அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கின்றது என்பதைக் கனடா பார்த்திருக்கிறது.'' - என மேற்படி சந்திப்பின் பின்னர் ஒபரோய் கூறினார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஒரு லட்சத்து அறுபதாயிரம் அகதிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியமையைக் கனடா வரவேற்கின்றது. எனினும், இன்றும் இடம்பெயர்ந்த நிலையில் இருக்கும் சுமார் ஒரு லட்சம் மக்கள் தங்கள் இடங்களுக்குப் பாதுகாப்பாகத் திரும்பி மீள்குடியமர்வதை இலங்கை விரைவுபடுத்த வேண்டியிருக்கின்றது - என்றார் அவர்.

கடந்த வருடம் யுத்தம் முடிவுற்ற கையோடு ஒபராய் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அகதிகளின் முகாம்களுக்கும், மீள் குடியமர்வுப் பிரதேசங்களுக்கும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும், ஊடகங்களும் தங்கு தடையின்றிச் சென்றுவர அனுமதிக்கும்படியும், மனிதநேய அமைப்புகள் மற்றும் உதவி வழங்கும் தரப்புகள் இடையே கூட்டுறவுச் செயற்பாட்டை முன்னெடுக்கும்படியும் அவர் வலியுறுத்தியிருந்தார் என்றும் 'இந்தோ ஏஸியன்' செய்திச் சேவை தெரிவித்தது. (அ-சி)

## தனுன் கடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவியுடன் இந்தியாவிற்கு தப்பிச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார் எனக் கடற் படைக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்தே இந்தக் கப்பல் முற்றுகையிடப் பட்டுள்ளது எனத் இணையத்தளத் தக வல்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், குறித்த இந்தியக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பின் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

தங்கால கடற்படைப் பிரிவினர் குறித்த இந்தியக் கப்பலை உடப்புப் பிரதேசத்திற்கு அருகிலுள்ள ஆழ்கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோதே முற்றுகையிட்டுள்ளனர். இதன் பின்னர் கொழும்பு துறைமுகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட கப்பல் கடற்படையினரால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அதிலிருந்தவர்கள் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### இலங்கை - இந்திய உறவில் பாதிப்பை ஏற்படுத்துமா?

துறைமுகக் பொலிஸார் நேற்றுமுன்தினம் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதுடன் கப்பலின் கப்டன் உள்ளிட்ட அதன் பணியாளர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்துள்ளனர் எனக் கூறப்பட்டுகிறது.

எவ்வாறாயினும், இந்தக் கப்பல் இந்திய வர்த்தக நிறுவனமொன்றுக்குச் சொந்தமானது எனவும், இதனால் அதனை விடுவிக்குமாறு இந்திய அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையில் இலங்கை அரசு வழக்கு தாக்கல் செய்தமை தொடர்பில் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது எனவும் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தை அடுத்து இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் அனைத்து இலங்கைக் கப்பல்களுக்கு எதிராகவும் சட் டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு இந்திய கடலோரப் பாதுகாப்புப் படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக் கப்படுகிறது.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை, இல. 234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

தரம் 1 தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரையான அனைத்து நூல்களும், நுலகங்களுக்கும் வாசிகசாலைகளுக்கும் தேவையான அனைத்து வகையான பயிற்சி நூல்கள், வினாவிடைகள், இந்திய வெளியீடுகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிடவும், வசதியாக பார்த்து எடுப்பதற்கு ஏற்ற விசாலமான இடவசதியும் கொண்ட ஒரே நிறுவனம். புத்தகங்களை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் கழிவு உண்டு. வியாபாரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் விசேட விலைக்கழிவு உண்டு. (C/565656)

**சொகுசு கார் சேவை**



திருமண சேவை மற்றும்
0776156034
முற்றிலும் குளிரூட்டப்பட்ட (Full A/C) சொகுசு கார் சேவை.

**விற்பனையாகின்றது**

மாணவர்களுக்கோர் நற்செய்தி.
இலங்கையின் பிரபல கணித ஆசிரியரும், ஆசிரிய ஆலோசகருமான திரு.எஸ்.நஸீர் அவர்களின் தரம் 6முதல் 11 வரையான கணிதப் பயிற்சி புத்தகங்கள் தமிழ் மீடியம், English Medium புத்தகங்களை யாழ்.நகரில்- அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம். நெல்லியடியில்- சிதம்பரப்பிள்ளை போத்தகசாலை, நெல்லியடி. சுன்னாகம்-துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம் ஆகிய இடங்களில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.
எஸ்.நஸீர், ஆசிரிய ஆலோசகர்-கணிதம். SLTS-1

**A/L கணக்கியல்**
பிரத்தியேக வகுப்புகள்
தனி/குழுவாக கற்க விரும்புபவர்களுக்கு உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.
10வருட அனுபவமுள்ள ஆசிரியர்
T. சுதர்சன் BBA
தொடர்புகளுக்கு:
0770708598, 02149075...
இல. 880/4, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி.
(36778)

**SM CONSULTANT SERVICE**

UK STUDENT VISA

2009ம் ஆண்டு ... லண்டன் Student Visa ... அறியத்தருகின்றோம்.



❖ போலந்து (POLAND) நாட்டிற்கு வேலை வாய்ப்புடன் கல்வி பயிலக்கூடிய ஒழுங்குகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது என்பதனை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம். விபரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

அனைத்து விபரங்களுக்கும் தினமும் ஞாயிறு உட்பட காலை 8.00 மணிமுதல் மாலை 7.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

021 222 3818
021 567 3818
077 452 8818
தொடர்புகளுக்கு:
இல: 148, கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

**+ KOHILA MEDI CLINIC**
**கோகிலா மெடிக் கிளினிக்**
134, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (புங்கன்குளவீதி சந்தி அருகில்)



யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சிகிச்சையில்...

- ◆பொது வைத்தியம்
- ◆குழந்தை வைத்தியம்
- ◆பெண்நோயியல் வைத்தியம்
- ◆தோல் வைத்தியம்

பிற சேவைகள்
- ☐சகலவிதமான இரத்த, சல பரிசோதனைகள்
- ☐ECG, Scan (ஸ்கான்) வசதிகள்
- ☐சலரோக நோயாளிகளுக்கான கிளினிக் வசதிகள்

மற்றும் வயோதிபர்களிற்கான உடல்நல பராமரிப்புத் திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.